Government of Karnataka

# செம்மொழித் தமிழ்

# CHEMMOZHI THAMIZH

## முதல் மொழி

## FIRST LANGUAGE TAMIL

# 6

## ஆம் வகுப்பு

## STANDARD

## முதற்பருவம், இரண்டாம் பருவம்

**(Revised)**

©KTBS Not to be republished

**Karnataka Text Book Society (R)**
100 feet Ring Road, Banashankari 3rd Stage,
Bengaluru - 560 085.

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed based on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages, seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the Environmetal Science and Languages, 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

**NCF- 2005 has a number of special features and they are :**

- Connecting knowledge to life activities
- Learning to shift from rote methods
- Enriching the curriculum beyond textbooks
- Learning experiences for the construction of knowledge
- Making examinations flexible and integrating them with classroom experiences
- Caring concerns within the democratic policy of the country
- Make education relevant to the present and future needs.
- Softening the subject boundaries, integrated knowledge and the joy of learning.
- The child is the constructor of knowledge.

The New books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach.

The Learner is encouraged to think, engage in activities, masters skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the total development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

© KTBS
Not to be re published

Language textbooks are designed to help learners master communicative competencies, excellent comprehension, meaningful expression and efficient reference skills.

English is studied by most students as the second language. Teachers have to keep in mind the three fundamental approaches based on which the readers have been designed and adapt their teaching methods and help learners master language skills and competencies and help them become excellent users of English.

Schools in Karnataka offer seven languages as media of instruction and eight as first languages and ten languages are offered as third language. The objective is to help the learners to use these languages efficiently at the communicative level. It is hoped that at least a cross section of learners achieve competencies to use these languages at the creative level.

Teachers are expected to adapt their teaching methods not to make these textbooks just feed materials for examinations, but help learners master language competencies such as communication, comprehension, expression in writing and necessary reference skills.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and Printers in helping the Text Book Society in producing these textbooks.

**G.S. Mudambadithaya**
Co-ordinator
Curriculum Revision and
Textbook Preparation
Karnataka Textbook Society (R)
Bengaluru, Karnataka.

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society (R)
Bengaluru, Karnataka.

©KTBS Not to be re published

# முன்னுரை

ஒருவர் தம் என்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்த மொழி என்னும் ஊடகம் மிகவும் இன்றியமையாதது. குழந்தை முதன் முதலில் தாயின் வழியாகவும் பின்னர் சமூகத்தின் வழியாகவும் மொழி அறிவைப்பெற்று, மொழியை உயிர்ப் போடு வெளியிடத் தொடங்குகிறது. மொழி ஒரு வலுவான ஊடகமாகும்.

தற்போதைய பாடத்திட்டம் அமைக்கும்போது மாநிலப் பாடத்திட்டங்கள் 2001-02 மற்றும் என்.சி.எப்-2005 இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பாடத்திட்டம் மேன்மைப் படுத்தப்பட்டுள்ளது. அடிப்படையில் குறைந்த கற்றல் அளவுடன் கூடிய திறன்கள் என்சிஎப்-2005 பாடத்திட்டத்தினை ஒப்பிட்டு உள்ளுரை செம்மைப் படுத்தப்பட்டுள்ளன. பாடத்திட்டம் குழந்தையின் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றின் அடிப்டையில் செயல்திறன் மற்றும் தொடர்புப் பணி போன்றவற்றை உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுமாறு பாடப் பொருள் அமைக்கப்பட்டுள்ளது. தேசியக் கல்வித் திட்டம் 1986 இல் குறிப்பிட்டுள்ளபடி குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடமும் ஒரு திறனை முன்நிறுத்தி அமைக்கப் பட்டுள்ளது. மொழிப் பாடத்துக்கு ஏற்பத் தனிச் சிறப்பாகப் பல திறன்கள் உள்ளடங்கி உள்ளன. கதைகள், கட்டுரைகள், சுற்றுச் சூழல், நாடகம், நகைச் சுவை, போன்றன குழந்தைகளின் கற்பனைத்திறனை வளர்க்கும் பாடல் பகுதிகளில் அனைத்து பாடல்களுக்கும் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடத்திற்கும், பாடலுக்கும் பின் அருஞ்சொற்பொருள். மொழிப் பயிற்சி, மொழி விளையாட்டு மற்றும் செயல்பாடுகள் வாழ்க்கைத் திறன், விழுமியக்கல்வி முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் மாணவச் செல்வங்களுக்கு பயனளிக்கும் என நம்புகிறோம். ‘‘கற்றல் சுவையாக இருந்தால்தான் கல்வியும் சுவையாக இருக்கும். என்பதைக் கருத்தில் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

©KTBS Not to be republished

பாட நூல் உயரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும் அதனை வகுப்பறையில் செயற்படுத்திக் கற்பிப்போர் ஆசிரியப் பெருமக்களே. இந்நூல் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் நன்குணர்ந்து செயலாற்றுவார்கள் என்று நம்புகிறோம். வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்பும், கற்பிக்கும் திறனும் எங்கள் பணி வெற்றிபெற மிக மிக அவசியம் என நம்புகிறோம்.

ஆறாம் வகுப்பு செம்மொழித்தமிழ் சிறப்பான முறையில் அமைந்திட உதவிய கருநாடக பாடநூல் நிறுவனத்துக்கும் இந்நூல் நன்கு அமைய வழிகாட்டுதல் மற்றும் தங்களுடைய நூல் நிலையத்தை பயன்படுத்திக் கொள்ள உதவிய பெங்களூர் தமிழ்ச்சங்கத்திற்கும் மற்றும் எங்களுடைய ஆக்கங்களை திருத்தி செம்மைப்படுத்தி மேற்பார்வை செய்து, தரமான நூலாக வர உதவி செய்த முனைவர் திரு. நடராஜபிள்ளை, நடுவண் மொழி ஆராய்ச்சி நிறுவனம், மைசூர் அவர்களுக்கும், எங்கள் பாடநூல் குழு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சி. ராமமூர்த்தி**

தலைவர்

©KTBS Not to be re published

# Text Book Committee

***Chairperson :***

1) **C. Ramamoorthy**, BBMP Boys High School, Jogupalya, Bengaluru.

***Members :***

1) **Smt. Nirmala S.**, A.M, G.H.P. School Tamil, Belimutt Road, Bengaluru - 53.
2) **Sarala .V**, Teacher, BBMP Girls Junior College, Jogupalya, Bengaluru - 8.
3) **Bhagyalakshmi .K,** A.M, Govt. Higher Primary School, Jayabharath nagar, M.S. Nagar, Bengaluru - 33.
4) **Kaveri .V,** H.M, G.T.H.P. School, Vishwa Nagar, Bhadravathi Taluk, Shivamogga District. - 577 233.
5) **Beena .K,** GTHP School, M.S. Nagar, Jayabharath Nagar, Bengaluru - 33.
6) **Gagan Kattaya,** No. 333, J.P. Nagar, VIII Phase, II Block, Gottigeri (P.O.) Bengaluru - 83.

***Scrutinizers :***

1) **Dr. Nadaraja Pillai .N,** Central Institute of Indian Languages, Mysuru.

***Chief Co-ordinator :***

**Prof . G.S. Mudambadithaya,** Co-ordinator, Curriculum revision and text book preparation, KTBS, Bengaluru.

***Chief Advisers :***

**Sri Nagendra Kumar,** Managing Director, KTBS, Bengaluru.

**Sri Panduranga,** Deputy Director, (Incharge) KTBS, Bengaluru.

***Programme Co-ordinator :***

**Smt. Chandrakala,**Asst. Director, KTBS, Bengaluru.

Not to be re published ©KTBS

# ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15 ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರಿಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17 ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ

©KTBS Not to be republished

ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

©KTBS Not to be re published

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

**ಹೆಚ್.ಎನ್. ಗೋಪಾಲಕೃಷ್ಣ**
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
ಬೆಂಗಳೂರು–85

**ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ**
ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು–85

©KTBS Not to be re published

# ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

## ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

# ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

## ಅಧ್ಯಕ್ಷರು

ಡಾ. ಸುಧಾಕರ, ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

## ಸದಸ್ಯರು

ಶ್ರೀ. ಆಶೀರ್ವಾದಂ, ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ. ಬಾಬು, SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಅಮುದ, ಉಪನ್ಯಾಸಕರು, ಜೆ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ, ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

# ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

ಡಾ. ಕಾರ್ಲಾಸ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಪ್ರೊ. ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

## ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:

**ಶ್ರೀ ಹೆಚ್.ಎನ್. ಗೋಪಾಲಕೃಷ್ಣ**, ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀ ಎಸ್.ಜಿ. ನಾಗೇಶ್,** ಉಪ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

## ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :

**ಶ್ರೀಮತಿ ಆಶಾರಾಣಿ ಎನ್.,** ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

©KTBS Not to be re published

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து (பாடல்) | | 1 |
| 2. | பீர்பலும் சிறுமியும் | | 4 |
| 3. | திருக்குறள் (பாடல்) | | 15 |
| 4. | விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி | | 21 |
| 5. | மூதுரை (பாடல்) | | 32 |
| 6. | விண்வெளி வீராங்கனை | | 38 |
| 7. | நாட்டுப்புறப்பாடல் (நாட்டு வளம்) (பாடல்) | | 48 |
| 8. | கத்திரிக்காய் குழம்பு (நாடகம்) | | 52 |
| 9. | பாம்பா ? விழுதா ? (பாடல்) | | 66 |
| 10. | செங்காவிச் சிங்கம் - விவேகானந்தர் | | 69 |
| 11. | பாணனும் பாடினியும் (பாடல்) | | 78 |
| | **மனப்பாடப் பகுதி** | | |
| 1. | கடவுள் வாழ்த்து 7 வரிகள் | | |
| 2. | திருக்குறள் | | |
| | ஈகை : வாய்மை | | 15 |
| | இன்னா செய்யாமை | 12 வரிகள் | 16 |
| 3. | மூதுரை : கானமயிலாட | 4 வரிகள் | 32 |
| 4. | பாம்பா விழுதா | 8 வரிகள் | 66 |


©KTBS Not to be republished


## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 12. | நாட்டு வாழ்த்து | (பாடல்) | 83 |
| 13. | கல்வி அழகே அழகு | | 87 |
| 14. | நாலடியார் | (பாடல்) | 97 |
| 15. | திருந்திய உள்ளம் | | 101 |
| 16. | இரட்டுற மொழிதல் | (பாடல்) | 109 |
| 17. | தேசிய விளையாட்டு | (ஹாக்கி) | 113 |
| 18. | கனவு தந்த தீர்ப்பு | (பாடல்) | 121 |
| 19. | பூமி வெப்பம் | | 126 |
| 20. | நறுந்தொகை | (பாடல் | 137 |
| 21. | நண்பனுக்கு ஒரு கடிதம் | | 141 |
| 22. | டைட்டானிக் கப்பல் | | 149 |
| | மனப்பாடப்பகுதி | | |
| 1. | நாட்டு வாழ்த்து | 8 வரிகள் | 83 |
| 2. | நாலடியார் நடுவூருள் வேதிகை | 4 வரிகள் | 87 |
| 3. | இரட்டுற மொழிதல் | 4 வரிகள் | 109 |
| 4. | நறுந்தொகை | 5 வரிகள் | 137 |
| | மொத்தம் | 29 வரிகள் | |


Not to be re published ©KTBS

பாடம் - 1

# கடவுள் வாழ்த்து



''மாநிலம் சேவடி ஆக, தூநீர்
வளை நரல் பௌவம் உடுக்கை ஆக,
விசும்பு மெய் ஆக, திசை கை ஆக,
பசுங்கதிர் மதிய மொடு சுடர் கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்று ; அகத்து அடக்கிய
வேத முதல்வன் - என்ப
தீது அற விளங்கிய திகிரியோனே''

- பெருந்தேவனார்.

**ஆசிரியர் குறிப்பு :** தமிழில் பாரதம் பாடியவர் பெருந்தேவனார். இவர் சங்க காலப்புலவர்களில் ஒருவர், நற்றிணை 175 புலவர்களால் பாடப்பட்டது. அவர்களுள் ஒருவர் பெருந்தேவனார்.

**நூல் குறிப்பு :** இது நற்றிணை பாடல் தொகுப்பிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

**அருஞ்சொற்பொருள் :** மா = பெரிய, வளை = சங்கு, சுடர் = ஞாயிறு ; திகிரி = ஆழி (கடல்), தீது = குற்றம், விசும்பு = மழைத்துளி, தூநீர் = தூய்மையான நீர் ; வேதம் = ஞானம், அறிவு; பௌவம் = கடல்.

©KTBS Not to be republished

**கருத்துரை :** பெருமைப் பொருந்திய உலகைத் தன் பாதங்களாகக் கொண்டுள்ளவன் இறைவன். தூயநீரை உடைய சங்கு ஒலிக்கும் கடலைத் தன் ஆடையாகவும், வானத்தைத் தன் உடலாகவும் கொண்டுள்ளான். திசைகளைத் தன் கைகளாகவும் நிலவு மற்றும் சூரியனைத் தன் கண்களாகவும் கொண்டுள்ளான். வேதங்களால் புகழப்படும் இறைவன் குற்றமற்று விளங்குபவன்.

ஆகவே, எல்லாப் பொருட்களையும் தன்னகத்தே அடக்கிய இயற்கையே கடவுளாகும்.

## பயிற்சி

**I. குறுவினா :**

1) இறைவன் எதனைச் சேவடியாகக் கொண்டுள்ளான் ?
2) வேத முதல்வன் யார் ?
3) இறைவன் எதைத் தன்னாடையாக அணிந்துள்ளான் ?

**II. சிறுவினா :**

1) குற்றமற விளங்கிய இறைவனின் செயல் யாது ?

**III. விரிவான விடையளிக்கவும் :**

1) கடவுள் வாழ்த்துப்பாடலின் கருத்துரையை எழுதுக.

**IV. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) மாநிலம் ............... ஆக
2) வளைநரல் பௌவம் ............... ஆக
3) மதியமொடு சுடர் ............... ஆக.
4) தீது ............... விளங்கிய திகிரியோனே.

©KTBS Not to be re published

# மொழிப் பயிற்சி

**I. சேர்த்தெழுதுக :**

சேே + அடி = | பசுமை + கதிர் =

தூய்மை + நீர் = | அறம் + விளங்கிய =

**II. பிரித்தெழுதுக :**

மாநிலம் = | கையாக =

வேதமுதல்வன் = | தீதற =

கிரியோன் =

**III. ஒத்த ஒலியுடைய சொற்களை எழுதுக.**

திசை ................, ................, ................, ................,

வளை ................, ................, ................, ................,

அற ................, ................, ................, ................,

கதிர் ................, ................, ................, ................,

**பாடிப்பழகுக :**

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான் தொழுந் தெய்வமே.

– தாயுமானவர்.

✻ ✻ ✻ ✻ ✻

Not to be re published ©KTBS

பாடம் - 2

# பீர்பலும் சிறுமியும்



அக்பர் டில்லியின் சக்கரவர்த்தி. பீர்பல் அவரிடம் அமைச்சராக இருந்தார்.


ஒரு நாள் அக்பர், பீர்பலிடம் ஒரு புதிர் போட்டார்.

''மேலே மூடி கீழே மூடி
நடுவே மெழுகுவத்தி எரிந்து அணைகிறது இது என்ன ?''

அரசே ! எனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுங்கள், யோசித்துச் சொல்கிறேன்'' என்றார் பீர்பல்.

மறுநாள் பீர்பல் ஒரு கிராமத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார். அவருக்குத் தாகம் எடுத்தது, தம் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத் தண்ணீர் கேட்பதற்காக, அங்கிருந்த வீட்டிற்குள் நுழைந்தார். அங்குச் சிறுமி ஒருத்தி சமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

©NIE Not to be re published



‘‘அந்தச் சிறுமியைப் பார்த்து, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?’’ என்று கேட்டார் - பீர்பல்.

‘‘குழந்தையைச் சமைத்துக் கொண்டிருக்கிறேன் ; தாயாரை எரிய விட்டுக் கொண்டிருக்கிறேன்’’ என்று அந்தச் சிறுமி கூறினாள்.

‘‘அப்படியா ? உன்தந்தையார் எங்கே’’ என்று அந்தச் சிறுமியிடம் கேட்டார் பீர்பல்.

‘‘என் தந்தையார் மண்ணுடன் மண்ணைச் சேர்ப்பதற்குச் சென்று இருக்கிறார்.’’ என்றாள் அந்தச் சிறுமி.

‘‘உன் தாயார் எங்கே ?’’ என்று பீர்பல் கேட்டபொழுது ‘‘ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாக ஆக்கச் சென்றிருக்கிறார்’’ என்றாள்.

இந்தப் பதில்களைக் கேட்டு பீர்பல் திகைத்துப் போய்விட்டார். இந்தச் சமயத்தில் அந்தச் சிறுமியினுடைய தாய் தந்தையர் அங்கு வந்தனர். அவர்களிடம் பீர்பல் எல்லா விவாதத்தையும் கூறினார். தந்தை ‘‘அவள் சரியாகத்தானே கூறி இருக்கிறாள் ?’’ என்றார்.

©KTBS Not to be republished

‘‘எனக்கு ஒன்றும் புரியவில்லையே ?’’ என்றார் பீர்பல். ‘‘துவரம் பருப்பை வேகவைத்துக் கொண்டு, அதற்காக அடுப்பை எரிப்பதற்குத் துவரஞ்செடியின் காய்ந்த சுள்ளிகளை விறகாகப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறாள். அதனைத்தான் குழந்தையைச் சமைத்துக் கொண்டு தாயாரை எரித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறியுள்ளாள் என்றார் சிறுமியின் தந்தை. ‘‘நீங்கள் மண்ணுடன் மண்ணைச் சேர்க்கச் சென்றதாகக் கூறினாளே’’ என்றார் பீர்பல்.

‘‘என்னுடைய உறவினர் ஒருவர் இறந்து விட்டார், அவருடைய இறுதிச் சடங்கிற்குப் போயிருந்தேன். உயிர் போன பிறகு இந்த உடம்பு மண்ணோடுதானே சேர்ந்து விடுகிறது ! அதைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறாள்’’ என்றார்.

‘‘உங்கள் மனைவி ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாக ஆக்கச் சென்றிருக்கிறாள் என்றாளே’’ என்றார் பீர்பல்.

‘‘பக்கத்து வீட்டில் உளுந்து உடைத்துக்கொடுக்கச் சொன்னார்கள். அங்குச் சென்று உளுந்து உடைத்துக் கொடுத்துவிட்டு வருகிறாள்’’ என்றார். அந்தச் சிறுமியின் தந்தையார்.

இந்தப் பதில்களைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த பீர்பல் ‘‘அக்பர் சக்கரவர்த்தி போட்ட புதிருக்குப் பதில் அளிக்கக் கூடியவர்கள் இவர்களே!’’ என்று கருதினார். அக்பர் சக்கரவர்த்தி கூறியதை நினைவுப் படுத்திக் கொண்டு

‘‘மேலே மூடி கீழே மூடி

நடுவே மெழுகுத்திரி எரிந்து அணைகிறது இது என்ன ? என்று கேட்டார் பீர்பல்.

Not to be re published ©KTBS



இதைக் கேட்ட அந்தச் சிறுமியின் தந்தை ‘‘இரண்டுமூடிகள் என்றால் ஒன்று ஆகாயம், மற்றொன்று பூமி. மெழுகுத்திரி என்பது மனிதன். பூமியில் மனிதன் வாழ்ந்து இறந்து விடுகிறான். இது தான் இந்தப் புதிருக்கு விடை’’ என்று கூறினார்.

இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பீர்பல் தம்மால் இயன்ற பொருள்களைப் பரிசாக அந்தக் குடும்பத்திற்குக் கொடுத்தார். மறுநாள் அரச சபைக்குச் சென்ற பீர்பல், அக்பர் போட்ட புதிருக்கான விடையைக் கூறினார். அதைக் கேட்ட சபையிலிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியப் பட்டனர்.

பீர்பலின் அறிவுத்திறனைப் பாராட்டி அக்பர் சக்கரவர்த்தி பொன்னையும், மணியையும் பரிசாக வழங்கினார். பீர்பல் தாம் அதைப் பெற்றுக் கொள்ளாமல், தமக்கு அந்தப் புதிருக்கு உரிய விளக்கத்தைக் கூறிய குடும்பத்தினரை வரவழைத்தார். ‘‘இவர்களே, அந்த பரிசுக்கு உரியவர்கள்’’ என்று கூறி நடந்த நிகழ்ச்சிகளை விளக்கமாகக் கூறினார். அக்பர் வழங்கிய பரிசை அந்தக் குடும்பத்தினர் பெற வழி செய்தார். பீர்பலின் நேர்மையை வியந்து பாராட்டிய அக்பர் பீர்பலுக்கு சிறப்புப் பரிசு வழங்கினார்.

(பீர்பல் கதைகள் தொகுப்பிலிருந்து)

©KTBS Not to be re published

**அருஞ்சொற்பொருள் :** அவகாசம் = நேரம் ; புதிர் - விடுகதை, இறுதி = கடைசி ; பாட்டு = புகழ்ந்துகூறு, ஆச்சரியப்பட்டு = வியப்படை ; பரிசு = கொடை, சக்கரவர்த்தி = பேரரசன், அரசர்க்கரசன் ; சிறப்பு = மேன்மை ; நேர்மை = ஒழுங்கு

**அ) பாடப் பொருள் பயிற்சி.**

**1) குறுவிடை வினா :**

1) அக்பர் யார் ?

2) பீர்பல் யார் ?

3) பீர்பல் எங்கு சென்று கொண்டிருந்தார் ?

4) வீட்டிற்குள் இருந்தது யார் ?

5) சிறுமி என்ன செய்து கொண்டிருந்தாள் ?

6) மண்ணோடு சேர்வது எது ?

7) மெழுகுத்திரி என்பது எது ?

8) பீர்பல் அக்குடும்பத்தினருக்குக் கொடுத்தது என்ன ?

9) பீர்பலுக்கு அக்பர் என்ன கொடுத்தார் ?

**2) சிறு விடை வினா :**

1) பீர்பலிடம் அக்பர் போட்ட புதிர் யாது?

2) பீர்பல் அரசரிடம் என்ன கூறினார் ?

3) தாகத்தைத் தீர்த்துக் கொள்ள பீர்பல் எங்கு சென்றார் ?

©KTBS Not to be re published

4) சிறுமி பீர்பலுக்கு என்ன பதில் சொன்னாள் ?

5) சிறுமி தன் தந்தையார் எங்குச் சென்றிருப்பதாகக் கூறினாள்?

6) சிறுமி தன் தாயார் எங்குச் சென்றிருப்பதாக் கூறினாள் ?

7) சக்கரவர்த்தி போட்ட புதிருக்குப் பதில் அளிக்கக் கூடியவர்கள் யார் என்று பீர்பல் நினைத்தார் ?

8) இரண்டு மூடிகள் யாவை ?

9) பொன்னையும் மணியையும் அக்பர் யாருக்கு வழங்கினார்?

**3) பெரும் விடை வினா :**

1) ''குழந்தையைச் சமைத்துக்கொண்டு தாயாரை எரித்துக் கொண்டிருக்கிறேன் - இதனை விளக்குக.

2) மண்ணுடன் மண்ணைச் சேர்த்தல் என்றால் என்ன ?

3) ''இரண்டிரண்டாக ஆக்கச் சென்றிருக்கிறாள்'' என்று சிறுமி கூறியதின் பொருள் என்ன ?

4) மேலே மூடி கீழே மூடி நடுவே மெழுகுத்திரி எரிந்து அணைகிறது இது என்ன ? இதன் பொருளை விளக்குக.

**4) கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1) அக்பர் ................ ன் சக்கரவர்த்தி.

2) சிறுமி ஒருத்தி ................ கொண்டிருந்தாள்.

©KTBS Not to be re published

3) சிறுமியின் ................ அங்குவந்தனர்.

4) இந்த உடம்பு ................ சேர்ந்து விடுகிறது.

5) இரண்டுமூடிகள் என்றால் ................ ................

## ஆ) மொழிப்பயிற்சி

1) சேர்த்து எழுதுக :

1) இரண்டு + இரண்டாக ................

2) இறுதி + சடங்கு ................

3) சிறப்பு + பரிசு ................

4) தீர்த்து + கொள்ள ................

**2) பிரித்து எழுதுக :**

1) அவரிடம் ................

2) மெழுகுத்திரி ................

3) மண்ணுடன் ................

4) சபையிலிருந்தவர்கள் ................

**3) எதிர்ச் சொல் தருக :**

1) எரிந்து × ................

2) சேர் × ................

Not to be re published
©KTBS

3) இறந்து × ................

4) விடை × ................

5) நினைவு × ................

## 4) இணைச் சொல் தருக :

1) இறுதி

2) செல்

3) பதில்

4) கருது

5) அனைவரும்

6) ஆச்சரியப்படு

## 5) வாக்கியத்தில் எழுதுக :

1) அமைச்சர்

2) குழந்தை

3) திகைத்து

4) புதிர்

5) சிறப்பு

6) பரிசு

செயல்பாடு :

சொல் விளையாட்டு :

அட்டவணையில் உள்ள சொற்களை கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | க் | ப | ர் | டி | பீ |
| மை | கு | ண் | ஆ | ல் | ர் |
| ச் | ழ | டி | கா | லி | ப |
| ச | ந் | த | ய | சி | ல் |
| ர் | தை | ர் | ம் | று | நா |
| கி | ரா | ம | ம் | மி | ள் |

©KTBS Not to be republished

**கடிதம் வரைதல் :**

கொசு மருந்து அடிக்க வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

**வாழ்க்கைத் திறன் :**

உனக்குத் தெரிந்த ஒரு கதையை பத்து வரிகளில் எழுதுக. உனக்குத் தெரிந்த நான்கு விடுகதைகளை எழுது.

விழுமிய கல்வி :

1) கூட்டுக் குடும்பத்தினால் உண்டாகும் நன்மைகள்.

2) நாட்டுப்பற்று நமக்கு வேண்டும்.

## இலக்கணம்

தம் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடவும், மற்றவர் கூறும் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் கருவியாக இருப்பது மொழி. மொழியைப் பிழையின்றிப் பேசவும். எழுதவும் துணை புரிவது இலக்கணம்.

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை : 1) எழுத்திலக்கணம், 2) சொல்லிலக்கணம், 3) பொருளிலக்கணம், 4) யாப்பிலக்கணம், 5) அணியிலக்கணம்.

©KTBS Not to be re published

## 1) எழுத்து இலக்கணம் :

எழுத்து என்றால் என்ன ? எழுத்து பற்றியும் எழுத்தின் பிறப்பு முதலான செய்திகள் பற்றியும் விளக்கிக் கூறுவது எழுத்திலக்கணம். எழுத்தை உச்சரிக்கும் போது ஒலிவடிவம் பெறுகிறது; எழுதப் படும்போது வரி வடிவம் பெறுகிறது.

### 1) எழுத்தின் வகை :

### முதலெழுத்துகள் :

உயிரெழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பதும் தமிழ் மொழிக்கு முதன்மையான எழுத்துகளாகும். இவை வேறு சில எழுத்துக்கள் பிறப்பதற்கும், அவை இயங்குவதற்கும் அடிப்படையாக அமைவதால் இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

### 2) சார்பெழுத்துகள் :

முதல் எழுத்துகளைச் (உயிர் எழுத்துகளையும், மெய் யெழுத்துகளையும்) சார்ந்து தோன்றும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

சார்பெழுத்துகள் பத்துவகைப்படும் அவை உயிர், மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம் ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம் ஆகியனவாகும்.

### 1) சுட்டெழுத்து

ஒரு பொருளை சுட்டிக்காட்டப் பயன்படும் எழுத்து சுட்டெழுத்து எனப்படும்.

©KTBS Not to be re published

சுட்டெழுத்துக்கள் மூன்று. அவை அ, இ, உ என்பன

எடுத்துக்காட்டு : அது, இது, எது

அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன்.

2) புறச்சுட்டு

சொல்லுக்கு வெளியே (புறத்தே) நின்று பொருளைச் சுட்டுவது புறச்சுட்டு எனப்படும்.

(எ-டு) அவ்வீடு, இம்மரம்.

இச்சொற்களில் உள்ள 'அ', 'இ' என்னும் சுட்டெழுத்துக்கள் வீடு, மரம் என்னும் தனிச் சொற்களுக்கு வெளியேநின்று சுட்டுப் பொருள் தருகின்றன. ஆகையால் இவை புறச்சுட்டு எனப்படும்.

**வினாக்கள்**

1) எழுத்தின் 'வகைகள்' யாவை ?

2) சுட்டெழுத்து என்றால் என்ன ?

3) சுட்டு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

4) அகச் சுட்டு என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

5) புறச்சுட்டு என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

✽✽✽✽✽

©KTBS Not to be re published

பாடம் - 3

# திருக்குறள்



### ஈகை

### (இல்லார்க்கு ஈதல்)

1) அற்றார் அழிபசி தீர்த்தல் : அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

2) ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம் உடைமை
வைத்து இழக்கும் வன்கணவர்.

### வாய்மை

### (உண்மையின் தன்மை)

3) தன்நெஞ்சு அறிவது பொய்யற்க : பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

4) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

©KTBS Not to be re published

## இன்னா செய்யாமை
## (பிற உயிர்களுக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யாமலிருத்தல்)

5) பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.

6) நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம், நோய்செய்யார்
நோய் இன்மை வேண்டு பவர்

## மெய்யுணர்தல்
## (உண்மையை உணர்தல்)

7) எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு.

8) பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்,
செம்பொருள் காண்பது அறிவு.

## கேள்வி
## (நல்ல கருத்துகளைக் கற்றவரிடம் கேட்டு அறிதல்)

9) செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

10) எனைத்தானும் நல்லவை கேட்க : அனைத்தானும்.
ஆன்ற பெருமை தரும்.

**– திருவள்ளுவர்**

**ஆசிரியர் குறிப்பு :**

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரைப் பற்றிய உண்மை வரலாறு தெரியவில்லை. இவர் சிறப்பை விளக்கச் செவி

©KTBS Not to be re published

வழிச்செய்திகள் பல வழங்குகின்றன. இவரை முதற்பாவலர், செந்நாப் போதர், பெருநாவலர், தேவர் முதலிய பெயர்களால் போற்றுகின்றனர். இவர் கி.மு. 31 இல் பிறந்தவர் என உறுதி செய்யப்பட்டுத் ''திருவள்ளுவர் ஆண்டு'' கணிக்கிடப்பட்டுள்ளது. இவர் தம் குடிப்பெயரைத் தம் பெயராகக் கொண்டவர் என்பர்.

**நூற் குறிப்பு :**

மக்கள் அனைவரும் தம் வாழ்வில் பின்பற்றி உயர்வு அடையத்தக்க சிறந்த கருத்துக்களை எடுத்துரைப்பது திருக்குறள் சுருக்கமான அடிகளில் விரிவான பொருளை அளந்து காட்டுவது. மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பது. எனவே உலகப் பொதுமறை எனப் போற்றப் பெறுகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தலை சிறந்தது. மக்கள் வாழ்வில் அடையத்தக்க உறுதிப் பொருள்கள் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் விரித்து உரைப்பது. எனவே ''முப்பால்'' எனப் பெயர் பெற்றது. 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் பெற்றிருப்பது. வாயுரை வாழ்த்து, பொதுமறை, தமிழ் மறை, பொய்யா மொழி, தெய்வநூல் என்னும் பெயர்களும் இதற்கு உண்டு.

**அருஞ்சொற் பொருள் :**

1) அற்றார் - பொருளற்றவர் : அழிபசி - தீராதபசி.

2) ஈத்து - கொடுத்து : உவக்கும் - மகிழ்தல்
அறியார் - அறியாதவர் : இழக்கும் - இழப்பது.

3) பொய்யற்க - பொய் சொல்லாதே.
நெஞ்சே - நெஞ்சம், சுடும் - துன்புறுத்தும்.

4) அறம் பிற - மற்ற அறங்களை : நன்று - நல்லது.

©KTBS Not to be republished

5) பிறர்க்கு - மற்றவர்க்கு : இன்னா - இன்னாத
செய்யின் - செய்தால் : தாமே - தாமாகவே.

6) நோய் - துன்பம் : நோய் செய்தார் - துன்பம் செய்தவர்.

7) எத்தன்மைத்து - எத்தன்மையதாக :
மெய்ப்பொருள் - உண்மைப்பொருள்

8) பிறப்பு - பிறவி : பேதமை - அறியாமை,
காண்பதறிவு - காண்பதே மெய்யுணர்வு :

9) செவிக்கு - காதுக்கு : ஈயப்படும் - தரப்படும்.

10) எனைத்தானும் - எப்படி இருந்தாலும்.

**கருத்துரை :**

1) பொருளற்றவரின் தீராத பசியைப் போக்கினால் பொருளற்றவன், தன் பொருளைப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடம் போல் ஆகும்.

2) சேர்த்த பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து, பின்னர் அப்பொருளை இழக்கும் அருள் அற்றவர், பிறருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாதவர் ஆவார்.

3) ஒருவன் தன் நெஞ்சு அறிய பொய் சொல்லக் கூடாது, அதுபொய் என உலகம் அறியும்போது அவன் நெஞ்சே அவனைத் துன்புறுத்தும்.

4) பொய் சொல்லாமல் ஒருவன் வாழ்ந்தால் பிற நல்ல செயல்களைச் செய்ய வேண்டுவது இல்லை.

5) முற்பகலில் பிறருக்குத் தீமை தரும் செயல்களைச் செய்தால், அவ்வாறு செய்தவருக்குப் பிற்பகலில் துன்பங்கள் தாமாகவே வந்து சேரும்.

©KTBS Not to be republished

6) தீமை தரும் செயல்களைச் செய்தால் வரும் துன்பம் எல்லாம், துன்பம் செய்தவரையே போய்ச் சேரும். ஆகையால் தமக்குத் துன்பம் வராமல் வாழ விரும்புகிறவர், பிறருக்குத் துன்பம் செய்யமாட்டார்.

7) எந்தப் பொருளானாலும் அது எந்தத் தன்மையாக இருந்தாலும் அப்பொருளின் வெளித் தோற்றத்தைப் பார்க்காமல் உண்மையான பொருளைத் தெளிவாக அறிவதே நல்ல அறிவு.

8) பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குவதற்கு, உயர்ந்த நிலைக்குக் காரணமான சிறப்புப் பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

9) கேட்பதால் கிடைக்கும் அறிவாகிய உணவு செவிக்கு இல்லாதபோது, உடலைப் பாதுகாக்கும் பொருட்டு சிறிது உணவு வயிற்றுக்குத் தரப்படும்.

10) எப்படியாவது பிறரிடமிருந்து கேட்டறிய வேண்டும். அவ்வாறு கேட்டறிந்த அறிவு அவனுக்கு நிறைந்த பெருமையைத்தரும்.

## அ) பாடப்பொருள் பயிற்சி

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) ஒருவன் தன் நெஞ்சு அறிய ................ சொல்லக்கூடாது.

2) முற்பகலில் ஒருவருக்கு தீமை செய்தால், அவ்வாறு செய்தவருக்கு ................ துன்பங்கள் வந்து சேரும்.

3) செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது ................ ஈயப்படும்.

4) தமக்குத் துன்பம் வராமல் வாழ விரும்புகிறவர் பிறருக்கு ................ செய்ய மாட்டார்.

©KTBS Not to be republished

அ) ஒரு வாக்கியத்தில் விடை தருக.

1) திருக்குறளை இயற்றியவர் யார் ?

2) திருக்குறள் - பொருள் கூறுக.

3) திருக்குறள் எவ்வாறு போற்றப்படுகிறது ?

4) ஈகை என்ற தலைப்பிலுள்ள குறள்களின் கருத்தினை எழுது.

**மொழிப் பயிற்சி :**

**எதிர்ச் சொல் தருக :**

1) இழத்தல் × ................ 2) சுடும் × ................

3) பொய் × ................ 4) சிறிது × ................


5) பெருமை × ................

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1. பசிதீர்த்தல் ; இன்பம் ; முற்பகல் ; நன்று ; காண்பது

**மொழி விளையாட்டு :**

சொற்களை உருவாக்குக :





✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be re published

பாடம் - 4

# ''விண்ணின் மழைத்துளி, மண்ணின் உயிர்த்துளி'' -மழைநீர் சேமிப்பு



நீர் இன்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர் தண்ணீர் மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர்களுக்கும் மிகமிக முக்கியமாகும். செடிகொடி மரவகைகள் வளரவும் தண்ணீர் தேவை. உலக உருண்டையில் முக்கால் பாகத்திற்கு மேல் நீரால் சூழப்பட்டிருந்தாலும், உயிர் வாழ்க்கைக்கும் பயிர் தொழிலுக்கும் மற்றும் பிறபயன்களுக்கும் தேவையான நல்ல நீரை மழைவாயிலாகவும் பெற முடிகிறது. அதில் ஒருசிறு பகுதியைத்தான் நாம் பயன் படுத்துகிறோம். பெரும்பகுதி கடலில் கலந்து வீணாகிறது. அதனால் தண்ணீர்ப் பற்றாக்குறை நமக்கு ஏற்படுகிறது.

நீரின் இன்றியமையாமையும் நீர்தருகின்ற மழையின் சிறப்பையும் தமிழ் புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர்.

அனைவருக்கும் அடிப்படைத் தேவை நீர் என்று சொல்வது மிகபொருத்தமான உண்மை, மேலும், ஒரு நாட்டினுடைய வலிமையும், பெருமையையும் நீர்வளத்தால்தான் கணிக்கப்படுகிறது. இதற்கு மாற்று என்பது இல்லாத காரணத்தால், நீரை நாம் ஒரு தாய்க்கு ஒப்பாகக் கூறலாம். ஓரிடத்தில் மக்கள் வாழத்தொடங்குவதும், வாழ்வைத் தொடருவதும் அங்குள்ள நீர் வசதியைக் கொண்டுதான் என்று சொல்லலாம்.


Not to be republished ©KTBS

குடிநீர் இல்லையென்றால் குடியிருப்பும் இல்லை. நீரில்லாத போதுதான் இன்னலும் இடம் பெயர்தலும் நிகழ்கின்றன. தவிக்கும் மக்களுக்கு மிகவும் தேவைப்படுவது நீரே, தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்பது போல நீரைவிட சிறந்ததொரு உயிர்க்காப்பு இல்லை எனலாம்.

## மழைநீர் சேமிப்பு

மழைநீர் வீணாகாமல் நிலத்துக்குள் அதனைச் செலுத்திச் சேமிப்பதை மழைநீர் சேமிப்பு என்கின்றனர். நிலத்தடிநீர் குறைவதைத் தடுக்கவும் நீர் வளத்தை பெருக்கவும், நீரின்தரத்தை உயர்த்தவும், நிலத்தடி நீரைச் சேமிக்கிறோம். பக்குவமாகச் சேமித்து சிக்கனமாகச் செய்வது நன்மைதரும்.

### சேமிக்கும் முறை




பயிரிடும் முறைகளை மாற்றியும் நீரைப் பயன்படுத்துகின்ற முறையினை மாற்றியும் பெரிய அளவில் நீரைச் சேமிக்கலாம். ஏரி குளங்களை ஏற்ற முறையில் பாதுகாப்பது மிகவும் தேவை. நீர்

Not to be re published ©KTBS

வழிகளை அடைக்காமல் பரவலாகப் பெய்கின்ற மழைநீர் முழுவதும் நீர்நிலைகளை வந்தடைய ஆவன செய்ய வேண்டும். வீடுகளில் மழைநீரைச் சேமிப்பதற்குச் சேமிப்பு தொட்டிகளை அமைக்க வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளை சிமெண்ட் தளமாக மாற்றாமல், மண்பாங்காகவோ, இயல்பான நிலப்பரப் பாகவோ விட்டுவிடுதல் வேண்டும். மாடியில் விழுகின்ற மழைநீரைக் குழாய்கள் மூலம் தரைப்பகுதிக்குக் கொண்டுவந்து கிணற்றுக்கோ, அல்லது வீட்டுக்கும் சுற்றுச் சுவருக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியில் ஒரு தொட்டி அமைத்துச் சேமிக்க வேண்டும்.

**பயன்கள்**

பெய்த மழைநீரைத் தகுதியான வழிகளில் தேக்கிவைத்துப் பாதுகாப்பதால் நீர்வளத்தைப் பெருக்கலாம். எனவே நிலத்தடி நீரைப் பாதுகாத்து சேமிப்பதின் வாயிலாக நீண்ட காலத்திற்கு நீர் பற்றாக் குறையை சமாளிக்கலாம். இயற்கை வளங்களைப் பெருக்கி சுற்றுச் சூழல் பாதுகாப்பையும், மாசுக்கட்டுப்பாட்டையும் பெறலாம். அடைமழையினால் புறநகர்ப் பகுதிகளிலும், கிராமியப் பகுதிகளிலும் மழைநீர் வெள்ளமாய் பெருகி வீணாவதைத் தடுக்கலாம்.

‘‘இன்றைய சேமிப்பு நாளையத் தேவை’’. என்பதற்கேற்ப, பருவமழையானது பெய்யாமல், பொய்க்கும்போது, எற்படுகின்ற நீர்த் தட்டுபாட்டையும் தலைவிரித்தாடும் பஞ்சத்தையும் மழைநீர் சேகரிப்பால் ஈடுகட்ட இயலும்.

நம் இந்தியநாடு பழம்பெரும் நாடு. இந்நாட்டில் இமயம் முதல் குமரிவரை வற்றாவளம் சேர்க்கும் பேராறுகள் அன்றுதொட்டு இன்றுவரை ஓடிக்கொண்டிருக்கின்றன. பல ஆறுகளுக்குக் காரணமாக அமைவது மழையே. உயிரின் உறைவிடம் உடல், மழைநீரின் உறைவிடம் நிலம்.

©KTBS Not to be republished

## அருஞ் சொற்பொருள் :

1) மிகை - அதிகம்

2) பக்குவம் - தகுதி

3) காலந்தோறும் - வழிவழியாக

4) கணிக்கிடப்படுகிறது - அளவிடப்படுகிறது.

5) ஒப்பானது - இணையானது

6) இடம்பெயர்தல் - இடம் மாறுதல்

7) ஆவன செய்தல் - வழிசெய்தல்

8) தட்டுப்பாடு - குறைபாடு.

## அ) பாடப்பொருள் பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

1) நீரின்றி அமையாது .................

அ) ஊர் ஆ) உலகு இ) வீடு

2) விண்ணின் மழைத்துளி மண்ணின் .................

அ) நீர்த்துளி ஆ) மண்துளி இ) உயிர்த்துளி

3) இன்றைய சேமிப்பு நாளைய .................

அ) தேவை ஆ) கேடு இ) ஆக்கம்

4) தாயிற் சிறந்ததொரு ................. இல்லை.

அ) வீடு ஆ) நாடு இ) கோயில்

5) ................. விடச் சிறந்ததொரு உயிர்காப்பு இல்லை.

அ) தண்ணீரை ஆ) உறைவிடத்தை இ) உடையை

©KTBS Not to be re published

## II. ஒரு வாக்கியத்தில் விடைதருக.

1) தாவரங்கள் வளர என்ன தேவை ?

2) நீர் வீணாவதற்கான காரணம் யாது ?

3) தண்ணீரை நாம் எதற்கு ஒப்பிடலாம் ?

## III. மூன்று வாக்கியங்களில் விடை தருக.

1) பூமியிலுள்ள நீரின் அளவு யாது ?

2) மனிதனின் வாழ்க்கை எதைக் கொண்டு கணிக்கப் படுகிறது?

3) நிலத்தடிநீரை எவ்வாறு சேமிக்க வேண்டும் ?

4) பருவங்களுக்கேற்ப மழைபெய்யாமல் போனால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

## IV. விரிவான விடை தருக :

1) மழைநீர் சேமிப்பு முறையை விளக்குக.

2) மழைநீர் சேமிப்பின் பயன்கள் யாவை ?

3) நீரின் இன்றியமையாமையை விளக்குக.

## ஆ) மொழிப் பயிற்சி

## I. சேர்த்து எழுதுக.

1) தமிழ் + புலவர் =

2) வீண் + ஆகிறது =

3) அடிப்படை + தேவை =

4) மிகை + ஆகாது =

5) நிலம் + பரப்பு =

©KTBS Not to be re published

**II.** **எதிர்ச் சொல் தருக**

1) தொடர்வது × ................ 2) பழமை × ................

3) சிக்கனம் × ................

**III.** **வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1) இன்றியமையாத

2) பாதுகாப்பது

3) இமயம் முதல் குமரிவரை

4) வீணாவதை

5) மாசுக்கட்டுப்பாடு

## இ) செயல்பாடுகள்

**I.** மழைநீர் சேமிக்கும் முறைகளைப் பற்றி கலந்துரையாடுக.

**II.** வேறுபாடுகளை அறிந்து மாதிரியில் உள்ளதுபோல பொருளை எழுதுக.

மாதிரி : நீலம் - வண்ணம் ; நீளம் - அளவு

1) வலை .............. ; வளை ..............

2) மரம் .............. ; மறம் ..............

3) அறை .............. ; அரை ..............

4) மணம் .............. ; மனம் ..............

5) கரை .............. ; கறை ..............

© KTBS Not to be re published

**வாழ்க்கைத் திறன் :**

நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் ?

1) உறவினர் வீட்டு விழாவுக்கு போகிறீர்கள். யாரும் உங்களைக் கண்டு கொள்ளவில்லை. கலகலப்பாய் பழகவில்லை. என்ன செய்வீர்கள் ?

அ) உடனே என் முகம் சுருங்கி விடும்.

ஆ) சீக்கிரம் வீட்டுக்குச் செல்ல நினைப்பு வரும்.

இ) நானே வலியச் சென்று கலகலப்பாய் பேசுவேன்.

விடை :

2) வகுப்பறையில் ஆசிரியர் வரத்தாமதமாகிறது. என்ன செய்வாய்.

அ) அமைதியுடன் படிப்பேன்.

ஆ) பக்கத்து மாணவனுடன் பேசுவேன்.

இ) ஆசிரியரை அழைத்துவரச் செல்வேன்.

விடை :

**விழுமிய கல்வி :**

நீரின் அவசியத்தை வலியுறுத்துவது

மழை நீர் சேமிப்பின் அவசியத்தை அறிவது.

## இலக்கணம்

**வினா எழுத்து**

வினாப் பொருளைத் தரும் எழுத்து வினா எழுத்து எனப்படும். (வினா - கேள்வி)

வினா எழுத்துக்கள் ஐந்து. அவை எ, ஏ, யா, ஆ, ஓ, என்பன 'எ, யா' என்னும் எழுத்துக்கள் சொல்லின் முதலிலும், 'ஆ, ஓ',

©KTBS Not to be re published

என்னும் எழுத்துக்கள் சொல்லின் இறுதியிலும் 'ஏ' என்னும் எழுத்து சொல்லின் முதலிலும், இறுதியிலும் வினாவாக வரும்.

(எ-டு) என்ன ? யார் ? ஏன் ? - முதல்
கந்தனா ? வள்ளியோ ? அவனே ? - இறுதி.

வினா இருவகைப் படும் அவை அகவினா, புறவினா என்பன.

**1) அகவினா :**

சொல்லோடு சேர்ந்து நின்று வினாப்பொருளைத் தருவது அகவினா எனப்படும்.

(எ-டு) எவன் ? ஏது ? யாது ?

இச்சொற்களில் உள்ள எ, ஏ, யா என்னும் எழுத்துக்கள் சொல்லோடு சேர்ந்து வினாப்பொருள் தருகின்றன. அதனால், இவை அகவினா எனப்படும்.

**2) புறவினா :**

சொல்லுக்கு வெளியே (புறத்தே) நின்று வினாப்பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

(எ-டு) எப்பொழுது ? கந்தனா ?

இச்சொற்களில் உள்ள 'எ' 'ஆ' என்னும் வினா எழுத்துக்கள் பொழுது, கந்தன் என்னும் தனிச் சொற்களுக்கு வெளியே நின்று வினாப்பொருள் தருகின்றன. அதனால் இவை புறவினா எனப்படும்.

**வினாக்கள்**

1) வினா எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

2) சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துக்கள் எவை ?

©KTBS Not to be re published

## மாத்திரை

எழுத்து ஒலிக்கும் காலத்தை மாத்திரை என்ற அளவு கோலால் அளக்கிறோம். (மாத்திரை - ஒலி அளவு)

நாம் இயல்பாக கண் இமைக்கும் நேரமும், கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரைக்கு அளவாம்.

உயிர் எழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குறில் எழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்று. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெடில் எழுத்துக்களுக்கும் மாத்திரை அளவு இரண்டு ஆகும்.

ஆய்த எழுத்துக்கும், பதினெட்டு மெய் எழுத்துக்களுக்கும் மாத்திரை அரை ஆகும்.

க, கி, கு, கெ முதலிய உயிர் மெய்க் குறில் எழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்று.

கா, சீ, கூ, கே முதலிய உயிர்மெய் நெடில் எழுத்துக்களுக்கு மாத்திரை இரண்டு.

குறில் - 1 மாத்திரை

நெடில் - 2 மாத்திரை

மெய் - ½ மாத்திரை

ஆய்தம் - ½ மாத்திரை

உயிர் மெய்க்குறில் - 1 மாத்திரை

உயிர் மெய் நெடில் - 2 மாத்திரை

**வினாக்கள் :**

1) மாத்திரை என்றால் என்ன ?

2) ஒரு மாத்திரைக்கு அளவு யாது ?

© KTBS Not to be re published

3) குறில் எழுத்துக்கு மாத்திரை எத்தனை ?

4) நெடில் எழுத்துக்கு மாத்திரை எத்தனை ?

5) அரை மாத்திரை பெற்றுள்ள எழுத்துகள் யாவை ?

### 4. இன எழுத்துக்கள் :

பிறக்கும் இடத்தாலும் முயற்சியாலும் ஒலிப்பதற்குரிய மாத்திரை அளவாலும், உருவத்தாலும், பொருளாலும் ஓரளவு ஒற்றுமையுள்ள எழுத்துக்கள் இன எழுத்துக்கள் எனப்படும்.

உயிர் எழுத்துக்களில் ஒவ்வொரு குறிலுக்கும், அதனை அடுத்துள்ள நெடில் இனமாகும்.

அ ........ ஆ இ ........ ஈ

உ ........ ஊ எ ........ ஏ

ஒ ........ ஓ

ஐ, ஔ என்னும் இரண்டு நெடில் எழுத்துக்களுக்கும் குறில் இல்லை எனினும் 'ஐ' என்னும் எழுத்துக்கு, ஒலிக்கும் முறையில் 'இ' என்னும் எழுத்து ஒற்றுமை உடையதாய் இருக்கிறது. அவ்வாறே 'ஔ' என்னும் எழுத்துக்கு 'உ' என்னும் எழுத்து ஒற்றுமை உடையதாய் இருக்கிறது. ஆகவே 'ஐ' என்னும் நெடிலுக்கு 'இ' என்னும் குறிலும், 'ஔ' என்னும் நெடிலுக்கு 'உ' என்னும் குறிலும் இனமாம்,

ஐ –இ ; ஔ – உ

மெய் எழுத்துக்களில் ஒவ்வொரு வல்லெழுத்துக்கும் அதனை அடுத்துள்ள மெல்லெழுத்து இனமாகும்.

©KTBS Not to be re published

| வல்லினம் | - | மெல்லினம் |
|---|---|---|
| க் | | ங் |
| ச் | | ஞ் |
| ட் | | ண் |
| த் | | ந் |
| ப் | | ம் |
| ற் | | ன் |

**இடையின எழுத்துக்கள் ஆறும் ஓர் இனமாகும்.**

ய், ர், ல், வ், ழ், ள்.

**வினாக்கள்.**

1) இன எழுத்துக்கள் என்றால் என்ன ?

2) உயிர் இன எழுத்துக்களை வகைப் படுத்தி எழுதுக.

3) 'ஐ' 'ஔ' ஆகிய வற்றுக்குரிய இன எழுத்துக்கள் யாவை?

4) வல்லின எழுத்துக்களுக்குரிய இன எழுத்துக்கள் யாவை?

5) இடையின இன எழுத்துக்கள் யாவை ?

✾ ✾ ✾ ✾ ✾


©KTBS Not to be re published

பாடம் - 5

# மூதுரை



1. கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி ?



2. நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

- ஔவையார்

Not to be re published ©KTBS



**ஆசிரியர் குறிப்பு :** இப்பாடலைப் பாடியவர் ஔவையார். இவர் சங்க காலப் பெண்புலவர்களுள் சிறந்து விளங்கியவர். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், முதலிய நூல்களை எழுதியவர். அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் குறுநில மன்னன் நீண்ட நாள் வாழச் செய்யும் அரிய நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்து மகிழ்ந்ததைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

**நூற்குறிப்பு :** ஔவையார் இயற்றிய நூல்களுள் ஒன்று மூதுரை. இது நீதிநெறிகளை வலியுறுத்தும் நூல்களுள் ஒன்றாகும். இறைவாழ்த்துடன் முப்பத்தியொரு வெண்பாக்கள் கொண்டது இந்நூல். மானிடர் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் எளிய, இனிய தொடர்களைக் கொண்ட நேரிசை வெண்பாக்களால் அமைந்த நூலாகும்.

**அருஞ்சொற்பொருட்கள் :**

கானம் - காடு
நஞ்சு - விடம்
பாவித்து - எண்ணி
கரந்து - மறைந்து
பொல்லா - கோபமான
உரையும் - வசிக்கும்
சிறகு - இறக்கை
புறம் - வெளியில் இல்லாதவர்.
கல்லாதவன் - படிப்பறிவு இல்லாதவன்

Not to be republished ©KTBS

**கருத்துரை : 1.** அழகிய மயிலொன்று சோலையில் தோகை விரித்து ஆடியதைப் பார்த்த வான் கோழி, தன்னை மயிலாக எண்ணிக் கொண்டு, தனது அழகற்ற இறக்கையை விரித்து ஆட முயற்சி செய்கின்றது. அதைப்போல், கற்றறிந்த புலவர் பாடுவதைக் கண்டு கல்லாதவனும் அவரைப் போலவே பாடல் இயற்ற முயற்சி செய்வது இருக்கும்.

**கருத்துரை : 2.** நல்லபாம்பு தன்னிடம் நஞ்சு இருப்பதை அறிந்து மறைந்து வாழும். அதுபோலவே மனதில் வஞ்சகம் உடையவர் தமது தீய குணத்தால் மறைந்தே வாழ்வர். தண்ணீர்ப் பாம்பு தன்னிடம் நஞ்சு இல்லாமையால் எதற்கும் அஞ்சாமல் வெளியில் திரியும். அது போலவே மனதில் வஞ்சகம் இல்லாதவர்கள் அச்சமில்லாமல் வெளியில் நடமாடுவர்.

## பாடப்பொருள் பயிற்சி

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) கானகத்தில் தோகை விரித்தாடியது ..................
2) அழகற்ற இறக்கையை விரித்தாடியது ..................
3) கற்றறிந்தவரைப் போல பாடல் இயற்ற முயல்பவர் ..................
4) மூதுரை பாடல்களை இயற்றியவர் ..................

**ஆ) ஒரு வாக்கியத்தில் விடையளிக்க :**

1) எதனிடம் நஞ்சு இருக்கும் ?
2) அஞ்சாமல் வெளியே திரிவது எது ?

©KTBS Not to be re published

3) மறைந்து வாழ்பவர் யார் ?

4) ஔவைக்கு அரிய நெல்லிக்கனியைக் கொடுத்தவர் யார்?

**இ. மூன்று வாக்கியங்களில் விடையளிக்க :**

1) கல்லாதவனின் முயற்சி என்ன ?

2) வான் கோழி எவ்வாறு ஆட முயன்றது ?

3) வஞ்சகம் இல்லாதவர் பண்பு என்ன ?

**ஈ) ஐந்து வரிகளில் விடையளிக்க :**

1) கல்லாதவனின் முயற்சியை ஔவையார் எதற்கு ஒப்பிடுகிறார் ?

2) நஞ்சுடைமை என்ற பாடலின் கருத்துரையை வரைக.

**உ) இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :**

1) பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல்

2) நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்

## மொழிப்பயிற்சி

அ) சேர்த்தெழுதுக :

மயில் + ஆட =

நஞ்சு + உடைமை =

தான் + அறிந்து =

விரித்து + ஆடி =

©KTBS Not to be re published

**ஆ) பிரித்தெழுதுக :**

கண்டிருந்த =

பொல்லாச்சிறகை =

புறங்கிடக்கும் =

கரந்துறையும் =

**இ) எதிர்ச்சொல் தருக :**

விரித்து × ................

கல்லாதவன் × ................

கரவிலார் × ................

அஞ்சாது × ................

**ஈ) ஒத்த பொருள் தரக்கூடிய சொற்களைப் பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| நஞ்சு | கானம் | வான் | கரம் |
| விண் | கை | காடு | விடம் |

**உ) எடுத்துக்காட்டைப் போல மற்ற சொற்களுக்கு விடை எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| எ.டு. | வெல் | வென்று | வென்றிடு |
| | செல் | ................ | ................ |
| | தின் | ................ | ................ |
| | மெல் | ................ | ................ |
| | நில் | ................ | ................ |

Not to be republished ©KTBS

**செயல்பாடு : 1**

உங்களுக்குத் தெரிந்த மற்றும் பார்த்த சிறிய, பெரிய பறவைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**செயல்பாடு : 2**

உங்கள் சுற்றுப்புறத்தில் காண்கின்ற சில பறவைகளின் குரலைப் போன்று ஒலி எழுப்புக.

**செயல்பாடு : 3**

கான மயிலாட பாடல் போன்றதொரு பாடலினை ஆசிரியரிடம் கேட்டு பாடுக.

✾ ✾ ✾ ✾ ✾

©KTBS Not to be re published

பாடம் - 6

# விண்வெளி வீராங்கனை

## ஆணுக்குப் பெண் நிகர்



அவனியை உருவாக்குபவள் பெண். வீட்டையும் நாட்டையும் தன் இருகண்களாகக் கொண்டு என்றும் முன்னேற்றப் பாதையை சமைக்கிறவள் பெண். காற்று புகாத இடத்தில் கூட பெண்களின் கால் தடம் பதிக்க முடியும் என தன்னம்பிக்கையைத் தந்த கல்பனா சாவ்லாவைப் பற்றிக் காண்போம்.

**பிறப்பு :** கல்பனா சாவ்லா ஹரியானா மாநிலத்தில் கர்னால் என்ற ஊரில், 1961 - ஆம் ஆண்டு ஜனவரி 7 - ஆம் தேதி ஒரு பஞ்சாபி குடும்பத்தில் நான்காவது குழந்தையாகப் பிறந்தார். அவளுடைய பெற்றோர் பனாரசிதாஸ் மற்றும் சன்யோகிதா தேவி ஆவர். கல்பனா என்றால் கற்பனை என்று பொருள். சிறு வயதிலேயே மற்ற சிறுமிகளிலிருந்து கல்பனா தனித்துச் செயல்படுவாள். ஓடும் மழை நீரில் எல்லோரும் கப்பல் விட்டு மகிழ கல்பனா விமானம் செய்து ஓடும் நீரில் விட்டு மகிழ்வாள்.

**கல்வி :** பள்ளிக்குச் செல்லும் வயது நிரம்பியதும் கர்னாலிலுள்ள தாகூர் பாலநிகேதன் பள்ளியில் சேர்க்கப்பட்டாள். வானத்தைப் பார்த்து, வானத்து மேகங்களின் வர்ண ஜாலங்களில் தன்னை இழப்பது, சூரியனின் கதிர்களை கண் இமைக்காமல் ரசிப்பது, கல்பனாவின் வாடிக்கை ஆயிற்று. ஓவிய வகுப்பின் போது கல்பனா மட்டும் நீல நிற வானத்தையும் நட்சத்திரங்களையும் நிலவையும் வரைந்து அதில் ஒரு விமானம் பறப்பது போன்று படம் வரைவாள். காரணம் கேட்டால் ‘‘என்றாவது ஒரு நாள் நானும் அந்த

©KTBS Not to be republished

வானத்திற்குச் செல்வேன், நிலவையும் நட்சத்திரங்களையும் பார்த்து ரசிப்பேன்,'' என்று கூறுவாள்.

கர்னாலில் ஒரு ஃப்ளையிங் கிளப் இருந்தது அதில் கல்பனாவின் தந்தையும் ஒரு உறுப்பினர். அவளும் தன் தந்தையுடன் கிளப்பிற்கு செல்ல மறப்பதே இல்லை. தந்தை பறப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கல்பனா, ''வானம் ஒருநாள் நமக்கும் வசப்படும்'', என்று நினைப்பாள். ஒருநாள் தன் தந்தையிடம் தன் அடிமனத்தில் குடி கொண்டிருக்கும் ஆசையைச் சொன்னாள். அப்பா மறுத்தும் கல்பனா அடம்பிடித்தாள். இறுதி வெற்றி கல்பனாவுக்கே. தந்தையைப் போன்று கல்பனாவும் மண்ணிலிருந்து விண்ணை நோக்கிப் பறக்கக் கற்றுக்கொண்டாள்.

**கல்லூரி :** பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற பிறகு பஞ்சாப் என்ஜினியரிங் கல்லூரியில் விமானப் பொறியியல் துறையைத் தேர்ந்தெடுத்தார். 1978-இல் கல்லூரியில் சேர்ந்தார். கல்பனாவின் அறிவு. ஆற்றல், தனித்தன்மை, எதையும் நேர்கொள்ளும் திறன் இவையெல்லாம் சேர்ந்து அந்தக் கல்லூரி மாணவர்களிலே தனித்து விளங்கினார். 1982-ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திலேயே முதலிடம் பெற்று, அதே ஆண்டு அமெரிக்கா சென்றார். அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் இருக்கும் ஆர்லிங்க்டன் பல்கலைக்கழகத்தில் கல்பனா சாவ்லாவுக்கு இடம் கிடைத்ததும் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. காற்றில் உந்திச் செல்லுதலையும், காற்று வழியும் விதத்தினையும், விமானத்தில் காற்று சுழற்சியின் மூலம் இயக்கப்படும் இயந்திரங்களைப் பற்றியும் (ஏரோ டைனமிக்ஸ்) கற்றுத் தேர்ந்து 1984 ஆம் ஆண்டு எம். எஸ். பட்டம் பெற்றார். தொடர்ந்து பயின்று கொலராடோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து முனைவர் பட்டத்தை 1988-ஆம் ஆண்டு பெற்றார்.

**விண்வெளி பயணம் :** 1994-ஆம் ஆண்டு கல்பனா சாவ்லா மற்றும் ஹாரிஷனின் திருமணம் நடந்தது. இருமுறை விண்ணப்பித்த பிறகு

©KTBS Not to be republished

இரண்டாம் முறை 'நாசா'வில் அதாவது 'தேசிய ஆகாய பயணவியல், நிர்வாக நிறுவனத்தில்' வேலை கிடைத்தது. (NASA-National Aeronautics and Space Administration). 1997 நவம்பர் 19 அன்று மாலை 2.46 மணிக்கு 'கொலம்பியா-எஸ்.டி.எஸ் 87', விண்ணிற்கு அனுப்பப்படும், அந்த விண்கலத்தில் செல்லும் வீரர்களில் கல்பனா சாவ்லாவும் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டது. ராகேஷ் ஷர்மவிற்குப் பிறகு 'விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியர்' என்ற சிறப்பு கல்பனாவிற்குக் கிடைக்கின்றது.



அந்தப் பயணத்தின் போது கல்பனா சாவ்லா உலகைச் சுற்றியது 252 முறை. விண்ணில் 15 நாட்கள் 16 மணி 33 நிமிடம் இருந்தார். பயணம் செய்த தூரம் 65 லட்ச மைல்கள். ரோபோவின் கரத்தை சரிபார்த்தல், விண்கலத்தின் செயல்திறனைப் பரிசோதித்தல் என கல்பனா சாவ்லா ஆர்வத்துடன் செயல்பட்டார். ஆனால் சுழற்கோள் சுழல மறுத்தது, செயல்படாமல் போனது. அதனால் சுழற்கோளில் இருந்த பதிவு நாடாவில் (டேப்ரிக்கார்டரில்) விஞ்ஞான ஆய்வுகள் பதிவாகவில்லை.

முயற்சியைக் கைவிட்டுத் தரை இறங்கினர். 1998ல் இரண்டாவது விண்வெளி பயணத்திற்குக் கல்பனாவை நாசா தேர்ந்தெடுத்தது. முதல் பயணத்தில் சாதிக்கத் தவறியவற்றை எல்லாம் இந்தப் பயணத்தில் செய்து கொண்டார்.

அனைவருடனும் கைக்குலுக்கி விண்வெளி வீரர்கள் 2003 ஜனவர் 16 அன்று விடைபெற்றனர். இந்தப் பயணத்தை மேற்கொள்ளும்பொழுது கல்பனாவிற்கு வயது 42. திட்டமிட்டபடி எந்த விதத் தடங்கலும் இன்றி ஆய்வுகளை முடித்தார்கள்

©KTBS Not to be republished

இந்தப்பயணத்தின் போது விண்ணில் பறந்த மொத்த தூரம் 104 இலட்சம் கி.மீ, பூமியைச் சுற்றுவது 252 தடவை. 16 நாட்கள் பயணம் மற்றும் பணியை முடித்து இன்னும் 16 நிமிடங்களில் கென்னடி விண்வெளி மையத்தில் கொலம்பியா விண்கலம் தரை இறங்கும் என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது, விண்கலம் கட்டுப்பாட்டை இழந்தது. இலக்கை விட்டு டெக்ஸாஸ் மாநிலத்தில் 2,00,000 அடி உயரத்தில் வெடித்து தீப்பிழம்பாகச் சிதைந்து சிதறியது.

**மறைவு :** கல்பனா சாவ்லாவின் சாகசம் தேசத்தையே பெருமிதப்படுத்தும் வீரகாவியமாக இருக்கிறது. அவருடைய மறைவுக்குப் பிறகு அவரின் நினைவாக இந்தியா கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதி 'மெட்சாட்' என்ற செயற்கை கோளை பி.எஸ்.எல்.வி.சி-4 ராக்கெட் மூலம் விண்ணிற்கு செலுத்தியது. இதை 'கல்பனா-1' என்ற பெயரில் அழைத்தது. கல்பனாவும் அவருடன் சென்ற 6 விண்வெளி வீரர்களும் பலியான பிப்ரவரி 1 ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் அவரது நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிறது.

**அருஞ்சொற்பொருள்**

பாணி = ஏற்ற வழி, வர்ண ஜாலம் = பல வண்ண வேடிக்கை, வாடிக்கை = தினமும் செய்கின்ற செயல், ஆர்வம் = ஈடுபாடு, நிராகரி = ஒதுக்கு, வாதம் = சொற்போர், முனைவர் = டாக்டர் பட்டம், விஞ்ஞானம் = அறிவியல்.

**பாடப்பயிற்சி**

**I. குறுவினா :**

1) வடமொழியில் கல்பனா என்பதன் பொருள் என்ன ?

2) கல்பனா எந்த பள்ளியில் சேர்க்கப்பட்டாள் ?

©KTBS Not to be republished

3) தந்தை பறப்பதைப் பார்த்து கல்பனா என்ன நினைப்பாள்?

4) பல்கலைக் கழகத்தில் முதலிடம் பெற்ற ஆண்டு எது ?

5) கல்பனா பயணம் செய்த முதல் விண்கலத்தின் பெயர் என்ன?

**II. சிறுவினா :**

1) கல்பனா எங்கு எப்போது பிறந்தார் ?

2) மழைக்காலத்தில் கல்பனா என்ன செய்வாள் ?

3) கல்பனா சாவ்லா மாணவர்களில் தனித்து விளங்கியதற்கான காரணம் என்ன ?

4) அமெரிக்காவில் கல்பனா பெற்ற பட்டங்கள் யாவை ?

**III. விரிவாக விடையளிக்கவும் :**

1) கல்பனாவின் முதல் விண்வெளிப் பயணத்தைப் பற்றி எழுதுக.

2) இரண்டாம் பயணத்தின் பொழுது நேர்ந்ததென்ன ?

3) கல்பனா சாவ்லாவின் மறைவுக்குப் பிறகு இந்தியா அவருக்குச் செய்த மரியாதை என்ன ?

**IV. அடைப்புக்களிலுள்ள சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிடுக.**

1) கல்பனா சாவ்லா (1961/1978)ல் பிறந்தார்.

2) கல்பனா (பொம்மை / விமானம்) மீது கவனம் பதித்தாள்.

3) பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் கல்பனா (உயிரியல்/ பொறியியல்) துறைகளைத் தேர்ந்தெடுத்தார்.

4) கல்பனா தன் தந்தையுடன் (ஆய்வுக் கூடத்திற்கு/ ஃபிளையிங் கிளப்பிற்கு) செல்ல மறக்கவே மாட்டாள்.

©KTBS Not to be re published

## மொழிப்பயிற்சி

**I. சேர்த்து எழுதுக :**

மழை + காலம் =

சிறுமிகளில் + இருந்து =

அவளுக்கு + உரிய =

தேர்ந்து + எடுத்தார் =

பல்கலை + கழகம் =

**II. பிரித்து எழுதுக :**

முன்னேற்றம் =

தன்னம்பிக்கை =

தனித்திறமைகள் =

இவை யெல்லாம் =

தந்தையில் =

**III.** எதிர்சொல் தருக :

மகிழ்ச்சி ×

மறப்பது ×

இறங்கும் ×

தொடர்ந்து ×

பிறந்தார் ×

**IV. வாக்கியத்தில் அமைக்க :**

வானத்தைப் பார்த்து, மகிழ்ச்சி, வாதிடு, கண் இமைக்காமல், கற்றுத் தேர், தீப்பிழம்பு.

**V. மேரி கியூரி**

மேரி கியூரி அம்மையார் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் தந்தை அறிவியல் ஆசிரியர். மேரிகியூரி, பிரான்சு நாட்டுக்குச் சென்று கல்லூரியில் அறிவியல் பயின்றார். தம் வறுமையைப் பிறர் அறியா வண்ணம் அக்கல்லூரியில் நாட்களைக் கழித்தார். உண்மை

Not to be re published ©KTBS

உணர்ந்த உடன் பயின்ற மாணவர்கள் பலவகையில் அவருக்கு உதவி செய்தனர்.

மேரி, அறிவியல் மேதை பியூரி கியூரியைத் திருமணம் செய்து கொண்டார். அவர்கள் தம் வருவாயில் பெரும்-பகுதியை அறிவியல் ஆராய்ச்சிக்குச் செலவிட்டனர். இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாய்க் கணவன் மனைவி ஆகிய இருவரும் முதலில் 'போலோனியம்' என்னும் பொருளைக் கண்டுபிடித்தனர். மேலும் இரண்டு ஆண்டுகள் இடைவிடாது ஆராய்ந்து, 'ரேடியம்' என்னும் பொருளைக் கண்டுபிடித்தனர். இந்த இரு அரிய கண்டு பிடிப்புகளுக்காகக் கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் 1903 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ரேடியத்தின் மூலம் புற்றுநோயையும், மேலும் பலவகைத் தோல் நோய்களையும் குணமாக்கலாம் என அவர்கள் கண்டறிந்தனர். அவர்கள் கண்டுபிடிப்பான ரேடியத்தை ஒரு நிறுவனம் பெருந்தொகை கொடுத்து வாங்க முன் வந்தது. ஆனால் அதனை ஏற்க மறுத்து கியூரி ரேடியத்தை அறிவியல் உலகுக்குக் கொடையாய் வழங்கினார்.

மேரி கியூரியின் கணவர் விபத்தில் இறந்தார் எனினும் மனந்தளராது ஆராய்ச்சியில் ஈடுபட்டு ரேடியத்தின் அணு எடையைக் கண்டுபிடித்தார். அதற்காக 1911ல் இரண்டாம் முறையாய் நோபல் பரிசு பெற்றார். 1934 ஆம் ஆண்டு மேரிகியூரி அம்மையார் இயற்கை எய்தினார்.

மேரிகியூரி அம்மையாரின் மகள் ஐரினும் மருமகன் ஜோலியாட் கியூரியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, செயற்கைக் கதிர் வீச்சுப் பற்றிய வேதியல் ஆய்வுக்காக 1935 இல் நோபல் பரிசு பெற்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நோபல் பரிசு பெற்ற

©KTBS Not to be republished

சாதனை, இன்று வரை முறியடிக்கப் படவில்லை.

**VI. வாழ்க்கைத் திறன் :**

துன்பமான நேரத்தில் அறவே கைவிட வேண்டியது.

1. புத்தகம் வாசிப்பதை, 2. உடற்பயிற்சி செய்வதை, 3 உண்பதை, 4. தொலைக் காட்சி பார்ப்பதை.

விடை ....................

நீங்கள் அதிகம் விரும்பும் இடம் எது ?

1. வகுப்பறை, 2. வீடு, 3. விளையாட்டுத் திடல், 4. திரை அரங்கு

விடை : ................................

**VII.** பாடப்புத்தகம் தவிர நீங்கள் விரும்பி வாசிக்கும் வேறு புத்தகம் / செய்தித்தாள் பற்றி எழுதுக (நான்கு வரிகளுக்கு மிகாமல்)

**VIII. சிறுகதை எழுதுதல் :**

சிங்கமும் சுண்டெலியும் கதையை உம் சொந்த நடையில் எழுதுக.

**IX. விழுமியக்கல்வி**

பெண்களுக்கு சம உரிமை அளிக்க வேண்டும்.

ஏன் ?

எதற்கு ?

எவ்வாறு ?

© KTBS Not to be re published

## X. பாடலைப் பாடி பொருள் அறிக

மல்லிகை முல்லை அந்திமந் தாரை
அல்லி வெண்சங்கு அனிச்சம் பன்னீர்
செண்பகம் ரோஜா செவ்வந்தி கமலம்
மலர்கள் நிறத்தால் மணத்தால் மாறினும்
இனத்தால் மலர்கள் இயற்கையின் கலைகள்.

மொழிவே றாயினும் மொழியும் உயிரின்
வழி ஒன் றாயின் வாழ்க்கையும் ஒன்றே !

## இலக்கணம்

### எண்

எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை. எண் ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

ஒரு பொருளை மட்டும் குறிக்கும் சொல் ஒருமை எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட பலபொருள்களைக் குறிக்கும் சொல் பன்மை எனப்படும்.

(எ-டு) ஆண், மயில், நாடு, அது - ஒருமை
ஆண்கள், மயில்கள், நாடுகள், அவை-பன்மை.

**வினாக்கள் :**

1) எண் என்றால் என்ன ?
2) எண் எத்தனை வகைப்படும் ? அவையாவை ?
3) ஒருமை மற்றும் பன்மைக்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.

©KTBS Not to be re published

# இடம்

இடம் -தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். இவற்றை மூவிடப் பெயர்கள் என்றும் கூறுவர்.

1) தன்மை இடப்பெயர் :

பேசுபவனைக் குறிக்கும் பெயர்ச்சொல் தன்மை இடப் பெயர் எனப்படும்.

(எ-டு) நான்-ஒருமை
நாம்-நாங்கள் - பன்மை

2) முன்னிலை இடப்பெயர் :

முன்னே இருந்து கேட்பவனைக் குறிக்கும் பெயர்ச் சொல் முன்னிலை இடப் பெயர் எனப்படும்.

(எ-டு) நீ - ஒருமை
நீர், நீங்கள் - பன்மை

3) படர்க்கை இடப்பெயர் :

தன்மை, முன்னிலை அல்லாத மற்ற பெயர்கள் எல்லாம் படர்க்கை இடப் பெயர் எனப்படும் சொல் பேசுபவனையும் கேட்பவனையும் குறிக்காமல், வேறு இடத்தில் உள்ள பொருட்களைப் படர்ந்து சென்று குறிப்பதால் படர்க்கை எனப்படுகிறது.

(எ-டு) சேரன், அன்னை, மரம் - ஒருமை
மக்கள், மரங்கள் - பன்மை.

**வினாக்கள் :**

1) இடம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2) மூவிடப் பெயர்களுக்கும் எடுத்துக்காட்டுக்கள் தருக.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be re published

பாடம் - 7

# நாட்டுப்புறப்பாடல் நாட்டுவளம்



மதுரைக்கு நேர்கிழக்கே
மழை பெய்யாக் கானலிலே
தங்கக் கலப்பை கொண்டு - சொக்கர்
தரிசுழுகப் போனாராம்.

முத்து விதை பாவி
மிளகு சம்பா நாத்து நட்டு - சொக்கர்
பவளக் குடை பிடித்துப்
பயிர் பார்க்கப் போனாராம்.

சரம் சரமா நெல்விளையும்
சந்நிதி போல் போர் ஏறும்
கட்டுக் கலங்காணும்
கதிர் உழக்கு நெல் காணும்
அடித்துப் பொலி தூற்ற
அதுவும் கலங்காணும்.

©KTBS Not to be re published

## குறிப்புரை :

நாட்டுப் புறப்பாடல்கள் ஏட்டில் எழுதாக் கவிதைகள் எனப்படும். இவை தொன்று தொட்டு நாட்டுப் புறங்களில் வழங்கி வருபவை. பிறர் பாடுவதைக் கேட்டுப் பாடுவதால் இதனைப் படைத்தவர் யார் எனக் கூற இயலாது.

நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு, நாட்டுவளம், வழிபாடு, வீட்டு நிகழ்ச்சிகள், போன்றவை விளக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் எளிய சொற்களால் அமைந்தவை. இவற்றில் பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்திருப்பதைக் காணலாம்.

## அருஞ்சொற்பொருள் :

தரிசு - உழுவதற்குப் பயனற்ற நிலம்

கானல் - நீர் போன்ற பொய்த் தொற்றம்

சரம் சரமா - தொடர்ந்து

உழக்கு - அளக்கப் பயன்படுத்துவது (முகத்தல் அளவை)

சந்நிதி - கோபுரம்

பொலி தூற்றல் - அறுவடையின் போது பதர் வேறாகவும் தானியங்கள் வேறாகவும் காற்றில் தூற்றுவது.

### பாடப்பொருள் பயிற்சி

## அ) கோடிட்ட இடங்களை நிரப்புக :

1) தங்கக் கலப்பை கொண்டு தரிசுழுகப் போனவர் ...........

2) சரம் சரமாக விளைந்தது ...........

3) அளக்கப் பயன்படுத்துவது ...........

©KTBS Not to be re published

**ஆ) ஒரு வாக்கியத்தில் விடைதருக :**

1) மதுரைக்கு நேர் கிழக்கே இருப்பது எது ?

2) சொக்கர் நாத்து நட்டது எதனை ?

3) பயிர் பார்க்கச் சொக்கர் எவ்வாறு சென்றார் ?

**இ) ஐந்து வரிகளில் விடை தருக :**

1) நாட்டுப்புறப் பாடலின் கருத்தை விளக்குக.

**ஈ) இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :**

பவளக் குடை பிடித்துப் பயிர் பார்க்கப் போனாராம்

## மொழிப்பயிற்சி :

**சேர்த்தெழுதுக :**

தங்கம் + கலப்பை =

பவளம் + குடை =

கலம் + காணும் =

பொய்யா + கானலிலே =

**பிரித்தெழுதுக :**

தரிசுழுக =

கட்டுக்கலம் =

எடுத்துக்காட்டைப் போன்று அடுக்குத் தொடர்களை எழுதுக :

எ.டு. : சரம் சரமா

1) ...................

2) ...................

3) ...................

4) ...................

5) ...................

6) ...................

©KTBS Not to be re published

**செயல்பாடு :**

1) இப்பாடலை இராகத்துடன் பாடிப்பழகுக.

ஆராரோ ! ஆரிரரோ ! என் கண்ணே
ஆராரோ ! ஆரிரரோ !
சீராரும் எங்கள் குல என் கண்ணே !
சிறுமணியே ! கண்ணுறங்கு !
கோவைக் கொடி கொண்டு என் கண்ணே !
கோபுரத்தில் தொட்டில் கட்டி
குழந்தை குரல் கேட்க, என் கண்ணே !
கோடி தவம் செய்தேனோ !

2) நீங்கள் அறிந்த பழமொழிகள் சிலவற்றை எழுதுக.

**பாடிப் பழகுக :**

**ஆயர்பாடி மாளிகையில்**



ஆயர்பாடி மாளிகையில்
தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ
அவன் - வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தை காட்டியபின்
ஓய்வெடுத்துத் தூங்குகிறான் தாலேலோ
ஓய்வெடுத்துத் தூங்குகிறான் தாலேலோ (ஆயர்)
நாதபழம் மீதில் அவன்
தாகமெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ
அவன் மோக நிலை கூட ஒரு
யோக நிலை போலிருக்கும்
யாரவரை தூங்கவிட்டார் தாலேலோ
யாரவரை தூங்க விட்டார் தாலேலோ (ஆயர்)

✽ ✽ ✽ ✽ ✽


©KTBS Not to be re-published

பாடம் - 8

# கத்தரிக்காய்க் குழம்பு (நாடகம்)

மாமன்னர் கிருஷ்ண தேவராயரின் தோட்டத்தில் புதுவகையான கத்தரிக்காய்ச் செடிகளைப் பயிரிட்டிருந்தனர். அந்தச் செடிகளில் காய்த்த காய்கள் மிகச் சுவையாக வெண்ணெய் போல் இருந்தன. அதனால் மக்கள் அனைவரும் அந்தக் கத்திரிக்காய்களின் சிறப்பைப் பற்றிப் பேசினார்கள். தோட்டத்தின் கத்திரிக்காய்களை யாரும் பறித்துச் செல்லாமலிருக்க அரசர் பலத்த காவல் போட்டார். மீறியாராவது காய்களைப் பறித்தால், பறித்தவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

**காட்சி - 1**



இடம் : அரச சபை

(பாத்திரங்கள் : அரசர், தெனாலிராமன், அமைச்சர் மற்றும் காவலர்கள்)

அரசர் : காவலரே இன்று நமது தோட்டத்தில் உள்ள கத்திரிக்காய்களைப் பறித்து அரண்மனையில் உள்ளவர்கள் அனைவருக்கும் சமைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்.



© KTBS Not to be republished

காவலர் : அப்படியே ஆகட்டும் அரசே !

(அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. அவ்விருந்தில் கத்திரிக்காய்ச் சாம்பார், கத்திரிக்காய்ப் பொறியல், கத்திரிக்காய்க் கூட்டு, கத்திரிக்காய்த் தொக்கு என விதவிதமாகக் கத்திரிக்காய் சமைத்துப் பறிமாறப்பட்டது.)

அமைச்சர் : என்னே ! அருமை ! கத்தரிக்காய் மிகவும் ருசியாக இருக்கிறதே!

தெனாலி : அரசே! கத்தரிக்காய் மிகவும் சுவையாக இருக்கிறது. இந்தக் காய்களின் சுவையைப் போன்று என் வாழ்நாளில் சுவைத்ததேயில்லை.

அரசர் : மிகவும் மகிழ்ச்சி! அதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

## காட்சி – 2

இடம் : தெனாலிராமன் வீடு

(பாத்திரங்கள் : தெனாலிராமன், அவருடைய மனைவி மற்றும் மகன்.)

மனைவி : வாருங்கள் ! ஏன் இவ்வளவு தாமதம் ? சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா ?

தெனாலி : வேண்டாம் ; வேண்டாம் ; அரண்மனையில் அரசர் அனைவருக்கும் விருந்து வைத்தார், நான் அங்கேயே சாப்பிட்டு விட்டேன்.

மனைவி : எதற்காக விருந்து ?

©KTBS Not to be republished

தெனாலி : ஒன்றுமில்லை, அரண்மனைத் தோட்டத்தில் புதுவகையான கத்தரிக்காய் பயிரிட்டிருக்கிறார்கள், அக்காய்கள் எல்லா வகைச் சமையலுக்கும் உகந்ததாக இருக்கிறது. சுவையும் மிக அருமையாக இருந்தது. அதற்காகத்தான் அந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.



மனைவி : நீங்கள் கூறும்போதே ஆவலை தூண்டுகிறதே ! எனக்கும் அந்தக் கத்தரிக்காயை சாப்பிட வேண்டும் போல ஆசையாக உள்ளது.
எப்படியாவது எனக்கு அக்காய்களைப் பறித்து வாருங்கள்.

(தெனாலிராமன் சில கத்தரிக்காய்களை அரண்மனைத் தோட்டத்திலிருந்து பறித்து வந்து கொடுத்தார். மனைவி சமைத்தாள்...)

மனைவி : கத்தரிக்காயை நாம் இருவர் மட்டும் சாப்பிட்டால் போதுமா ? திண்ணையில் உறங்கும் நம்முடைய மகனை எழுப்புங்கள், மூவரும் சேர்ந்து சாப்பிடலாம்.

தெனாலி : மகனே, எழுந்திரு ! சாப்பிடலாம்.

(மூவரும் சாப்பிட்டார்கள், சாப்பிட்டபின் அவர்களுடைய மகன் தூங்கிவிட்டான். தெனாலிராமனுக்கு ஒரு யோசனை எழுந்தது, மனைவியைக் கூப்பிட்டார்.)

©KTBS Not to be republished

தெனாலி : ஒரு வேளை நம்முடைய மகனை அழைத்து அரசர் கத்தரிக்காயைப் பற்றிக் கேட்டால் என்ன செய்வது ? அதற்கு என்ன செய்யலாம் ? நீ போய் கொஞ்சம் சர்க்கரை எடுத்துவா.

மனைவி : எதற்காக ?

தெனாலி : நீ போய்க்கொண்டு வா, சொல்கிறேன்.

(மனைவி சர்க்கரை கொண்டு வந்துகொடுத்தாள். சர்க்கரையை மகன் படுத்திருந்த இடத்தில் அங்குமிங்கும் இறைத்தான்.)

தெனாலி : மகனே ! எழுந்திரு ; சர்க்கரைமழை பொழிகிறது உள்ளே வந்து படு.

(மகன் உள்ளே வந்து படுத்துக் கொள்கிறான்)

**காட்சி – 3**

இடம் : அரச சபை

(பாத்திரங்கள் : அரசர், தெனாலிராமன் அவனது மனைவி, மகன் மற்றும் காவலர்கள்.)

(கத்தரிக்காய்களைப் பறித்தது தெனாலிராமன் என்பது அரசருக்குத் தெரிந்து விட்டது. தெனாலிராமனின் குடும்பத்தினர் அரசசபைக்கு வரவழைக்கப்பட்டனர்.)

அரசர் : தெனாலி ! உன்னைக் கத்தரித் தோட்டத்தில் பார்த்ததாக நம் காவலர்கள் கூறினார்களே !

தெனாலி : இல்லை அரசே ! நான் ஏன் அங்கு போகிறேன் !

அரசர் : நீ கத்தரிக்காய்களைப் பறித்துச் சென்றதாக எனக்குத் தெரிய வந்தது.

©KTBS Not to be re published

தெனாலி : அரசே ! நான் எதற்காகப் பறிக்க வேண்டும் ? உங்களிடம் கேட்டால் கொடுக்க மாட்டீர்களா ?

அரசர் : (தெனாலியின் மனைவியைப் பார்த்து)


நீயாவது உண்மையைச் சொல். நீங்கள் இருவரும் உண்மையைக் கூற மாட்டீர்கள், உங்கள் மகனைக் கேட்கிறேன், சிறுவனே ! நீயாவது உண்மையைச் சொல், நேற்று இரவு உங்கள் வீட்டில் என்ன குழம்பு ?

மகன் : கத்தரிக்காய்க் குழம்பு, அரசே !

அரசர் : (தெனாலியைப் பார்த்து) இப்பொழுது என்ன கூறுகிறாய் தெனாலி !

தெனாலி : சற்று இருங்கள் அரசே ! நான் கேட்கிறேன், மகனே எப்பொழுது கத்திரிக்காய்க் குழம்பு சாப்பிட்டாய் என்று சொல்ல முடியுமா ?

மகன் : அப்பா, நேற்று இரவு சர்க்கரை மழை பெய்ததே! அப்போதுதான் கத்தரிக்காய்க் குழம்பு சாப்பிட்டேன்.



©KTBS Not to be republished

தெனாலி : பார்த்தீர்களா, அரசே ! எங்காவது சர்க்கரை மழை பொழியுமா ? இவன் கனவில் எதையோ பார்த்து விட்டு உளறுகிறான் ; (தன் மகனைப் பார்த்துக் கொண்டே) இவன் எப்பொழுதும் இப்படித்தான் உளறுவான்.

அரசர் உண்மையை உணர்ந்து கொண்டார். இருப்பினும் தெனாலிராமனின் புத்திசாலித்தனத்தை அறிந்து, கோபத்தைவிட்டு, அவனுக்குப் பரிசுகள் பல கொடுத்துச் சிறப்பித்தார்.

**அருஞ்சொற்பொருள் :**

ருசியாக - சுவையாக

ஒப்புக்கொள் - ஏற்றுக்கொள்

அருமையாக - சிறப்பாக

பாத்திரங்கள் - கதைமாந்தர்கள்

பொழிதல் - சொரிதல், பெய்தல்.

**அ) பாடப் பொருள் பயிற்சி**

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1) மாமன்னர் ................ விருந்துக்கு ஏற்பாடு செய்தார். (தெனாலிராமன் / கிருஷ்ண தேவராயர்)

2) தோட்டத்தின் ................ காய்களை யாரும் பறித்துச் செல்லாமலிருக்கப் பலத்த காவல் போட்டார். (புதுவகையான / பழையவகையான)

3) தோட்டத்தில் ................ கத்தரிக்காய் பயிரிட்டிருந்தனர். (புதுவகையான / பழையவகையான)

4) சாப்பிட்டபின் தெனாலிராமனின் மகன் ................ (எழுந்துவிட்டான் / தூங்கி விட்டான்)

Not to be re published ©KTBS

5) அரசர் ................ உணர்ந்து கொண்டார். (உண்மையை / பொய்யை)

## II. ஒரு வாக்கியத்தில் விடைதருக.

1) அரசரின் தோட்டத்தில் என்ன செடிகளைப் பயிரிட்டிருந்தனர் ?

2) தெனாலிராமனின் மனைவி எதைப் பறித்து வரச் சொன்னாள் ?

3) மூவரும் சேர்ந்து என்ன சாப்பிட்டனர் ?

4) சர்க்கரை மழை பொழிய செய்தது யார் ?

## III. மூன்று வாக்கியங்களில் விடைதருக.

1) கத்தரிக்காயில் செய்யப்படும் விதவிதமான சமையல் என்னென்ன ?

2) தெனாலிராமனின் மனைவி எதற்கு ஆசைப்பட்டாள் ?

3) தெனாலிராமன் சர்க்கரை மழை பொழிகிறது என்று எதற்காகச் சொன்னான் ?

4) அரசருக்குத் தெனாலிராமனின் மகன் என்ன கூறினான் ?

## IV. ஐந்து வாக்கியங்களில் விடை தருக.

1) கிருஷ்ண தேவராயர் கத்தரிக்காய்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை மேற்கொண்டார் ?

2) அரண்மனையில் யார், யாருக்கு விருந்து வைக்கப் பட்டது? விருந்தில் என்னென்ன பரிமாறப்பட்டது ?

3) மூவரும் சாப்பிட்டபின்னர் தெனாலிராமன் செய்த உபாயம் யாது ?

4) தெனாலிராமன் வழக்கிலிருந்து எவ்வாறு தப்பினான் ?

©KTBS Not to be re published

## ஆ) மொழிப் பயிற்சி :

**I. சேர்த்து எழுதுக.**

1) கத்தரி + காய் =

2) சொல்லாமல் + இருக்க =

3) அரண்மனை + இல் =

4) அருமை + இல் =

5) அழைக்க + பட்டனர் =

**II. பிரித்து எழுதுக :**

1) பார்த்துக் கொண்டே

2) கடுமையான

3) சுவைத்ததேயில்லை

4) அதற்காகத்தான்

**III. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1) விருந்து

2) சுவையாக

3) புதுவகையான

4) மகிழ்ச்சி

5) ஏற்பாடுசெய்

## இ) செயல்பாடு :

1) உமக்குத் தெரிந்த காய்கறிகளின் படங்களை சேகரிக்கவும்.

2) உமக்கு தெரிந்த காய்கறிகளைப் பட்டியலிடவும்.

3) தெனாலிராமன் கதைகளில் ஒரு கதையைப் படித்து எழுதி வருக.

**கதையை படித்தறிக :**

### தங்க மாம்பழமும் சூட்டுக் கோலும்

விஜயநகரத்தை ஆண்ட அரசர் கிருஷ்ணதவேராயர் அவருடயை தாயார் மிகவும் உடல் நலமில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார். அரண்மனை வைத்தியர் நாடியைப் பார்த்து

© KTBS Not to be re published

‘‘அவர் பிழைப்பது கடினம் ; இவர் விரும்பியதைக் கொடுத்து மகிழச்செய்யுங்கள்’’ என்று கூறினார்.

அரசர் தம் தாயாரிடம் சென்று அவரின் விருப்பத்தைக் கேட்டார், அரசரின் தாயார் தமக்கு மாம்பழம் வேண்டுமென்று சைகை மூலம் தெரிவித்தார். அரசர் அமைச்சரிடம் தம் தாயாரின் விருப்பத்தைக் கூறினார் அது மாம்பழம் காய்க்கும் காலம் அல்ல ; என்றாலும் எல்லா நாட்டிற்கும் ஆட்களை அனுப்பினார்கள். சென்ற ஆட்கள் மாம்பழம் கொண்டு வருவதற்குள் அரசரின் தாயார் காலமானார்.

அரசரின் தாயார் ஆத்மா சாந்தியடைய வேண்டும் ; அதற்கு நூற்றெட்டுச் சந்நியாசிகளுக்குத் தங்க மாம்பழம் தர வேண்டும் என்று அமைச்சர் கூறினார். அரசரும் அவ்வாறே சந்நியாசிகளுக்குத் தங்க மாம்பழம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அதைப்பார்த்த தெனாலிராமன் அந்தப் பொருளற்ற செயலுக்கு முடிவுகட்ட எண்ணி, ‘‘கடந்த ஆண்டு இறந்துவிட்ட’’ என்தாயாரின் இறுதி ஆசையை நிறைவேற்ற முடியவில்லை ; அதனை நாளை நிறைவேற்ற இருக்கிறேன். நீங்கள் எல்லோரும் வாருங்கள்.’’ என்ற தங்க மாம்பழங்களை வாங்கியவர்களை அழைத்தார்.

அவர்கள் மறுநாள் தெனாலிராமன் வீட்டுக்குச் சென்றனர். அனைவரையும் ஓர் அறையில் அடைத்துவிட்டு ஒவ்வொருவரின் முதுகிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் தெனாலிராமன் சூடு போட்டார்.

அவர்கள் அரசரிடம் முறையிட்டனர். தெனாலிராமனை அரசர் விசாரித்தார். அதற்குத் தெனாலிராமன் ‘‘என்தாயாருக்கு வலிப்புநோய் ஏற்பட்டது. சூடுபோட்டால் நோய் நீங்கும் என்று கூறினார்கள். ஆனால் சூடுபோடுமுன் என் தாயார் இறந்துவிட்டார். மாம்பழம் சாப்பிடாத தங்கள் தாயாரின் ஆத்மா சாந்தி அடைய தங்க மாம்பழம் கொடுத்தீர்கள். ‘‘அதைப்போல இவர்களுக்குச் சூடு

©KTBS Not to be republished

போட்டதால் என் தாயாரின் ஆத்மா சாந்தி அடையும் அல்லவா !'' என்றார். அரசர் கிருஷ்ணதேவராயர் தம் தவற்றை உணர்ந்தார்.

**வாழ்க்கைத் திறன் :**

நண்பனுக்கு ஒரு விபத்து. அவனைப்பார்க்க ஒரு கி.மீ. தூரம் நடந்து செல்லவேண்டும். மழைவரும்போல் இருக்கிறது வீட்டிலோ குடையும் இல்லை நீங்கள் என்ன செய்வீர்கள் ?

1) இன்னொரு நாள் போகலாம் என முடிவெடுப்பேன்.

2) புறப்பட்டுப் போகலாம், மழை பெய்தால் திரும்பிவிடலாம்.

3) எப்பாடு பட்டும் நண்பனைச் சென்று பார்ப்பேன்.

விடை : ..............................................................................

கபடி விளையாடும்போது, நண்பனுக்கு பலத்த அடி. நீங்கள் என்ன செய்வீர்கள் ?

1) ஆசிரியர் பார்த்துக் கொள்வார். என்னால் என்ன செய்ய முடியும்.

2) மருத்துவமனை வரை நான் நண்பனுடன் செல்லுவேன். உடனிருப்பேன்.

3) கண்டும் காணாமலிருப்பேன்.

விடை : ..............................................................................

**விழுமிய கல்வி :**

நாட்டின் விடுதலைக்குப் போராடிய வீரர்களைப் பற்றி அறிதல்.

1) கொடி காத்த திருப்பூர் குமரன்.

Not to be re published ©KTBS

2) நேதாஜி சுபாஸ் சந்திர போஸ்

3) லாலா லஜபதி ராய்

## விடுகதை

1. ஊர் ஊராய்ச் சுற்றினாலும் உரிய
இடத்துக்கு வந்து சேருவான் - அவன் யார் ?

2. என் தாயோ கடல், தந்தையோ சூரியன்
என்னை விரும்பாத வீடே இல்லை - அது என்ன ?

3. என்னோடு இருக்கும் சிறுமணி எனக்குத் தெரியாது
ஆனால் உனக்குத் தெரியும். - அது என்ன ?

4. எத்தனை வேகமாகச் சுற்றினாலும்
தலை சுற்றாது இவனுக்கு - அவன் யார் ?

5. ஒருவனைக் கூப்பிட்டால்
ஊரையே கூட்டுவான் - அவன் யார் ?

6. ஓயாது இரையும் இயந்திரம் அல்ல
உருண்டோடி வரும் பந்தும் அல்ல - அது என்ன ?

7. ஓடுவான், பறப்பான்
ஒற்றைக் காலில் நிற்பான் - அது என்ன ?

8. ஐந்து நதிக்கு ஒரேபாலம் - அது என்ன ?

9. ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல் - அது என்ன ?

10. ஊருக்கெல்லாம் ஒரே கூறை - அது என்ன ?

விடைகள் : 1) தபால் ; 2) உப்பு ; 3) கண்மணி ; 4) காற்றாடி ; 5) காகம் ; 6) கடல் ; 7) கொக்கு ; 8) உள்ளங்கை 9) மூக்கு ; 10) வானம்.



©KTBS Not to be re published

# இலக்கணம்

**சொல் :**

சொல், இலக்கண வகையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

**1. பெயர்ச் சொல் :**

ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும். (எ-கா) கண்ணன், மரம், புலி, மயில்.

**2. வினைச்சொல் :**

ஒரு பொருளின் வினையைக் (செயலை அல்லது தொழிலைக்) குறிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.

(எ-கா) படிக்கிறான், மேய்கிறது, பறக்கிறது.

**3. இடைச்சொல் :**

பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் போலத் தனித்துவரும் ஆற்றலின்றி, அப்பெயரையாவது, வினையையாவது சார்ந்து பொருள்தரும் சொல் இடைச்சொல் எனப்படும். இது தனித்து நின்று பொருள்தராது.

வேற்றுமை உருபுகள், விகுதிகள், சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள் முதலியன இடைச் சொற்கள் ஆகும்.

(எ-கா) கந்தனைக் கண்டேன் - ஐ (வேற்றுமை உருபு) படிக்கிறான் - ஆன் (விகுதி)

**4. உரிச்சொல் :**

பெயர், வினைகளின் குணத்தை உணர்த்தும் சொல் உரிச்சொல் எனப்படும். செய்யுட்கே உரியனவாய் வருதலால் உரிச்சொல் எனப்

©KTBS Not to be re published

பெயர் பெற்றது. சில இடங்களில் உரை நடையிலும் வருவதுண்டு.

(எ-கா) சாலச் சிறந்தது : நனிதின்றான். இவற்றில் வரும் சால, நனி என்பன உரிச் சொற்களாகும். இவற்றின் பொருள் மிகவும் சிறந்தது ; மிகவும் தின்றான் என்பதாம்.

**வினாக்கள் :**

1) சொல் எத்தனை வகைப்படும் ? அவையாவை ?

2) பெயர்ச்சொல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

3) வினைச் சொல் என்றால் என்ன ?

4) இடைச்சொல் எவ்வாறு வரும் ?

5) உரிச்சொல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத்தருக.

**பெயர்ச் சொற்களின் வகை**

பெயர்ச்சொல் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழில் பெயர் என ஆறு வகைப்படும்.

**1) பொருட்பெயர்**

பொருட்களைக் குறிக்கும் சொற்கள் பொருள் பெயர் எனப்படும் (எ-டு) கல், மரம், புத்தகம்.

**2) இடப்பெயர்**

இடங்களைக் குறிக்கும் சொற்கள் இடப்பெயர் எனப்படும் (எ-டு) வீடு, பள்ளி, பெங்களூர்.

**3) காலப்பெயர்**

காலத்தைக் குறிக்கும் சொற்கள் காலப்பெயர் எனப்படும். (எ-டு) விநாடி, நிமிடம், மணி, திங்கள், ஆண்டு.

Not to be re published ©KTBS

### 4) சினைப்பெயர்

உறுப்புக்களைக் குறிக்கும் சொற்கள் சினைப் பெயர் எனப்படும். (சினை - உறுப்பு) (எ-டு) கண், தலை, கிளை, பூ, இலை.

### 5) குணப்பெயர்

பொருட்களின் குணத்தை உணர்த்தும் சொற்கள் குணப்பெயர் எனப்படும் இதனைப் பண்புப்பெயர் எனவும் கூறுவர். (எ-டு) இனிமை, அன்பு, வட்டம், கருமை, பசுமை.

### 6) தொழிற் பெயர்

தொழிலைக் (செயலைக்) குறிக்கும் சொற்கள் தொழிற்பெயர் எனப்படும் (எ-டு) படித்தல், ஓடுதல், சாப்பிடுதல், பாடுதல்.

**வினாக்கள் :**

1) பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
2) பொருட் பெயருக்கும் இடப்பெயருக்கும் எடுத்துக் காட்டுகள் தருக.
3) சினைப் பெயர் என்றால் என்ன ?
4) தொழிற்பெயருக்கு எடுத்துக் காட்டுத் தருக.
5) கீழ்வரும் சொற்கள் எவ்வகைப் பெயர்ச் சொல் என்பதைக் குறிப்பிடுக.


| | | |
|---|---|---|
| அ) மாம்பழம் | ஆ) வானம் | இ) அன்னை |
| ஈ) மார்கழி | உ) வெண்மை | ஊ) ஆடுதல் |

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be republished

## பாடம் - 9

# பாம்பா ? விழுதா ?



கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென்று குதித்ததைப் போல்
கிளை தொறும் குதித்துத் தாவி
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணியெண்ணி
உச்சி போய்த் தன் வால் பார்க்கும்



- பாரதிதாசன்

**ஆசிரியர் குறிப்பு :**

1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் நாள் புதுவையில் கனக சுப்புரத்தினம் பிறந்தார். இவர் தந்தை கனக சபை, தாய் இலக்குமி அம்மையார். இவர் பாரதியார் மீது கொண்ட அன்பினால் பாரதிதாசன் என்று புனை பெயர் சூட்டிக் கொண்டார். இவர் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி தமது 73-வது

©KTBS Not to be republished

வயதில் மறைந்தார். இவர் புரட்சிக் கவிஞர் எனப் புகழப்பட்டார். அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு பாண்டியன் பரிசு, இருண்ட வீடு என்பன இவரது படைப்புகள்.

**நூற் குறிப்பு :**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய அழகின் சிரிப்பு என்னும் பாடற் பகுதியிலிருந்து இப்பகுதி எடுக்கப் பட்டுள்ளது. இது நகைச்சுவை மிளிரும் பாடலாகும்.

**அருஞ்சொற் பொருள் :**

கிளையினில் - மரக்கிளையில் ; பிள்ளை - குழந்தை ; விழுது - ஆலமரத்தின் கிளைகளிலிருந்து விழும் வேர்.

**கருத்துரை :**

ஆல மரத்தில் அமர்ந்திருந்த குரங்கு தன் அருகே தொங்கிக் கொண்டிருந்த பாம்பை விழுது என நினைத்துத் தொட்டது. பாம்பு என்பதை உணர்ந்ததும் அதன் அச்சம் அதிகமாகியது. அங்கு தொங்கிய மர விழுதையெல்லாம் பாம்பு என எண்ணியது. கிளை தோறும் தாவித் தாவி உச்சிக் கிளையை அடைந்தது. அப்போதும் அதன் அச்சம் நீங்காது தனது வாலையும் பாம்போ என எண்ணிப் பார்த்தது.

## அ. பாடப்பொருள் பயிற்சி

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) கனக சுப்புரத்தினத்தின் புனை பெயர் என்ன ?
2) குரங்கு எந்த மரத்தில் இருந்தது ?
3) மரத்தின் அருகில் என்ன தொங்கிக் கொண்டிருந்தது ?
4) குரங்குக்கு ஏன் அச்சம் ஏற்பட்டது ?
5) குரங்கு எங்குச் சென்று அமர்ந்தது ?

©KTBS Not to be republished

**II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1) பாரதிதாசன் எப்பொழுது பிறந்தார் ?

2) பாரதிதாசனின் பெற்றோர் யாவர் ?

3) குரங்கு எதனைப் பாம்பு என்று நினைத்தது ?

4) குரங்கு எவ்வாறு உச்சிக் கிளையை அடைந்தது ?

**III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) ஆலமரத்திலிருந்த குரங்கு அடைந்த அச்சத்தைப் பாரதிதாசன் எவ்வாறு கூறியுள்ளார் ?

## ஆ. மொழிப் பயிற்சி

**செயல்பாடு - 1 :** நகைச்சுவை அடங்கிய பாடலைப் போன்றே பிற பாடல்களை அறிக.

**செயல்பாடு - 2 :** வார்த்தை விளையாட்டு.

எ.கா : தொட்ட பிள்ளை
பிள்ளைப்பேச்சு
பேச்சுப் போட்டி
போட்டி முடிவு
முடிவுசெய்க

மேற்கண்ட எடுத்துக்காட்டைப் போல வார்த்தைத் தொடரை அமைத்தெழுதுக.

## ஈ வாழ்க்கைத் திறன்

1) விலங்குகள் வாயிலாக நீதிக் கதைகள் உள்ளனவற்றைப் படித்துக் கருத்துக்களை கலந்துரையாடல் செய்க.

## உ. விழுமிய கல்வி


காட்டு வளம் பெருக மாணவர்களின் பங்கு எவ்வகையில் பயன்படும் என வகுப்பறையில் சக மாணவர்களுடன் கலந்துரையாடல் செய்க.

©KTBS Not to be republished

பாடம் - 10

# செங்காவிச் சிங்கம் - விவேகானந்தர்

''ஒருவன் சில பரீட்சைகளில் தேர்வு பெற்றுச் சொற்பொழிவு செய்யும் திறன் உள்ளவனாக இருந்தால்தான் அம்மனிதனைப் படித்தவன் என்று கூறுவார்கள். மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் தகுதியைப் பெறுவதில்பாமர மக்களுக்கு உதவி புரியாத கல்வியை, மக்களிடம் நற்குண நலன்களையும், ஈகை தன்மையையும், தைரியத்தையும் ஊட்டி வளர்க்காத கல்வியைக் கல்வி என்று சொல்லுவதில் பொருள் இல்லை. எவனொருவன் தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக் கொள்ளும் திறன் உடையவனோ, அவனே உண்மையான கல்வியை அடைந்தவனாவன்''.



கல்வியின் நிலையைக் காவியுடை அணிந்த ஒரு சாமியார் சொன்னார் என்றால் பலருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், உண்மையில் இதைவிடப் பல அரிய கருத்துக்களை, கல்வியின் சிறப்புக்களைச் சொல்லிய விவேகானந்தரை 'செங்காவிச் சிங்கம்' என்று அனைவரும் அழைக்கும் அளவுக்கு விவேகமான சிந்தனைச் சார்ந்த அறிவுரைகள் அவரிடம் கொட்டிக்கிடக்கின்றன.

விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திர நாதர். அவர் 1863-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் நாள் விசுவநாதர் -புவனேஸ்வரி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

©KTBS
Not to be re published

சிறு வயதிலிருந்தே எதனையும் ஆராய்ந்து அறிகின்ற போக்கு நரேந்திர நாதருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. இராமகிருஷ்ணரின் சீடரான நரேந்திர நாதர் மற்ற சீடர்களிடமிருந்து வேறுபட்டு விவேகமிக்கவராகத் திகழ்ந்தார். அதனால் நரேந்திரருக்கு 'விவேகானந்தர்' என்று இராமகிருஷ்ணர் பெயர் சூட்டினார். இந்தப் பெயரே அவருக்கு நிலை பெற்றுவிட்டது.

1885-ஆம் ஆண்டு இராமகிருஷ்ணர் மறைந்ததும் விவேகானந்தர் காசி, லக்னோ, ஆக்ரா, பிருந்தாவனம், ஹத்ராஸ், ரிஷிகேஷ் மற்றும் பிரானாகோர் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

மற்றொரு முறை விவேகானந்தர் யாத்திரை புறப்பட்டபோது இராமேஸ்வரத்திற்கு வந்தார். இந்த ஆன்மீக யாத்திரைதான் விவேகானந்தரின் அறிவாற்றலை வெளிப்படுத்துவதற்கும், உலக மேதைகள் இந்திய நாட்டின் வலிமையைப் புரிந்து கொள்வதற்கு காரணமாயின. அப்போது, இராமநாதபுரத்தில் மன்னராக இருந்தவர் பாஸ்கர சேதுபதி அவர் ஆன்மீகத்தில் அறிவாற்றல் மிக்கவராகவும் சொற்பொழிவு நிகழ்த்துவதில் வல்லவராகவும் திகழ்ந்தார். அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடக்க இருந்த ஆன்மீக மாநாட்டில் இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள மன்னருக்கு அழைப்பு வந்த வேளையில் தான் விவேகானந்தர் இராமநாதபுரம் வந்திருந்தார். விவேகானந்தருக்கும் மன்னருக்கும் அறிமுகம் ஏற்பட்டது. அறிமுகம் நட்பாக மாறியது. விவேகானந்தரின் அறிவாற்றலும் ஆன்மீகச் சிந்தனையும், தெளிந்த பார்வையும், தேர்ந்த அறிவும் மன்னரை வியக்க வைத்தது. அதனால் தம்மை விடச் சிறந்தவரான விவேகானந்தர் சிகாகோ செல்வதே சிறந்தது என்று முடிவு செய்து, விவேகானந்தரின் சம்மதத்தைக் கேட்டார். யோசித்துச் சொல்வதாகக் கூறிய விவேகானந்தர், அமெரிக்கா செல்வதற்கு ஒப்புக் கொண்டார்.

Not to be re published ©KTBS

1893-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாள் அன்று அமெரிக்கா புறப்பட்ட விவேகானந்தர், ஜூலை மாதத்தில் அமெரிக்காவில் உள்ள சிகாகோவை அடைந்தார். உலக ஆன்மீக மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன் 'இந்தியப் பெண்கள்' என்ற தலைப்பில் விவேகானந்தரின் சொற்பொழிவு அமெரிக்கா மண்ணில் ஒலித்தது. இது விவேகானந்தரின் முதல் முழக்கமாகும்.

செப்டம்பர் 11 - ஆம் தேதி உலக ஆன்மிக மாநாட்டில் அவர்பேச மேடை ஏறியபோது அவருடைய காவி உடையும், தலப்பாகையும் மேலை நாட்டவர்களுக்குச் சிரிப்பை உருவாக்கியது. எடுத்த எடுப்பிலேயே 'சகோதர சகோதரிகளே !' என்று தம் சொற்பொழிவைக் கம்பிரமாகத் தொடங்கியதும், ஏளனம் செய்தவர்கள் வாய் மூடினர். ஆடையைக் கண்டு அருவருப்படைந்தவர்கள் வாய் மூடினர். ஆச்சரியப் பட்டனர். மேடை முழக்கத்திலும் அவரே தனித்து வென்றார். பேச்சு முடிந்தபின் ஒரு கூட்டமே அவரைப் பின் தொடர்ந்தது.

1897 - ஆம் ஆண்டு ஜனவரியில் இராமேஸ்வரத்திற்கு வந்தார். அவர் வருவதை அறிந்த சேதுபதி மன்னர் ; கப்பலில் வந்து இறங்கிய விவேகானந்தருடைய பாதங்களை முதன் முதலில் தம் தலையில் வைத்து விட்டுத்தான் மண் மீது பட வேண்டும் என்றார். ஆனால், மனித நேயம் மிக்க விவேகானந்தர் அதற்கு இணங்கவில்லை.

விவேகானந்தர் தம் காலை மண்ணில் வைத்த அந்த இடத்தில் மன்னர் குந்தக் காலிட்டு உட்கார்ந்ததால் 'குந்தக்கால்' என்று பெயர் வந்தது.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் தியானம் செய்த இடத்தில் ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. சென்னையில் விவேகானந்தர் தங்கிய இடம் 'விவேகானந்தர் நினைவு' இல்லமாக இன்றளவும் காட்சியளிக்கிறது.

©KTBS Not to be republished

உலக முழுவதும் இந்தியாவின் சிறப்பையும், இந்து மதத்தின் மேன்மையையும், முழங்கிய செங்காவிச் சிங்கம் விவேகானந்தர் 1902-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4-ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## I. அருஞ் சொற் பொருள் :

(1) திறன் - ஆற்றல் ; (2) சீடர் - மாணாக்கர் ; (3) சூட்டுதல் - வைத்தல் (4) வலிமை - உறுதி ; (5) யோசித்து - சிந்தித்து ; (6) முழக்கம் - பேரொலி ; (7) நேயம் - அன்பு ; (8) இணக்கம் - விருப்பம்.

## அ) பாடப் பயிற்சி :

1) 'செங்காவிச் சிங்கம்' என்று யாரை அழைக்கின்றனர் ?

2) நரேந்திர நாதரின் குருநாதர் யார் ?

3) விவேகானந்தரின் இயற் பெயர் யாது ?

4) விவேகானந்தர் எந்த நாட்டிற்குச் சென்றார் ?

## II. சிறு வினா :

1) 'விவேகானந்தர்' எப்போது பிறந்தார் ? அவருடைய பெற்றோர் யாவர் ?

2) நரேந்திர நாதரின் பட்டப் பெயர் என்ன ? யார் சூட்டினார்? ஏன் ?

3) விவேகானந்தர் யாத்திரைக்குச் சென்ற இடங்கள் யாவை ?

4) விவேகானந்தரின் முதல் முழக்கம் பற்றி எழுதுக.

## III. பெரு வினா :

1) விவேகானந்தரின் குண நலன்களை எழுதுக.

2) உலக மாநாட்டில் நடந்த நிகழ்வுகளை எழுதுக.

3) கல்வியால் ஒருவன் பெறும் திறன் என்னென்ன ?

©KTBS Not to be republished

**IV. கோடிட்ட இடங்களை நிறைவு செய்க :**

1) சிறு வயதிலிருந்தே எதையும் ஆராய்ந்து அறிகின்ற போக்கு ............. க்கு இருந்தது.

2) ............. மிக்கவராக இருந்ததால் ‘விவேகானந்தர்’ என்ற பெயர் நரேந்திரருக்கு சூட்டப்பட்டது.

3) இந்து மதத்தின் பிரதிநிதியாக கலந்துக் கொள்ள ............. மன்னருக்கு அழைப்பு வந்தது.

4) அமெரிக்கா செல்வதாக விவேகானந்தர் ............. லிருந்து அறிவித்தார்.

5) குந்தக்கால் என்னுமிடம் ............. ஊரில் உள்ளது.

**V. பொருத்துக :**

| | | |
|---|---|---|
| சகோதர | - | பொழிவு |
| செங்காவி | - | சகோதரி |
| தலைப் | - | சிங்கம் |
| சொற் | - | பாகை |

**VI. இடம் சுட்டுக :**

1) ‘‘மனித நேயம் கொண்ட விவேகானந்தர்’’

2) ‘‘தலைப்பாகையும் மேலை நாட்டவர்களுக்குச் சிரிப்பை உருவாக்கியது’’

**ஆ. மொழிப் பயிற்சி :**

**1) சேர்த்தெழுதுக :**

செங்காவி + சிங்கம் ; சீடர்களிடம் + இருந்து ; முழக்கம் + ஆகும் ; ஆச்சரியம் + பட்டனர் ; காலை + பதித்து.

Not to be re published ©KTBS

2) **பிரித்தெழுதுக :**

உட்கார்ந்திருந்தால் ; காட்சியளிக்கிறது ; அறிவாற்றல், காரணமாயின ; இன்றளவு.

3) **எதிர்ச் சொல் :**

அமைதி ; நினைத்தல் ; இறங்கிய ; தொடக்கம்

4) **வாக்கியத்தில் அமைக்க :**


குண நலன் ; சொற்பொழிவு ; அறிவாற்றலை ; ஆன்மீக சிந்தனை அறிவுரைகள் ; சிறப்பு.

**செயல்பாடு :**

1) பாடப்பகுதியில் இடப்பெற்றுள்ள வட மாநிலங்களை இந்திய வரை படத்தில் குறிப்பிடுக.

2) டாக்டர் அப்துல் கலாம், டாக்டர் இராதகிருஷ்ணர், அறிஞர் அண்ணா போன்றவர்கள் மாணவர்களுக்கு அளித்த சில அறிவுரைகளை தொகுத்து எழுதி வகுப்பு அறையில் படிக்கவும்.

**II. பூவின் இதழ்களில் உள்ள எழுத்துகளில் மறைந்துள்ள பெயர்களை எழுதுக.**




©KTBS Not to be re published

## ஈ. வாழ்க்கைத் திறன்கள் :

பேச்சுத்திறன் (இனியவை கூறல்)

வெற்றிக்கு அடிப்படையானது பேச்சுத்திறன், பேச்சுத்திறன் பலவழிகளில் வெளிப்படும். இனிமையாய் பேசுவது ஒரு வழி. இனிய பேச்சு நமக்கும் வெற்றி தரும், பிறருக்கும் வெற்றி தரும்.

அ) பின் வரும் சொற்களில் பிறரை முகம் மலரவைக்கும் சொற்களைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| ஆகா | நன்றி | சகிக்கவில்லை |
| அட, ச்சே | நன்று | அருமை |
| ஓ | சுமார் | மோசம் |

ஆ) அடுத்து எப்போது பார்க்கலாம் என்று உறவினர் கேட்கிறார் அதற்கு பின் வருவனவற்றுள் எது இனிய பேச்சு ?

அ) பிழைச்சிருந்தால் பார்க்கலாம் !

ஆ) நம்ம நினைக்கிறது எங்கே நடக்கிறது ?

இ) கட்டாயம், விரைவில் சந்திப்போம்.

## உ. விழுமிய கல்வி :

1) உயிர் இரக்கம்.

நீ பள்ளிக்குச் செல்லும் வழியில் ஒரு புறாவை பல காக்கைகள் கொத்திக் கொண்டிருக்கின்றன. அப்பொழுது நீ என்ன செய்வாய் ?

புறாவை காப்பேன்

வேடிக்கைப் பார்ப்பேன்

2) பார்வையற்றவர் ஒருவர் சாலையைக் கடக்க முடியாமல் அவதிப்படுகிறார்.

©KTBS Not to be re published

சாலையைக் கடக்க உதவுவாயா ? அல்லது எனக்கென்ன வந்தது என்று செல்வாயா ?

## இலக்கணம்

### திணை

உலகப் பொருள்கள் இருவகை. உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள். உயிருள்ள பொருள்களில் பகுத்தறிவுடையன உயர்வாகக் கருதப்படுகின்றன. அவை உயர்திணை எனப்படும்.

(எ.கா) மக்கள், தேவர், நரகர்.

உயர்திணை அல்லாத எல்லாப் பொருள்களும் அஃறிணை எனப்டும்.

(எ-கா) கல், மரம், மாடு, பறவை)

**வினாக்கள்**

1) திணை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

2) உயர்திணை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத்தருக ?

3) அஃறிணை என்றால் என்ன ? எடுத்துக் காட்டுத்தருக ?

### பால்

பால் என்பது, பகுப்பு, பிரிவு எனப் பொருள் தரும்.

பால் ஐந்து வகைப்படும் - ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் எனப்படும்.

ஆண்பால், பெண்பால், பலர் பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்குரிய பாலாகும்.

ஒன்றன்பால், பலவின் பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்குரிய பாலாகும்.

©KTBS Not to be re published

**1) ஆண்பால் :**

ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால் எனப்படும்.

(எ-டு) மாணவன், முருகன், அரசன்.

**2) பெண்பால் :**

பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால் எனப்படும்.

(எ-டு) மாணவி, வள்ளி, அரசி.

**3) பலர் பால் :**

பலரைக் குறிக்கும் சொல் பலர்பால் எனப்படும் - (பலர் என்பது ஆண்கள் பலரையோ, பெண்கள் பலரையோ ஆணும், பெண்ணும் சேர்ந்த பலரையோ குறிக்கும்)

(எ-டு) ஆண்கள், பெண்கள், மக்கள்.

**4) ஒன்றன் பால் :**

அஃறிணையில் ஒரு பொருளை மட்டும் குறிக்கும் சொல் ஒன்றன் பால் எனப்படும்.

(எ-டு) மரம், மாடு, வீடு

**5) பலவின் பால் :**

அஃறிணையில் பலவற்றை (ஒன்றுக்கு மேற்பட்ட வற்றைக் குறிக்கும் சொல் பலவின் பால் எனப்படும்.

(எ-டு) மரங்கள், மாடுகள், வீடுகள்.


**வினாக்கள் :**

1) பால் என்பதன் பொருள் யாது ?
2) பால் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3) உயர் திணைக்குரிய பால்கள் யாவை ?
4) அஃறிணைக்குரிய பால்கள் யாவை ?
5) பலர் பால், பலவின் பால் - எடுத்துக்காட்டுத் தருக.

©KTBS Not to be re published

தனிப்பாடல்


# 11. பாணனும், பாடினியும்



(முற்காலத்தில் பல்வேறு பாடல்களைப் பாடும் வல்லமை உடைய பாணர்கள் வாழ்ந்து வந்தனர், அவர்கள் அரசர்களையும் செல்வந்தர்களையும் வள்ளல் பெருமான்களையும் புகழ்ந்துபாடி பரிசில் பெற்று தம் வாழ்க்கையைக் கழித்தனர். அவ்வாறு இராமன் என்னும் வள்ளலைப் புகழ்ந்துபாடி யானையைப் பரிசாகப் பெற்றான் ஒரு பாணன். தன் இல்லக்-கிழத்தியான பாடினியிடம் யானையைப் பரிசாகப் பெற்றதைக் கூறுகிறான். அவள் யானைக்கு பல விதமான பொருள் கொண்ட வார்த்தைகளை அவனிடம் கூறுகிறாள்)

இம்பர்வான் எல்லை இரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா நீ என்றாள் பாணி
வம்பதாம்க ளப மென்றேன் பூசும் என்றாள்
மாதங்கம் என்றேன்யாம் வாழ்ந்தேமென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள்.

Not to be re published ©KTBS



பகடென்றேன் உழுமென்றாள் பழனந் தன்னைக்
கம்பமா என்றேன்நற் களியாம் என்றாள்.
கைம்மா என் றேன்சும்மா கலங்கி னாளே

- அந்தகக்கவி வீரராகவர்

ஆசிரியர் குறிப்பு :

தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள புதூரில் பிறந்து பொன் விளைந்த களத்தூரில் வாழ்ந்தவர். சீட்டுக்கவி பாடுவதில் மிகவும் வல்லவர். நகைச் சுவைப் பாடல்களை இயற்றுவதிலும் சிறந்து விளங்கினார் இவர் எழுதிய நூல்கள் சந்திரவாணன் கோவை திருக்குழுக் குன்றப் புராணம், சேயூர் கலம்பகம், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் முதலியன. இவர் பதினேழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தார்.

**நூற் குறிப்பு :**

இப்பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு, இதில் நூற்றுப்பத்துப் புலவர்கள் பாடிய ஆயிரத்து நூற்றுப் பதின்மூன்று பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

©KTBS Not to be re published

**அருஞ்சொற் பொருள் :**

இம்பர் - இவ்வுலகம் ; வான் - வானம் ; கொண்ர்ந்தாய் - கொண்டுவந்தாய் ; யானைக்கு வழங்கும் வேறு பெயர்கள் - களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா ; களபம் - சந்தனம் ; மாதங்கம் - பொன், வேழம் - கரும்பு ; பகடு - எருது, ஆண்யானை, கம்பமா, - கம்பு மாவு, பூசும் - பூசிக்கொள் ; உழு - நிலத்தை உழுதல்.

**கருத்துரை :**

பாணன் மனைவியாகிய பாடினி, ''பாணரே இந்நிலவுலகையும், வானுலகையும் தனது புகழுக்கு எல்லையாக உடையவன் இராமன். அவ்வள்ளலைப் பாடி, நீ என்ன பரிசு கொண்டுவந்தாய் ?'' எனக் கேட்டாள். அதற்குப் பாணன், தான் கொண்டு வந்தது யானை எனக்கூறக் கருதி களபம் என்றான். பாடினி அவன் கூறியதற்குச் சந்தனம் எனப் பொருள் கொண்டு பூசிக் கொள்ளுங்கள் என்றாள், யானையைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய மாதங்கம் என்று கூறினான். அதற்கு அவள் பொன் எனப் பொருள் கொண்டு இனி மகிழ்வுடன் வாழ்வோம் என்று கூறினாள். அடுத்து வேழம் என்று கூறினான். அதற்கு அவள் கரும்பு எனப் பொருள் கொண்டு தின்னுங்கள் என்றாள். அவன் பகடு என்று கூற அவளோ அதனைக் கொண்டு வயலை உழும் என்று கூறினாள். அவன் கம்பமா என்று கூற, அவளோ கம்புமாவு எனக் கருதிக் கொண்டு, நல்ல களியாகும் என்றாள். அவன் கைம்மா என்று சொல்ல அவள் ஒன்றும் பேசாமல் திகைத்து நின்றாள்.

**பாடப் பொருள் பயிற்சி :**

1) அந்தகக்கவி வீரராகவர் எங்கு பிறந்தார் ?

©KTBS Not to be republished

2) பாணன் யாரிடம் யானையைப் பரிசாகப் பெற்றான் ?

3) பாடினி பாணனிடம் கேட்டது யாது ?

**சிறுவிடை வினாக்கள் :**

1) அந்தகக் கவி வீரராகவர் சிறு குறிப்பெழுதுக.

2) யானைக்கு வழங்கும் வெவ்வேறு பெயர்கள் யாவை ?

3) பாணன் கூறியதற்கு பாடினி கொண்ட பொருள் யாது ?

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) இராமன் ............. .............. தனது புகழுக்கு எல்லையாக உடையவன்.

2) மாதங்கம் என்று கூறியதும் பாடினி கொண்ட பொருள் ..............

3) கம்பமா என்பது ..............

4) பகடென்றேன் ............. என்றாள்.

5) கம்பமா என்றேன் ............. என்றாள்.

**பொருத்தி எழுதுக :**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1) | களபம் | அ) | கம்பு மாவு |
| 2) | மாதங்கம் | ஆ) | கரும்பு |
| 3) | வேழம் | இ) | சந்தனம் |
| 4) | பகடு | ஈ) | பொன் |
| 5) | கம்பமா | உ) | எருது |

©KTBS Not to be re published

## மொழிப்பயிற்சி :

### சேர்த்தெழுதுக

1) களபம் + என்றேன்
2) வேழம் + என்றேன்
3) உழும் + என்றேன்
4) இம்பர் + வான்

### பிரித் தெழுதுக :

1) என்கொணர்ந்தாய்
2) தின்னுமென்றாள்

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be re published

# 12. நாட்டு வாழ்த்து



மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறிதிலையே
இன்னறு நீர்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பினுக் கெதிரேது வேறே
பன்னிரு உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதிது நூலிது போலே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.

- பாரதியார்



©KTBS Not to be re published

**ஆசிரியர் குறிப்பு :**

பாரதியார், தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுரம் என்ற ஊரில் 11-12-1882 அன்று பிறந்தார். பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மாள். 1893-ஆம் ஆண்டு எட்டையபுர அரசவைப் புலவராக விளங்கினார். இவர் மனைவி பெயர் செல்லம்மாள். இவர் 1921 ஆம் ஆண்டு, செப்டம்பர் 11 இல் காலமானார். நாடு, மொழி பற்றிய எழுச்சி மிக்க பாடல்களையும், பக்திப் பாடல்களையும் எழுதியுள்ளளார்.

**நூல் குறிப்பு :**

பாரதியார் பாடல்கள் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. பாரதியார் எழுதியுள்ள நாட்டுவாழ்த்துப் பாடல்கள் எளிமையும், இனிமையும், பொருள் செறிவும் கொண்டவை. மக்களிடையே நாட்டுப்பற்றை ஊட்டுவனவாக அமைந்துள்ளன.

**அருஞ்சொற்பொருள்**

இன்னறு - வற்றாத, இனிய

மாண்பு - புகழ், மேன்மை

பார் - உலகம்

மன்னும் - மிகவும்

ஈடே - ஒப்பானது

**கருத்துரை :**

உலகில் நிலைபெற்ற இமயமலை எங்கள் மலை. இது போல் சிறப்பு மிக்க மலை உலகில் வேறேதும் இல்லை. இனிய நீரினையுடைய கங்கை ஆறு எங்கள் ஆறு. இதன் சிறப்பினுக்கு எதிரானது வேறு எதுவும் இல்லை. பன்னிரண்டு உபநிடதங்களும் எங்கள் நூலாகும். இது போல், சிறப்புடையது உலகில் எந்த நாடும் இல்லை. பொன்போல ஒளிருகின்ற பாரத நாடு எங்கள் நாடு. ஈடில்லாத இந்நாட்டை, நாம் அனைவரும் போற்றுவோம்.

©KTBS Not to be re published

## பாடப்பொருள் பயிற்சி

### அ) பொருத்துக

| | | |
|---|---|---|
| 1) | இமயமலை | பாரதநாடு |
| 2) | கங்கை | மாமலை |
| 3) | உபநிடதங்கள் | இனிய நீர் |
| 4) | பொன்னொளிர் | பன்னிரண்டு |

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக :

1) நமது நாட்டின் மிகப் பெரிய மலை ................
2) இனிய மற்றும் வற்றாத நதி ................
3) உபநிடத நூல்களின் எண்ணிக்கை ................

### இ) மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

1) இமய மலையின் சிறப்பு என்ன ?
2) கங்கை ஆற்றின் புகழை ஆசிரியர் எவ்வாறு கூறியுள்ளார் ?
3) பாரத நாடு எப்படிப்பட்டது ?

### ஈ) பத்து வரிகளில் விடையளிக்க :

1) நமது நாட்டின் பெருமைகளாகப் பாரதியார் கூறுவன யாவை ?

## மொழிப் பயிற்சி

### சேர்த்தெழுதுக :

| | |
|---|---|
| கங்கை + ஆறு = | நாடு + எங்கள் = |
| பிறிது + இலையே = | நூல் + இது = |

### பிரித்தெழுதுக :

| | |
|---|---|
| இங்கிதன் = | மாண்பினுக்கெதிர் = |
| பொன்னொளிர் = | எதிரேது = |

©KTBS Not to be republished

**இணைச் சொற்களை எழுதுக :**

எ.டு : மீதிது - ஏதிது

நூலே -

நாடே -

வேறே -

**வாக்கியத்தில் அமைக்க :**

இன்னறு - பொன்னொளிர் -

மாண்பு - பார்மிசை -

**கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல, கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் வேறுபாடுகளை அறிந்து, பொருளை எழுதுக :**

**எ.டு :** வெல் - வெற்றிகொள் வேல் - ஆயுதம்

கெடு - கேடு -

கொடு - கோடு -

தொடு - தோடு -

கொல் - கோல் -

**செயல்பாடு-1 :** நமது நாட்டிலுள்ள இயற்கை வளங்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி பத்து வரிகளில் கட்டுரை வரைக.


**செயல்பாடு-2 :** வேறொரு நாட்டுப்பற்றுப் பாடலைத் தொகுத்து எழுதி, வகுப்பறையில் பாடிக் காண்பிக்கவும்.

**செயல்பாடு-3 :** இமயமலை, கங்கையாறு, உபநிடதங்கள், விளைபொருட்கள், சமயங்கள், பழமையான கோயில்கள் போன்றவற்றுள், ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து வகுப்பறையில் பேசுக.

✾ ✾ ✾ ✾ ✾

©KTBS Not to be re published


# 13. கல்வி அழகே அழகு



கல்வி என்பது கல்லிப் பெறுவது என்பதாகும். கல்லுதல் என்பது தோண்டுதலாகும். ஊற்றைத் தோண்டி நீரைப் பெறுவது போல், பாறையை உடைத்துத் தங்கம் பெறுவது போல் ஆய்ந்து, அறிந்து தேடிக் கொள்வதே கல்வியாகும்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு என்பது திருவள்ளுவர் வாக்கு.

மணலைத் தோண்டிய அளவிற்கே ஊற்றில் நீர் ஊறும். அதுபோல், முயன்று கற்ற அளவிற்கே முதிர்ந்த அறிவு உண்டாகும்.



**கல்விச் செல்வம் :**

கல்வி என்பது செல்வமா? ஆம். செல்வமே தான். செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்.

Not to be re published ©KTBS

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றை யவை''.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்ற பொருட்கள் செல்வம் அல்ல என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

செல்வம் என்பது எது ? மனதிற்கு நிறைவு தருவது எதுவோ, அதுவே செல்வம். கல்வியைப் போன்று மன நிறைவைத் தரும் ஒன்று, இவ்வுலகில் இல்லவே இல்லை. ஆதலால், கல்வியே சிறந்த செல்வம்.

**கல்வியே கண்கள் :**

மனிதன் எண் சாண் உடையவன். எண் சாண் உடலுக்கு முதன்மை வாய்ந்தது, ஒரு சாண் அளவுள்ள தலை. அவ்வொரு சாண் தலையிலும் ஒரு விரல் அளவுடைய கண்களே முதன்மையானவை. ஆதலால்தான் கல்வியின் சிறப்பினைக் சான்றோர்கள் கண்களுக்கு உவமையாகக் கூறினார்கள்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது ஔவையார் மொழி.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு - திருவள்ளுவர்.

கண் போன்றது கல்வி. கற்றவனுடைய கண்களே கண்கள். கல்லாதவனுடைய கண்கள் கண்களல்ல. அவை புண்கள் ஆகும்.

கற்றவர் அகக்கண் உடையவர். அக்கண் பிற உயிர்களுக்குத் துன்பம் தராது. துன்பப்படுபவரைப் பார்க்கப் பொறுக்காது. தான் பட்ட துயர் போலத் துடிக்கும். அகக் கண் பெறாத, புறக் கண்ணால் ஆகும் பயன் என்ன ?

Not to be republished ©KTBS

**எப்படிக் கற்க வேண்டும் ?**

நீர் வேட்கை மிகுந்த போது நீர் பருகுவதற்கு ஆவல் எழுவது போலவும், பசி வாட்டும் போது உண்ணுவதற்கு ஆவல் படுவது போலவும், கற்பதில் ஆர்வம் செலுத்த வேண்டும். விருப்பமற்று செய்யும் எந்த எளிய செயலும் மிகக் கடினமானதாகி விடும். விளையாட்டு, திரைப்படம், போன்றவற்றில் உள்ள ஈடுபாடு கல்வியிலும் ஏற்பட வேண்டும். ''புல்லைக் காட்டிக்கொண்டு போனால் அவனைப் பின்பற்றியோடும் மாட்டைப் போல நல்லறிவைத் தேடி நான் ஓடுகிறேன்'' என்றார் சாக்ரட்டீசு.

''நல்ல நூல்களை எனக்குத் தேடித் தருபவர் எவரோ அவரே எனக்கு நண்பர்'' என்று கூறிய பண்பாளர் ஆபிரகாம்லிங்கன்.

நீரும் பாலும் கலந்து இருந்தாலும் நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகும் திறன் படைத்தது அன்னம் என்ற பறவை, கால வெள்ளத்தில் அழிந்து போனது. ஆனால் கருத்து, வெள்ளத்தில் அழியாது நிலை பெற்று விட்டது. நாம் கற்கும் நூல்களில் சாரமற்றவைகளை விலக்கி, நல்ல நூல்களைப் பொருள் உணர்ந்து கற்றல் வேண்டும். பொருள் உணராமல் கற்கும் கல்வி உள்ளத்தில் தங்காது. தங்கினாலும் நிலைக்காது. மனப் பாடம் செய்தது போல மறந்து விடும்.

**செல்வாக்கு**

செல்வமும் வாக்குத்திறனும் சேர்ந்தவர்க்குச் செல்வம் உண்டாகும் என்று கூறுவார்கள். செல்வம் இருப்பவர்க்கு புகழ் இருப்பது உண்மைதான். செல்வாக்கு என்பது செல்வத்தால் ஏற்பட்டது அன்று. வாக்கு வன்மையாலும் ஏற்பட்டது அன்று. எவர் ஒருவர் ஏதேனும் ஒன்றைக் கூறினால் மூலை முடுக்கெல்லாம், பட்டி தொட்டியெல்லாம் நாடு நகரமெல்லாம் தம் மூச்சோடு மூச்சாகக் கொண்டே முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுமாறு செல்லும் வாக்கே

Not to be re published ©KTBS

செல்வாக்கு ஆகும். செல்வாக்கு உள்ளவர் யாரோ, அவரே சொல்வாக்காளர். அவருடைய வாக்கே செல்வாக்கு. மற்றையவர் வாக்கு செல்லா வாக்கு.

எந்த செல்வத்தை அள்ளிக் கொடுத்தாலும், கொடுத்தவரிடத்து அப்பொருள் குறைந்து விடும். ஆனால், கல்விச் செல்வம் மட்டுமே கொடுத்தவர்க்குக் குறையாதது மட்டுமின்றி மேன்மேலும் பெருகச் செய்யும்.

நாடாளும் மன்னனின் புகழ் அவனுடைய நாட்டின் எல்லை வரையில் அமையும். ஆனால் ஏடாளும் நாவலன் புகழ் உலகெல்லாம் பரவும். நாடாளும் அரசன் வயது முதிர்ந்த ஒரு வரை அழைத்து நல்லுரை கேட்டதில்லை. கல்வியில் சிறந்த அறிஞரையே வரவேற்று, அவர் காட்டும் வழியில் ஆட்சி நடத்துவான்.

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'' - என்றும்,

''அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்''

''கற்றோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு''

என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

இவ்வுலகில் அனைத்து அழகுகளையும் விட கல்வி அழகே அழகு.

கற்போம் ! கற்பிப்போம் !

எழுத்தறிவற்ற உலகை மாற்றி, எழுத்தறிவுள்ள உலகை அமைப்போம்.

**அருஞ்சொற்பொருள் :**

கல்லுதல் - தோண்டுதல் ; ஆய்ந்து - ஆராய்ந்து ;

முதிர்ந்த - முதிர்ச்சியடைந்த ; மாடு - செல்வம் ;

©KTBS Not to be re published

எண்சாண் - எட்டுசாண் ; துயர் - துன்பம் ;

புறக்கண் - வெளியில் காணப்படும் கண்கள் ;

வேட்கை - விருப்பம் ; கருத்து - எண்ணம் ;

அறிஞர் - அறிவாளி ; அகக்கண் - மனக்கண்.

## அ. பாடப்பொருள் பயிற்சி

**I. சரியான விடையைத் தெரிவு செய்க :**

1) கற்கை நன்றே கற்கை நன்றே .............. புகினும் கற்கை நன்றே.

(அ) கற்கை (ஆ) பிச்சை (இ) ஈகை

2) நாவலர் புகழ் ............ பரவும்.

(அ) நாடெல்லாம் (ஆ) ஊரெல்லாம் (இ) உலகெல்லாம்

3) மனிதன் .............. சாண் உடையவன்.

(அ) ஒன்பது (ஆ) எண் (இ) ஆறு

4) பாறையை உடைத்து ............... பெறுவது போல.

(அ) நீர் (ஆ) தங்கம் (இ) இரும்பு

5) ஒருவனுக்கு அழிவில்லாதது ............... செல்வம்.

(அ) பணம் (ஆ) வீரம் (இ) கல்வி

6) எண்ணும் எழுத்தும் கண்எனத்தகும் என்றவர் ..............

(அ) திருவள்ளுவர் (ஆ) ஔவையார் (இ) சாக்ரட்டீசு

**II. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க :**

1) கல்வி அழகே ................

2) கேடில் விழுச் செல்வம் ................

3) விளையாட்டு, திரைப்படம் போன்றவற்றில் உள்ள ஈடுபாடு ................ லும் ஏற்படவேண்டும்.

©KTBS Not to be re published

4) எழுத்தறிவற்ற உலகை நீக்கி ................ உலகை அமைப்போம்.

5) கற்றவர் ............... கண் உடையவர்.

III. **பொருத்தி எழுதுக :**

| | | |
|---|---|---|
| 1) | மணலைத் தோண்டினால் | கல்வி |
| 2) | மலையை வெட்டினால் | நீர் |
| 3) | சிறந்த செல்வம் | தங்கம் |
| 4) | நாடாளும் மன்னர் புகழ் | உலகமெல்லாம் பரவும் |
| 5) | ஏடாளும் நாவலர் புகழ் | எல்லை வரை பரவும் |

IV. **ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) கல்லுதல் என்றால் என்ன ?

2) ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் எது ?

3) எண்சாண் உடம்பில் முதன்மையானது எது ?

4) ஆன்றோர்கள் எவை புண்கள் என்கிறார்கள் ?

5) செல்வத்துள் சிறந்த செல்வம் எது ?

V. **இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளி :**

1) யாருடைய கண்கள் கண்களல்ல ? ஏன் ?

2) யாருக்குப் புகழ் இருக்கும் ? ஏன் ?

3) என்றும் குறையாத செல்வம் எது ? ஏன் ?

4) அன்னப் பறவையின் இயல்பு யாது ?

VI. **விரிவான விடைதருக :**

1) கல்வியின் தன்மைகள் யாவை ?

2) திருவள்ளுவர் கல்வியின் சிறப்புகளாகக் கூறிய கருத்துக்கள் யாவை ?

©KTBS Not to be republished

3) செல்வாக்கு என்பதன் பொருளை விவரிக்க.

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :**

1) கல்வி என்பது செல்வமா ?

2) புல்லைக் காட்டிக் கொண்டு போனால்

## (ஆ) மொழிப்பயிற்சி

**I. சேர்த்தெழுதுக :**

1) தேடி + கொள் =

2) கல்வி + செல்வம் =

3) முதன்மை + ஆனது =

4) கண் + என =

5) விருப்பம் + அற்ற =

**II. பிரித்தெழுதுக :**

1) நிலை பெற்று =

2) சொல்வாக்காளர் =

3) வாக்குத்திறன் =

4) நாடாளும் =

5) ஏடாளும் =

**III. எதிர்ச் சொல் தருக :**

தோண்டிய ×

உண்டு ×

இவ்வுலகம் ×

முதல் ×

பூமி ×

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1) நீரும் பாலும் -

2) திறமை -

3) புகழோடு -

4) செல்வாக்கு -

## செயல்பாடுகள்

1) பாடத்தலைப்புகளில் உள்ள கருத்துக்களை வகுப்பறையில் கலந்துரையாடுக.

©KTBS Not to be re published

2) கல்வியின் சிறப்பைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

3) கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் கவிதை எழுதுக.

4) பெண் கல்வியின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தும் வகையில், ஆசிரியரின் வழிகாட்டலுடன், ஒரு நாடகம் தயாரித்து வகுப்பறையில் நடித்துக் காட்டவும்.

**படித்து அறிக :**

**வாடாத பூ எது ?**

ரோஜாப்பூ வாடிவிடும்
சண்பகப் பூ வாடிவிடும்
மல்லிகைப் பூ வாடிவிடும்
முல்லைப் பூ வாடிவிடும்

வாடாத பூ எதுவோ ?
வளருகின்ற இடம் எதுவோ ?

வாடாத பூ அறிந்தேன்
வளருகின்ற இடம் அறிந்தேன்
வாடாத பூ - படிப்பூ
வளரும் இடம் - பள்ளிக்கூடம்.

மு. வரதராசனார்.

**வாழ்க்கைத் திறன் :**

அ) பள்ளிச் செல்லும் வழியில் ஒரு பொதுக்குழாயை யாரோ உடைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். நீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது.

உன்னுடைய செயல்பாடு என்னவாக இருக்கும்?

1) நமக்கு எதற்கு வம்பு என்று செல்வது.

2) நீரை வெளியேறாமல் தடுப்பது.

Not to be re published ©KTBS

3) மேலும் குழாயை உடைத்து நீர் வெளியேறுவதை ரசிப்பது.

விடை : ..........................................................

**விழுமியக் கல்வி :**

பொதுச் சொத்துக்களை நமது சொத்துக்கள் என்று பாவித்துக் காப்பது.

## இலக்கணம்

### காலம்

**காலம் :** இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும் (வினைச் சொற்கள் மட்டுமே காலம் காட்டும்)

**1) இறந்தகாலம் :**

தொழில் நடந்து முடிந்ததைக் காட்டுவது இறந்த காலம்.

எ.டு. : உண்டான், எழுதினான், கரைத்தது.

**2) நிகழ்காலம் :**

தொழில் நடந்து கொண்டிருப்பதைக் காட்டுவது நிகழ்காலம்

எ.டு. : உண்கின்றான், எழுதுகின்றான், குரைக்கின்றது.

**3) எதிர்காலம் :**

தொழில் இனிமேல் நடக்கப்போவதைக் காட்டுவது எதிர்காலம்.

எ.டு. : உண்பான், எழுதுவான், குரைக்கும்.

**வினாக்கள் :**

1) காலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

2) கீழ்வரும் நிகழ்கால வினைமுற்றுக்களுக்கு இறந்த காலமும் எதிர்காலமும் எழுதுக :

நிகழ்காலம்    இறந்தகாலம்    எதிர்காலம்

Not to be republished ©KTBS

1) வருகிறான்

2) படிக்கிறான்

3) ஓடுகிறார்கள்

4) ஓடுகிறது

5) பார்க்கின்றன

## மதிப்பீட்டுக் கல்வி

### ஆண்-பெண் சமத்துவம்


வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்த பெண்கள் விண்வெளியிலும், கால்பதிக்கும் உத்வேகத்துடன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பூமியை வலம் வந்துகொண்டு இருக்கிறார்கள். இன்று பெண்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை. என்று சொல்லும் அளவுக்கு பெண்களின் பரிணாமம் நாளுக்கு நாள் எழுச்சி பெற்று வருகிறது.

ஆணுக்கு பெண் நிகர் என்ற வாய்மொழிக்கேற்ப கடந்த காலங்களில் ஆண்கள் மட்டுமே செய்து வந்த வேலையைத் தற்போது பெண்களும் செய்யத் தொடங்கி விட்டார்கள். அதிலும் சவாலான பணிகளையும் தன்னம்பிக்கையால் வென்று சாதனை படைத்து வருகிறார்கள்.


✱ ✱ ✱ ✱ ✱

©KTBS Not to be re published

# 14. நாலடியார்



1. நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடி கொழுத்த கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடு காட்டுள் ஏற்றப் பனை.



© KTBS Not to be re published

2. உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பால் அனையும், அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல்.

- சமண முனிவர்

**ஆசிரியர் குறிப்பு :**

இந்நூலில் உள்ள பாடல்கள் சமண முனிவர் பலரால் பாடப்பட்டன பின்னர் 'பதுமனார்' என்னும் புலவரால் தொகுக்கப் பட்டு நூலாக்கப்பட்டது என்பர்.

**நூல் குறிப்பு :**

நாலடியார் - நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆன நூல் இது. ஆதலால் நாலடியார் எனப் பெயர் பெற்றது. 'ஆர்' என்பது சிறப்பை உணர்த்தும் விகுதி இந்நூலில் நானூறு பாடல்கள் உள்ளன. இது நாலடி நானூறு எனவும் வழங்கப்படும்.

இந்நூல் திருக்குறளைப் போல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. என்று கூறப்படுவதால் உணரலாம்.

**அருஞ்சொற் பொருள் :**

1) நடுவூருள் - ஊரின் நடுவில்.
வேதிகை - மேடை ; படுபனை - பெண் பனைமரம்.
பலர் நச்ச - பலராலும் விரும்புவது ; மாக்கள் - அஃறிணையைக் குறிக்கும் ; இடுகாடு - மயானம்.

© KTBS Not to be republished

2) உறற்பால - தீமை ; நீக்கல் - விடுத்தல்.

மாரி - மழை : தருவார் - கொடுப்பார்.

தணிப்பார் - தடுப்பார் ; ஒற்றைப்பனை - ஆண்பனை.

**கருத்துரை :**

1) பலராலும் விரும்பிப் போற்றும்படி வாழ்பவர், ஊரின் நடுவே பாதுகாப்பாக நிற்கும் காய்க்கும் பெண் பனைமரம் போன்றவர் ஆவர். செல்வம் அதிகமாக இருந்தும் பிறருக்குத் தந்து உதவாதவர், மயானத்தில் நிற்கும் காய்க்காத ஆண் பனைமரம் போன்றவர் ஆவர்.

2) மழை பெய்யாதபோது அதையாரும் பெய்விக்க முடியாது. மழை அதிகமாகப் பெய்யும்போது. அதைப் பெய்யாமல் தடுக்கவும் யாரும் இல்லை. இதுபோல் வினைப்பயனால் வரும் தீமையைச் சான்றோராலும் தடுக்க முடியாது. திரண்டு வரும் நன்மைகளையும் அவர்களால் தடுக்க முடியாது.

**பாடப் பொருள் பயிற்சி :**

**அ) ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) மாக்கள் போன்றவர் யார் ?

2) பெண் பனை மரம் போன்றவர் யார் ?

3) வருகின்ற தீமையை யாரால் தடுக்க முடியாது ?

**ஆ) மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1) ஆண்பனை மரத்தை யாருக்கு ஒப்பாக நாலடியார் கூறுகிறார் ?

2) மழையின் தன்மை யாது ?

©KTBS Not to be republished

**இ) ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

நாலடியார் தமது பாடலில் கூறிய அறவுரை விளக்கத்தை எழுதுக.

## மொழிப் பயிற்சி :

**சேர்த்தெழுதுக :**

1) பனை + அன்னர் = ..................
2) சுற்று + கோட்டை = ..................
3) தணிப்பு + ஆரும் = ..................
4) அனை + ஆவும் = ..................

**பிரித்தெழுதுக :**

1) நடுவூருள் = ..................
2) கொடுத்துண்ணா = ..................
3) இடு காட்டில் = ..................
4) உறுவர்க்கும் = ..................


**செயல்பாடு :**

1) மழைநீர் சேகரிப்பு பற்றிக் குழுக்களில் விவாதம் செய்க.
2) கடையெழு வள்ளல்களின் பெயர்களை எழுதுக.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be re published

# 15. திருந்திய உள்ளம்



மனிதனிடம் பணத்தைச் சேர்க்கும் பேராசை தோன்றி விட்டால் அவனது வாழ்வின் நிம்மதி போய்விடும். நல்ல எண்ணங்கள் மனதில் தோன்றாது. பணத்தாசை கொண்ட ஒரு மனிதன் எத்தனை இன்னல்கள் அனுபவிக்கிறான் என்பதைக் காணலாம்.

கண்ணமங்கலம் என்ற ஊரில் நாச்சிமுத்து என்பவர் வசித்து வந்தார். அவர் உழைத்து நிறைய செல்வத்தைச் சேர்த்து வந்தார். பணம் அவரிடம் சேரச்சேர அவற்றைப் பாதுகாப்பது அவருக்கு பெரும் பிரச்சனையாக இருந்தது. அநாவசியமான பயமும் கவலையும் அவர் மனதில் தோன்றியவாறு இருந்தது.

பணத்தை யாராவது திருடிக்கொண்டு போய் விடுவார்களோ என்ற பயத்தின் காரணமாக அவர் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து வந்தார். எப்பொழுதும் அவர் பணத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். அதனால், இரவிலும் அவருக்குத் தூக்கம் இல்லாமல் போனது.

தம் வீட்டில் இருக்கும் குடும்பத்தாரையும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் அவரால் நம்ப முடியவில்லை. எந்த

©KTBS Not to be re published

நேரத்திலாவது தமது சேமிப்பைத் திருடிக்கொண்டு போய் விடுவார்களோ என்ற பயம்தான் காரணம். அதனால், அவருக்கு நண்பர்கள் கூடக்கிடையாது. நாளடைவில் ஒரு நடைப்பிணமாக உலாவத் தொடங்கினார்.

இந்த நிம்மதியற்ற வாழ்க்கை அவருக்கு பெரிய வேதனையாக இருந்தது. இந்த துன்பத்திலிருந்து விடுபட நினைத்தார். ஆனால், அதற்கான வழி எதுவும் அவருக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் நாச்சிமுத்து தமது வீட்டு வெளித் திண்ணையிலிருந்து தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அப்பொழுது, காவி உடையணிந்த மனிதர் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் முகத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசுவதை கவனித்தார். யாரோ ஒரு மகான் என்று நினைத்த அவர், உடனே எழுந்து அவரை நோக்கி ஓடினார்.

அவரை வணங்கி அன்பொழுகப் பேசி அவரைத் தமது வீட்டிற்குள் அழைத்து வந்து உணவு கொடுத்து உபசரித்தார். அவர் உண்டபின் தமது நன்றியை அவருக்குத் தெரிவித்தார்.


ஐயா ! தங்களை இன்று உபசரித்ததில் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி. ஆனால் உண்மையில் நான் மகிழ்ச்சியுடன் இல்லை. எப்போதும் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். மற்றவர்கள் நிம்மதியோடு வாழ்வதைப் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறது. தயவு செய்து, நானும் மற்றவர்களைப் போல் வாழ தாங்கள்தான் எனக்கு ஒரு வழி கூறவேண்டும். என்று கேட்டுக் கொண்டார்.

அந்தப் பெரியவர் அவரது கதை முழுவதையும் கேட்டறிந்தார். அவரது கவலைக்கான காரணம் அவருக்கு விளங்கிவிட்டது. ‘‘அய்யனே ! கவலை வேண்டாம். நாளையிலிருந்து உனக்கு நல்லகாலம் ஆரம்பமாகிறது’’ என்றார். அதைக் கேட்டு மகிழ்ந்த நாச்சிமுத்து, அன்றிரவு அவரை வீட்டில் தங்கி விட்டுச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அன்றிரவு பெரியவர்

©KTBS Not to be republished

வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அன்றிரவு பெரியவர் அவரது வீட்டில் தங்கினார்.

மறுநாள் நாச்சிமுத்து கண்விழித்துப் பார்த்தபோது அந்தப் பெரியவரை வீட்டில் காணவில்லை. உடனே பணத்தைச் சேமித்து வைத்திருந்த அறைக்கு ஓடினார். அந்த அறையின் தரை தோண்டப்பட்டு இருந்தது. குழிக்குள் இருந்த பானை காலியாக இருந்தது. ''ஐயோ ! கடவுளே ! திருடனை யோக்கியன் என்று நம்பி வீட்டில் தங்க வைத்தேனே ! இப்பொழுது அத்தனை பணத்தையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டானே !'' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினார் நாச்சிமுத்து.



ஒரு வாரம் அழுது புலம்பினார். ''போனது போய்விட்டது. அதையே நினைத்து அழுது கொண்டிருந்தால் பணம் வரவா போகிறது? ஆகவேண்டியதைப் பாருங்கள்'' என்று அவருடைய மனைவி சமாதானப்படுத்தினாள். அதன்பிறகு, நாச்சிமுத்து யோசித்துப் பார்த்தார். பெரியவர் எடுத்துக் கொண்டு ஓடிய பணம் திரும்பக் கிடைக்கப் போவது இல்லை. சே ! அந்தப் பணத்தால் எத்தனை கவலை, துன்பம், நிம்மதியின்மை, மற்றவர்மீது அவநம்பிக்கை. நாச்சிமுத்துவுக்கு நல்ல தெளிவு பிறந்தது. அன்று முதல் உழைத்து நல்ல வாழ்க்கை வாழ ஆரம்பித்தார்.

©KTBS Not to be republished

அப்படி வாழ்ந்த வேளையில் பெரியவர் மீண்டும் வந்தார். ''வெறும் பணத்தைச் சேர்த்து வைப்பது மட்டும் உண்மையான மகிழ்ச்சி அல்ல. அதைப் பிறருக்கு கொடுத்து வாழ்வது தான் உண்மையான மகிழ்ச்சி'' என்றார். பெரியவர் திருப்பிக் கொடுத்த பணத்தில் சிறிதளவு அவர் குடும்பத்திற்குச் செலவு செய்து மற்ற எல்லாப் பணத்தையும் தர்ம காரியங்களுக்குச் செலவு செய்தார். அன்றுமுதல் அவருடைய வாழ்க்கையில் கவலையே இல்லை.

## அருஞ்சொற்பொருள்

1) வசித்தான் - வாழ்ந்தான்
2) சாலையில் - வழியில்
3) தெய்வீக ஒளி - தெய்வத்தன்மை
4) மகான் - பெரியவர்
5) அன்பொழுக - பிரியமாக
6) உழைத்து - வேலை செய்து
7) இன்னல் - துன்பம்

## பாடப்பொருள் பயிற்சி

### அ) கோடிட்ட இடத்தை நிறைவு செய்க :

1) நாச்சிமுத்து திண்ணையில் அமர்ந்து .............. பார்த்துக் கொண்டு இருந்தான்.
2) காவி உடையணிந்தவன் முகத்தில் ............... வீசுவதை நாச்சிமுத்து கவனித்தான்.
3) அவன் பயத்தின் காரணமாக ............. வாழ்க்கை வாழ்ந்தான்.
4) ஒரு ............. என்று நினைத்து பெரியவரிடம் ஓடினான்.

©KTBS Not to be re published

**ஆ) பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1) | கண்ணமங்கலம் | செல்வந்தர் |
| 2) | நாச்சிமுத்து | தோண்டப்பட்டிருந்தது |
| 3) | தெய்வீக ஒளி | ஊர் |
| 4) | நடைப்பிணமாக | வீசியது |
| 5) | அறையின் தரை | உலாவத் தொடங்கினான் |

**ஊ) மூன்று வாக்கியங்களில் விடையளிக்க :**

1) நாச்சிமுத்துவிற்கு இருந்த பிரச்சனை யாது ?
2) நாச்சி முத்துவிற்கு ஏன் நண்பர்கள் இல்லை ?
3) நாச்சிமுத்து பெரியவரை எவ்வாறு உபசரித்தான் ?
4) மறுநாள் காலை நடந்தது என்ன ?
5) நாச்சிமுத்துவிற்குத் தெளிவு பிறந்தது எவ்வாறு ?

**எ) ஐந்து வரிகளில் விடை தருக :**

1) நாச்சிமுத்து நடைப்பிணமாக உலாவியது ஏன் ?
2) நாச்சிமுத்து மனதில் பொறாமை ஏற்படக் காரணம் என்ன?
3) பெரியவர் நாச்சிமுத்து வீட்டில் ஏன் தங்கினார் ?
4) நாச்சிமுத்து வாழ்க்கையில் கவலை எவ்வாறு நீங்கியது?

**ஏ) இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :**

1) ''பணத்தை யாராவது திருடிக் கொண்டு போய்விடுவார்களோ''
2) ''அய்யனே ! கவலை வேண்டாம். நாளையிலிருந்து உனக்கு நல்ல காலம் ஆரம்பமாகிறது.''
3) ''ஐயோ ! கடவுளே ! திருடனை யோக்கியன் என்று நம்பி வீட்டில் தங்க வைத்தேனே ?''

©KTBS Not to be re published

## மொழிப்பயிற்சி :

**அ) சேர்த்தெழுதுக :**

கேட்டு + கொண்டார் = நிம்மதி + இன்மை =

அன்பு + ஒழுக = அன்று + இரவு =

**ஆ) பிரித்தெழுதுக :**

1) சேரச்சேர = 2) நிம்மதியற்ற =

3) வெளித் திண்ணை = 4) கேட்டறிந்தார் =

**இ) எதிர்ச்சொல் தருக :**

அநாவசியமான × நல்லவாழ்க்கை ×

உயர்ந்த × பெரியவர் ×

நண்பன் ×

**ஈ) சொந்த வாக்கியத்தில் எழுதுக :**

நிம்மதியற்ற - நடைப்பிணம் -

முழுவதையும் - சேமிப்பு - விளங்கு -

**உ) எடுத்துக்காட்டைப் போன்று கொடுக்கப்பட்ட சொற்களை வேறுவடிவத்தில் எழுது :**

எ.டு : எல்லை - எல்லையற்ற

நிம்மதி - அளவு -

பண்பு - கவலை - தூக்கம் -

**செயல்பாடு 1 :** இப்பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டுக.

**செயல் பாடு 2 :** இப்பாடக் கருத்தை மையமாகக் கொண்ட வேறு சிறு கதைகளைத் தொகுத்து எழுதுக.

©KTBS Not to be re published

**வாழ்க்கைத் திறன் :**

1) உங்கள் தோற்றத்தையோ, உங்கள் உடையையோ, உங்கள் படிப்பைப்பற்றி, யாராவது உங்கள் முதுகுக்குப் பின்னால் அலட்சியமாக சிரித்தால் :

அ) கண்ணீர் வரும் ஆ) மனதுக்குள் திட்டுவேன்

இ) பொருட்படுத்தமாட்டேன்

விடை : ..................................................................

2) கபடி விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள், எதிர்க் குழுவினர் வெற்றிபெற்றால்.

அ) பழிக்குப்பழி

ஆ) நன்றாக விளையாட முயற்சி செய்வது

இ) தோல்வியை சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் பக்குவம்.

விடை : ..................................................................

**விழுமிய கல்வி :**

இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். நீ எந்த அணி வெற்றி பெறவேண்டும் என்று நினைப்பாய்.

ஏன் ? ..................

எதற்கு ? ..................

**சிறு சேமிப்பு :**

'பணம் பத்தும் செய்யும்', 'பணம் பாதாளம் வரை பாயும்' ; பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும் என்பன பணத்தின் தேவையை உணர்த்தும் பழமொழிகள். பொருள் இல்லாதவரை மனைவியும் விரும்பமாட்டாள். பெற்றெடுத்த தாயும் விரும்ப மாட்டாள், என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு.

சிற்றறிவு உடைய உயிர்களாகிய எறும்புகளும் தேனீக்களும் சேமிக்கும் பழக்கத்தை நமக்கு உணர்த்துகின்றன. நம் சேமிப்பை அஞ்சலகங்களிலும், வங்கிகளிலும் சேமிக்கலாம். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலும் சேமிப்பதற்குப் பல வழிகளுண்டு.

Not to be re published ©KTBS

நம் சேமிப்பு 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போலப் பெருகிப் பெருந்தொகையாக நமக்குக் கிடைக்கும். மாணவர்களாகிய நீங்கள் இளமையிலேயே சேமிக்கும் சிறந்த பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நமது சேமிப்பு அரசின் பலதிட்டங்களுக்கு உதவுகிறது. நாட்டு நலத்திட்டங்களுக்கு உதவி செய்யவும் பயன்படுகிறது.

''சேமிப்போம் வளமான வாழ்வு பெறுவோம்''.

## இலக்கணம்

உடன்பாடு - எதிர்மறை

தொழில் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை உடன்பாட்டு வினை எனப்படும்.

(எ-கா) உண்டான் ; அழைப்பார் ; பறக்கும்.

தொழில் நிகழாமல் இருப்பதைத் தெரிவிக்கும் வினை எதிர் மறைவினை எனப்படும்.

(எ-கா) உண்டிலன், அழையார், பிறவாது.

உடன்பாட்டை எதிர்மறையாக மாற்ற உடன் பாட்டுடன் இல், ஆ முதலிய எதிர்மறை இடைநிலைகளைச் சேர்க்கவேண்டும்.

(எ-கா) உடன்பாடு எதிர்மறை

கண்டான் - கண்டிலன் (இல்)

ஓடும் - ஓடாது (ஆ)

**வினாக்கள் :**

1) உடன்பாடு எதிர்மறை ஆகியவற்றை விளக்குக.


2) உடன்பாட்டை எதிர்மறையாக மாற்ற என்ன செய்ய வேண்டும் ?

✽ ✽ ✽ ✽ ✽

© KTBS Not to be re published

# 16. இரட்டுற மொழிதல்

## பெண் - வாழைமரம்



தலைவிரிக்கும் பூச்சூடும் தண்டை அணியும்
இலைவிரித்து நல்லுணவை ஈயும் - விலைமதிக்க
ஒண்ணாப் பரம்பரையை உற்பத்தி செய்திடுநற்
பெண்ணாகும் வாழைமரம்.

- திருக்குறள் பெ. இராமையா

**ஆசிரியர் குறிப்பு :**

மதுரை மாவட்டம் பேரையூருக்கு அருகில் உள்ள சாலிச்சந்தை என்னும் சிற்றூரில் பிறந்தவர். பெற்றோர் பெரிய கருப்பன், சின்னத்தாய். இவர் ஒரே சமயத்தில் பத்து வகையான செய்திகளை நினைவில் வைத்து செயல்படும் 'பதின்கவனம்' (தசாவதானி) என்னும் பழம் பெரும் நினைவாற்றல் கலையை நிகழ்த்திப் புகழ் பெற்றவர். தமது முப்பதாம் வயதில் பார்க்கும் திறனை இழந்தவர்.

©KTBS Not to be re published

இலக்கண இலக்கியங்களைப் பிறர் படிக்கக் கேட்டுக் கற்றுக் கொண்டார். தமிழ்நாடு அரசவைக் கலைஞராகப் பணியாற்றியவர்.

**நூல் குறிப்பு :**

பாடலை இரண்டு பொருள்பட பாடுதல் இரட்டுற மொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை எனவும் வழங்குவர். தமிழில் உள்ள அணிகளில் சிலேடையும் ஒன்றாகும். திறமை சான்ற புலவர்களே இதனைப் பாடுவர். இரட்டுற மொழிதல் பாடல்களில் சிறந்த புலவர் காளமேகப்புலவர்.

**கருத்துரை :**

**பெண் :** தலை விரிந்திருக்கும், தலையில் பூச்சூடுவாள் காலில் தண்டை என்ற அணிகலனை அணிவாள். இலையில் நல்ல உணவைப் பரிமாறுவாள். விலைமதிக்க முடியாத பரம்பரையை (வம்சத்தை) உற்பத்தி செய்யக் கூடியவள்.

**வாழைமரம் :** வாழைமரத்தில் இலை விரிந்திருக்கும், வாழைப் பூவைக் கொண்டிருக்கும். தண்டை உடையது நல்லுணவை உண்பதற்கு இலையை அளிக்கும். விலைமதிப்பற்ற வாழைக்கன்றை உற்பத்தி செய்யும்.

''பெண்ணும் வாழைமரமும் ஒன்றாகும்''.

**அருஞ் சொற்பொருள் :**

தண்டை - காலில் அணியும் ஒரு அணிகலன்,
வாழை மரத்தின் நடுவிலுள்ள தண்டு.

ஈயும் - கொடுக்கும்

ஒண்ணா - இயலாத

©KTBS Not to be republished

## அ. பாடப் பொருள் பயிற்சி :

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக.**

1) பெண் காலில் அணியும் அணிகலன் எது ?

2) வாழைமரம் உணவளிக்கக் கொடுப்பது என்ன ?

3) மனித இனத்தை உற்பத்தி செய்பவர் யார் ?

**II. மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடை தருக.**

1) இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

2) ''பதின் கவனம்'' - குறிப்பு வரைக.

**III. ஐந்து வாக்கியங்களில் விடையளிக்க.**

1) பெண்ணும் வாழைமரமும் நிகராவது எவ்வாறு ?

**IV. பொருத்தி எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1) | சூரிய காந்தி | இரவு |
| 2) | தாமரை | அதிகாலை |
| 3) | மல்லி | காலை |
| 4) | அல்லி | மாலை |

## ஆ) மொழிப் பயிற்சி

**I.** கீழ்க்காணும் சொற்களுக்கு இருபொருள் தருக.

பார் ..............., ...............

பலகை ..............., ..............

முயலாமை ..............., ..............

வேங்கை ..............., ..............

©KTBS Not to be re published

**II.** கீழ்க்காணும் சொற்களுக்கு முன்னால் ஒரு எழுத்தைச் சேர்த்து, புதிய சொல்லை உருவாக்கி அவற்றின் பொருளை எழுது.

1) ................. மரை .................

2) ................. பயம் .................

3) ................. கல் .................

## இ) செயல்பாடுகள் :

1) பாடலைப் பிரித்துப் படித்துப் பொருளை அறிக.

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை ஆனதே - சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை - பித்தா நின் பாதம்
பிடித் தோர்க்கு மாறுதலைப் பார்.

* * * * *

©KTBS Not to be re published

# 17. தேசிய விளையாட்டு (ஹாக்கி)

உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விளையாட்டில் முதன்மை இடத்தைப் பெற்று விளங்குகிறது. அதனைத் தனது தேசிய விளையாட்டாகவும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

பழங்காலத்திலிருந்தே கையில் நீண்ட கோலைப் பிடித்துக் கல்லையோ, நெற்றுக் காய்களையோ, வேறு பந்து போன்றதொரு பொருளையோ தரையில் வைத்து அடிப்பது எங்கும் காணக்கூடிய நிகழ்ச்சியாகும். அப்படி ஆடி வந்த விளையாட்டே ஹாக்கி ஆட்டமாகும்.

ஒரு முனை வளைந்திருக்கும் இடையர்கள் கையிலுள்ள தொரட்டுக் கோலை ஒத்து இருந்ததால், இதற்கு இடையரின் ''கைக்கோல்'' என்ற பொருளுள்ள 'ஹாக்கே' என்ற பெயர் வந்திருக்க வேண்டும். 'ஹாக்கெட்' என்ற பிரெஞ்சு வார்த்தைக்கு ஆடு மேய்ப்பவர்கள் கையில் வைத்திருக்கின்ற வளைந்த கோல் எனப் பொருளுண்டு.



இச்சொல்லை ஆங்கிலேயர்கள் 'ஹாக்கே' என உச்சரித்தனர். பிறகு 'ஹாக்கி' என ஆயிற்று.



© KTBS Not to be republished

இங்கிலாந்து நாட்டில் மிகத் தீவிரமாக ஆடப்பட்ட இந்த ஆட்டம் அயல் நாடுகளுக்கும் பரவி, அகில உலகமும் ஆடும் ஆட்டமாக வளர்ந்தது. 1909-ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பந்தயங்களில் இணைக்கப்பட்டது.

1925 - ஆம் ஆண்டு இந்திய ''ஹாக்கி பெடரேசன்'' தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து நமது நாடு உலக அரங்கில் விளையாடத் தொடங்கியது.

1928 - ஆம் ஆண்டு ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தான் இந்தியா முதன்முறையாகக் கலந்து கொண்டது. அந்நாட்டு அணியை வென்று, முதல் ஒலிம்பிக் பதக்கத்தைப் பெற்றது. 1928 முதலிருந்து 1968 - ஆம் ஆண்டு வரை இந்தியா ஹாக்கி விளையாட்டில் உலக வெற்றி நாடாகத் திகழ்ந்தது.

ஹாக்கி விளையாட்டிற்கு 300 அடி நீளமும், 180 அடி அகலமுள்ள செவ்வகவடிவ ஆடுகளம் தேவை. ஆடுகளம் சமத் தரையாக இருக்க வேண்டும். இருபக்கங்களிலுள்ள 80 அடிக் கோடுகள் கோல் (Goal) கோடுகள் எனப்படும்.

இரண்டு கோல் கோடுகளின் நடுவிலும் 12 அடி இடைவெளியில் 7 அடி உயரமுள்ள இரண்டு மரத்தூண்களை நட்டிருப்பார்கள். இரண்டு மரத் தூண்களையும் வேறு ஒரு குறுக்குத் துண்டால் இணைத்திருப்பார்கள்.

களத்தின் நடுவில் கோல் கோடுகளுக்கு இணையாக ஒரு கோடு போடப்பட்டிருக்கும். இவ்வட்டத்தில் பந்தை வைத்து ஆட்டத்தைத் தொடங்க வேண்டும். ஹாக்கியின் ஒரு அணியில் 11 பேர் ஆடுவார்கள்.

மையக் கோட்டில் 5 ஆட்டக்காரர்கள் நிற்பார்கள். இவர்களை ''முன்னணி ஆட்டக்காரர்கள்'' ''அரைப் பின்னணி ஆட்டக்

©KTBS Not to be republished

காரர்கள்'' என்றும் அழைப்பார்கள். அரைப் பின்னணி ஆட்டக்காரர்கள் எதிர்க்கட்சி ஆட்டக்காரர்கள் முன்னேறுவதைத் தடுப்பார்கள். பந்தை எறிந்து முன்னணி ஆட்டக்காரர்களுக்குக் கொடுப்பார்கள்.

இவர்களுக்குப் பின்னும், அரைவட்டத்திற்கு முன்னுமாக இரண்டு ஆட்டக்காரர்கள் நிற்பார்கள். மற்றொருவர் கோல்கீப்பர். ஹாக்கி விளையாடும்போது ஹாக்கி மட்டையைத் தோளுக்கு மேல் உயர்த்தக் கூடாது. பந்து இடுப்புக்கு மேல் வந்தால் உள்ளங்கையால் தடுப்பார்கள். ஆனால் பந்தைக் கையால் பிடிப்பது தவறாகும். ஆட்டக்காரர்களின் உடம்பிலோ, காலிலோ பந்து படக்கூடாது.

ஹாக்கி விளையாட்டின் சிறப்பு அம்சம் 'புல்லி' (Bulley) செய்வதாகும். விளையாட்டு தொடங்குவதற்குமுன் மையக் கோட்டிற்கு நடுவிலுள்ள வட்டத்திற்குள் பந்து இருக்கும்.

இரண்டு அணிகளிலுள்ள முன்னணி ஆட்டக்காரர்கள் எதிரெதிராக நிற்பார்கள். பந்தின் மீது படாதவாறு தங்கள் மட்டைகளால் தரையில் தட்டுவார்கள். எதிரணியின் மட்டையிலும் மூன்று முறை தட்டுவார்கள். பிறகே, பந்தை அடிப்பார்கள். இதுவே 'புல்லி' எனப்படும்.

இவ்வாறு விளையாடப்படும் ஹாக்கி விளையாட்டில் நம்நாடு சிறந்து விளங்கியதால், ''இந்திய தேசிய விளையாட்டு'' என அனைவராலும் அழைக்கப்படுகிறது. நம்நாடு இதுவரையில் ஒலிம்பிக் போட்டிகளில் 7 தங்கப்பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கத்தையும் 3 வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளது.

த்யான் சந்த், அஜித் பால் சிங், எம்.பி. கணேஷ், தனராஜ் பிள்ளை போன்ற ஆண் விளையாட்டு வீரர்களும் மமதா கராப், சூரஜ் லதா தேவி, ஹெலன் மேரி இன்ஸெண்ட் போன்ற பெண்

©KTBS Not to be re published

விளையாட்டு வீராங்கனைகளும் இந்தியாவின் சிறந்த ஹாக்கி ஆட்டக்காரர்கள் ஆவார்கள்.

**அருஞ்சொற்பொருள் :**

முதன்மை - முதல்

இடையர் - ஆடு, மாடு மேய்ப்பவர்கள்

அணி - குழு

மையம் - நடு

தக்க - தங்க

களம் - மைதானம்

**பாடப்பொருள் பயிற்சி**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) இடையர் கையில் வைத்திருப்பது ................

2) இந்தியா ஹாக்கி விளையாட்டில் முதன்முறையாக கலந்து கொண்ட ஆண்டு ................

3) ஹாக்கி விளையாட்டில் ஒரு அணியிலிருக்கும் ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை ................

4) ஹாக்கி விளையாட்டின் சிறப்பு அம்சம் .............. ஆகும்.

**ஆ) ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) இந்திய ஹாக்கி பெடரேசன் எப்போது தொடங்கப் பட்டது?

2) முன்னணி ஆட்டக்காரர்கள் என்பவர் யார் ?

Not to be re published ©KTBS

3) ஹாக்கி விளையாட்டு பந்தயங்களில் எப்போது, எங்கு இணைக்கப்பட்டது ?

4) ஹாக்கெட் என்ற பிரெஞ்சுச் சொல்லின் பொருள் என்ன ?

5) ஹாக்கி இந்திய தேசிய விளையாட்டாகக் கருதப்படுவது ஏன் ?

6) ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா பெற்ற பதக்கங்கள் யாவை?

**இ) மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடை தருக :**

1) ஹாக்கி என்ற பெயர் எப்படி வந்தது ?

2) புல்லி என்றால் என்ன ?

3) இந்தியாவின் புகழ்பெற்ற ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் விராங்கனைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**ஈ) ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) ஹாக்கி ஆட்ட ஆடுகளத்தின் அமைப்பை விவரிக்க.

2) ஹாக்கி ஆட்டத்தின் விதிமுறைகள் யாவை ?

**மொழிப்பயிற்சி :**

**சேர்த்தெழுதுக :**

வளைந்து + இருக்கும் =

முதல் + முறை =

மரம் + தூண் =

மையம் + கோடு =

நிகழ்ச்சி + ஆகும் =

**பிரித்தெழுதுக :**

அன்றிலிருந்து =

வந்திருந்து =

எதிரெதிராக =

போன்றதொரு =

இருபக்கங்களிலுள்ள =

©KTBS Not to be re published

**எதிர்ச்சொல் தருக :**

முன்னணி ×

நீண்ட ×

மேல் ×

தவறு ×

வளைந்த ×

**செயல்பாடு 1 :**

விளையாட்டுக்களை, தனி விளையாட்டு, குழு விளையாட்டுகளாகவும், உள்ளரங்க மற்றும் வெளியரங்க விளையாட்டுகளாகப் பிரித்து எழுதுக.

| தனி விளையாட்டுகள் | குழு விளையாட்டுகள் |
|---|---|
| | |

| உள்ளரங்க விளையாட்டுகள் | வெளியரங்க விளையாட்டுகள் |
|---|---|
| | |

©KTBS
Not to be re published

**செயல்பாடு 2 :**

வருணனையைத் தொடர்ந்து எழுதுக :

பெங்களூர் சின்னசாமி விளையாட்டரங்கத்தில் நடைபெறும் கிரிக்கெட் போட்டி.

அரங்கம் பார்வையாளர்களால் நிரம்பி வழிகின்றது. இந்திய அணித்தலைவரும் பாகிஸ்தான் அணித்தலைவரும் ஆடுகளத்தின் நடுவில் நிற்கிறார்கள். நடுவர் அங்கு வருகிறார் : .......................

**செயல்பாடு 3 :**

சரியான சொற்களால் கீழுள்ள கட்டங்களை நிரப்புக.

| விளையாட்டின் பெயர் | பயன்படுத்தும் பொருட்கள் | விளையாடும் இடம் | விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கால்பந்து<br>கிரிக்கெட்<br>டேபிள் டென்னிஸ்<br>கூடைப்பந்து | | | |

**செயல்பாடு – 4**

கீழே கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுகளுக்குத் தொடர்புடைய சொற்களை எழுதுக.

எறி பந்து

கேரம்

வலைப் பந்து

மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழுவினர் ஒரு விளையாட்டின் பெயரைக் கூற மற்றொரு குழுவினர் அதற்குத் தொடர்புடைய சொற்களைக் கூறவேண்டும்.

©KTBS Not to be re published

## பாடிப்பழகுக

## சடுகுடு

நான் தான் வீரன்
நல்ல முத்து பேரன்
வெள்ளிப் பிரம்பு எடுத்து
விளையாட வாரேண்டா
தங்கப் பிரம்பு எடுத்து
தாலிகட்ட வாரேண்டா, வாரேண்டா
குடுகுடு சல்வி
குப்பன் சல்வி
ராவூத்தன் சல்வி
ரவ்வாச் சல்வி

## வாழ்க்கைத் திறன்

**1. உயிர்களிடத்தில் அன்புகாட்டுதல்**

சுரேஷ் தன் நண்பர்களுடன் விளையாடச் சென்றான். வழியில் ஒரு நாயைக் கண்டான் அதனைக் கல்லால் அடித்தான் மரத்தில் குரங்குகள் இருந்தன. அவற்றை நோக்கி கல்லெறிந்தான்

சுரேஷ் நாயைக் கல்லால் அடித்தது சரியா ?

விடை : ..........................................................................................

**கலந்துரையாடல் :**

''பொது சொத்துக்களைப் பாதுகாப்பது தேவை''

**பேசும் திறன் :**


ஏதேனும் ஒரு பொருள் பற்றி ஐந்து நிமிடங்கள் பேசுக :

1) பிடித்த விளையாட்டு
2) கடல்
3) சுற்றுப்புறத் தூய்மை
4) காடு வளர்ப்பு

Not to be republished ©KTBS

## பல்சுவை

# 18. கனவு தந்த தீர்ப்பு (கதைப்பாடல்)




1) பொன்னன் வீட்டு மாடியிலே
பொந்து ஒன்று இருந்ததுவே!
சின்னக் குருவிகள் இரண்டு வந்தே
சீராய் அதிலே தங்கினவே!

2) அந்தக் குருவிகளுடன் இரண்டு
அன்புக் குருவிக் குஞ்சுகளும்
சிந்தைக் கின்பம் தந்திடவே
சிறப்பாய்த் தோன்றி வாழ்ந்தனவே!


3) குருவிகள் தமது கூட்டினிலே
கூடிக் கீச்சுக் கீச்செனவே
பெருகும் சத்தம் போடுவது
பிடிக்க வில்லை அவனுக்கே!

©KTB Not to be re published



4) தந்தைக் குருவி தாய்க் குருவி
தாம் இல்லாத சமயத்தில்
அந்தப் பொந்தை அச்சிறுவன்
அட்டை ஒன்றால் மூடிவிட்டான்.


5) குருவிகள் இரண்டும் வந்தனவே!
கூக்குர லிட்டுக் கதறினவே!
பரிவு ஒன்றும் இல்லாமல்
படுக்கப் போனான் அச்சிறுவன்.




Not to be re published ©KTBS

6) இரவில் பொன்னன் தூங்குகையில்
இரண்டு குருவியும் கனவினிலே
அருவி போல ஓவென்றே
அலறி அலறி அழுதனவே !

7) ''உன்னை இப்படி ஓர் அறையில்
ஒருவர் பூட்டிவைத்தால் நீ
என்ன செய்வாய் என்பதையே
எண்ணிப் பார்க்க வேண்டாமோ ?''



8) பொன்னன் கனவில் குருவிகளின்
புலம்பல் கேட்டு மன முருகி
மின்னல் போல விரைந்தோடி
மூடிய அட்டையை எடுத்தெறிந்தான்.



9) துன்பம் அடைந்த குருவிகளும்
இன்பம் கொண்டே முன்போலே
பொன்னன் வீட்டில் நலமாகப்
பூரிப்புடனே வாழ்ந்தனவே!

- புலவர் தணிகை உலகநாதன்

©KTBS Not to be republished

## ஆசிரியர் குறிப்பு :

தணிகை உலகநாதன் வேலூர் மாவட்டம் திருவத்திபுரத்தில் 1921-ம் ஆண்டு. அக்டோபர் மாதம் முதல் தேதியில் தா. தணிகாசலம், சுந்தரம் அம்மையாருக்கு மகனாய் பிறந்தார். பூஞ்சோலை, தேன்சுவைக் கதைகள், பாடும் பாப்பா, மாணவர் தமிழ்விருந்து, சிறுவர் நாடக விருந்து போன்ற நூல்களையும் இன்னும் பல நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவருக்கு தமிழக அரசின் நல்லாசிரியர் விருது 1974-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இவரது காலம் 01-10-1921 முதல் 19-11-1993 வரை.

## அருஞ் சொற்பொருள் :

சீராய் - சிறப்பாய்

சிந்தை - உள்ளம்

பெருகுதல் - மிகுதல்

கூக்குரல் - அலறல்

பரிவு - அன்பு

புலம்பல் - வருந்தி பேசுதல்

மனமுருகி - உள்ளம் நெகிழ்ந்து

பூரிப்பு - மகிழ்ச்சி

## அ) பாடப் பொருள் பயிற்சி :

### I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1) குருவிகள் எங்கு வாழ்ந்தன ?

2) பொந்து எங்கு இருந்தது ?

3) சிந்தைக்கு இன்பம் தந்தது எது ?

©KTBS Not to be re published

4) சிறுவன் பொந்தை என்ன செய்தான் ?

5) பொன்னன் கனவில் வந்தது என்ன ?

**II. மூன்று வாக்கியத்தில் விடைதருக.**

1) பொன்னன் குருவிகளை வெறுக்க காரணம் என்ன ?

2) சிறுவன் பொந்தை எப்போது, எதற்காக அடைத்தான் ?

3) சிறுவனின் கனவில் குருவிகள் கூறிய தென்ன ?

4) கனவு கண்ட சிறுவன் என்ன செய்தான் ?

## ஆ) மொழிப்பயிற்சி :

**I. சேர்த்து எழுதுக :**

1) கீச்சு + கீச்செனவே

2) அந்த + பொந்தை

3) படுக்க + போனான்

4) எண்ணி + பார்க்க

**II. பிரித்து எழுதுக :**

1) சிந்தைக் கின்பம்

2) கூக்குரலிட்டு

3) மனமுருகி

4) விரைந்தோடி

5) எடுத்தெறிந்தான்

**III. எதிர்ச்சொல் தருக**

1) இன்பம் ×

2) சிறப்பு ×

3) பெருகும் ×

4) மூடி ×

## இ) செயல்பாடுகள் :

1) நீ விரும்பும் பறவை அல்லது விலங்கு பற்றி ஐந்து வரிகள் எழுதுக.

✱ ✱ ✱ ✱ ✱

©KTBS Not to be re published

# 19. பூமி வெப்பம்

ஆறாம் வகுப்பு மாணவர்களும், ஆசிரியரும் குடகுமலைக்குக் கல்விச் சுற்றுலா சென்றனர். அங்குள்ள இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு செல்லும்போது பாறைகளைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. பாறைகள் மீது கால் வைத்து நடந்து செல்ல முடியாத அளவுக்கு வெப்பம் மிகுதியாக இருந்தது.

மாணவர்கள் : ஐயோ ! ஆ ! கால் வைக்கவும் முடியவில்லை. நிற்கவும் முடியவில்லை. இந்தப் பாறைகள் மிக வெப்பமாக உள்ளன.

ஆசிரியர் : ஆமாம் ! சூரியனின் கதிர்களால் பாறைகளின் மேற்பரப்பு வெப்பம் அடைந்துள்ளது.

இராமு : ஆமாம் ! எங்கள் வீட்டின் முன்புறத்தில் கற்கள் போடப்பட்டுள்ளன. கோடையில் அக்கற்கள் மிகவும் வெப்பமாக இருக்கும்.

ஆசிரியர் : சூரியனிலிருந்து பூமி மீது விழுகின்ற கதிர்கள் வெப்பமாக இருக்கும். ஆனால் நாம் வாழ்வதற்குத் தேவையான வெப்பம் மட்டுமே பூமியில் இருக்கும் வகையில் நம்மைக் காத்துக் கொண்டிருப்பது ‘‘காற்று மண்டலம்’’. இதை ‘வளி மண்டலம்’ என்றும் கூறலாம். இது இயற்கை நமக்கு அளித்த கொடையாகும்.


இரஹீம் : காற்று மண்டலம் நம்மை எவ்வாறு காக்கிறது ?

ஆசிரியர் : பூமியின் மீது விழுகின்ற வெப்பக்கதிர்கள் பூமியிலேயே தங்கிவிடாமல் ஒரு பகுதி பூமியின் மேற்பரப்பால் வானமண்டலத்திற்குத் திரும்பி விடுகின்றன. இது ‘‘பசுமைக் குடில்’’

©KTBS Not to be re published

மாணிக்கம் : பசுமைக் குடில் என்றால் பச்சைநிறக் குடிசையா ?

ஆசிரியர் : இல்லை, இல்லை ! பூமியில் நமக்குத் தேவையான வெப்பம் மட்டுமே இருப்பதற்குக் காரணம். சூரியனின் வெப்பக்கதிர்களின் ஒரு பகுதி வான மண்டலத்திற்குத் திரும்பி அனுப்பப் படுகிறது. இத்தகைய பணியைச் செய்கின்ற பகுதியைத்தான் ''பசுமைக் குடில்'' என்று அழைக்கிறார்கள்.




1) பூமியை நோக்கிவரும் சூரியக் கதிர்கள்

2) பசுமைக் குடில் என்பது வாயுக்கள் அடங்கிய காற்று மண்டலம்

3) பூமியின் வெப்பம் பசுமைக் குடில் வழியாக வெளியேறுகின்றது.

4) பசுமைக் குடிலில் மாசு அதிகம் சேருவதால் பூமியின் வெப்பம் வெளியேறாமல் மீண்டும் பூமிக்கே திரும்புகிறது.

அந்தோணி : இராமு, அங்கே பார் ! அந்தப் பேருந்து எவ்வளவு புகையைக் கக்கிக் கொண்டு செல்கிறது !

© KTBS Not to be republished

ஆசிரியர் : அந்தோணி ! அப்புகையைச் சுவாசித்தால் இருமல் வரும், தெரியுமா? அந்தப் புகையில் கரியமிலவாயு போன்ற நச்சுப் பொருட்கள் அதிகம் கலந்திருக்கும்.

இராமு : அதுமட்டுமல்ல, சுவாசித்தலிலும் இடையூறுகள் ஏற்படும் அல்லவா ?

ஆசிரியர் : இப்புகை உயிரினங்களுக்கு மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலிற்கும் இடையூறு விளைவிக்கும். மேலும், இது பூமியிலிருந்து வானிற்குத் திருப்பி விடப்படுகின்ற வெப்பக் கதிர்களை, வானவெளிக்குச் செல்லவிடாமல், பூமிக்கே திரும்ப அனுப்பி விடுகின்றது. இதனால், பூமியில் வெப்பத்தின் அளவு அதிகமாகிறது.

இராமு : வெப்பம் அதிகரித்தால் நன்றாக மழை பொழியும் என்று எங்கள் பாட்டி கூறுவார்கள்.

ஆசிரியர் : அது உண்மைதான். ஆனால், வான வெளியில் அதிக அளவு சேரும் நீராவி, மேகக் கூட்டமாக மாறும். பின், ஏதோ ஓரிடத்தில் எதிர்பாராத மழையாகப் பொழிந்து, வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அந்தோணி : மழை நன்றாகப் பொழிந்தால் விவசாயிகளுக்கு நன்மைதானே ?

இரஹீம் : ஆம் ! அதனால், நிறைய பயிர்களை வளர்க்கலாம் அல்லவா ?

ஆசிரியர் : அப்படியில்லை. விவசாயம் செய்கிற பகுதிகளில் மழை பெய்தால் நன்மைதான். எதிர்பாராத இடங்களில் மழை பெய்தால் விவசாயம்

©KTBS Not to be republished

பாதிக்கப்படும். உணவுப் பொருட்களின் பற்றாக் குறை ஏற்படும்.

இராமு : இத்தகைய நிலைமையைத் தடுக்க நாம் என்ன செய்யலாம் ?

ஆசிரியர் : கரியமிலவாயு வெளிப்படுவதைக் குறைக்க வேண்டும்.

இரஹீம் : எப்படிக் குறைக்க முடியும் ?

அந்தோணி : வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையைக் குறைக்க வேண்டும்.

ஆசிரியர் : வாகனப் போக்குவரத்தில் எரிவாயுவைப் பயன்படுத்தி, கரியமிலவாயுவைக் குறைக்க வேண்டும். மேலும், தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற கரியமிலவாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்களைக் குறைக்க வேண்டும். சரி! எல்லோரும் வாருங்கள். அதோ ! அங்கு இருக்கின்ற சமுதாயக் காட்டைச் சுற்றிப் பார்க்கலாம். (அனைவரும் காட்டைச் சுற்றிப் பார்க்கச் செல்கின்றனர்)

இரஹீம் : இராமு, எங்கள் ஊருக்குப் பக்கத்தில் ஒரு காடு இருந்தது. ஆனால் அங்கிருந்த மரங்கள் எல்லாவற்றையும் வெட்டிவிட்டார்கள்.

ஆசிரியர் : காடுகளை அழிப்பதால் பூமியில் வெப்பம் அதிகமாகிறது. எனவே, மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும். வீட்டுக் கொரு மரம் வளர்க்க வேண்டும். ''மரம் வளர்ப்போம் ! மழை பெறுவோம் !'' என்பது இன்றைய அறிவுரை !

©KTBS Not to be re published

மாணவர்கள் : நாளையே எங்கள் வீடுகளில் மரங்களை நடப் போகிறோம்.

ஆசிரியர் : மிக நல்லது ! உங்கள் அண்டை அயலாருக்கும் மரங்களை வளர்க்கக் கூறுங்கள். சரி, அனைவரும் வந்து பேருந்தில் ஏறிக் கொள்ளுங்கள்.

(மாணவர்கள் அனைவரும். ''வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் ! சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம் !'' என்று முழங்கிக் கொண்டு பேருந்தில் ஏறிச் செல்கிறார்கள்.)

**அருஞ்சொற் பொருள் :**

வளி - காற்று

பற்றாக் குறை - குறைவாக இருத்தல்

முழக்கம் - உரக்கச் சொல்லுதல்

நச்சுப் பொருட்கள் - விஷப் பொருட்கள்

இடையூறு - துன்பம், இன்னல்

மழைபொழி - மழைபெய்

அண்டை அயலார் - அக்கம் பக்கத்தவர்

**பாடப்பயிற்சி**

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக.**

1) இயற்கை நமக்கு அளித்த கொடை எது ?

2) பூமியின் மேற்பரப்பு எதனால் வெப்பமடைகிறது ?

3) அனைத்து உயிரினங்களுக்கும் எது தேவை ?

**II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1) பசுமைக் குடில் என்றால் என்ன ?

2) வாகனப் புகையால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

Not to be republished ©KTBS

3) அதிக மழை பொழிவால் விளையும் தீமைகளைக் கூறுக.

4) தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் வாயுக்கள் யாவை?

**III. விரிவான விடை தருக.**

1) பூமி வெப்பமடைவதைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை ?

2) வளிமண்டலத்தின் செயல்களை விவரிக்க.

**இடஞ்சுட்டி விளக்குக :**

1) ''இது இயற்கை நமக்கு அளித்த கொடை''

2) ''வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையைக் குறைக்க வேண்டும்''

**மொழிப்பயிற்சி :**

**சேர்த்தெழுதுக :**

உயிர் + இனங்கள் = பசுமை + குடில் =

இயற்கை + காட்சி = வெப்பம் + கதிர்கள் =

**பிரித்தெழுதுக :**

உணவுப் பொருட்கள் = வாகனங்களிலிருந்து =

வீட்டுக்கொரு = பற்றாக்குறை =

**எதிர்ச்சொல் தருக :**

வெப்பம் இயற்கை

மேற்பரப்பு அதிகம்

அருகில்

©KTBS Not to be re published

**வாக்கியத்தில் அமைக்க :**

இயற்கைக்காட்சி, மேற்பரப்பு, கொடை, இடையூறு, வெள்ளப் பெருக்கு, வாய்ப்பு.

**செயல்பாடு 1 :**

சொற்கோபுரம் அமைக்க


1) நெருப்பின் மற்றொரு பெயர்

2) காட்டில் வசிக்கும்

3) சுவாசிக்க உதவும்

4) முகம் பார்க்க உதவுவது

5) விழுதுகளைக் கொண்டது



**செயல்பாடு 2 :**

**இனமில்லாத சொல்லை வட்டமிடுக :**

1) சூரியன், பூமி, நட்சத்திரம், கடல்.

2) விண், மண், கண், நட்சத்திரம்.

3) பிராணவாயு, கரியமிலவாயு, நைட்ரஜன், கதிர்.

4) வெப்பம், குளிர்ச்சி, பனி, துருவம்.

**செயல்பாடு 3 :**

**சரியான சொல்லால் நிரப்புக :**

1) பத்தாம் ................ (என்/எண்) பேருந்து வந்தது.

2) அதில் ................ (நான்/நாண்) ஏறினேன்.

©KTBS Not to be re published

3) (பணம்/பனம்) ............... கொடுத்துப் பயணச்சீட்டு வாங்கினேன்.

4) பேருந்திலிருந்து வெளியே பார்த்த போது ............... (வாணம்/வானம்) மேக மூட்டமாக இருந்தது.

5) அருகிலிருந்த தோட்டத்திலிருந்து நல்ல .................. (மனம்/மணம்) வீசியது. என் ................. (மணம்/மனம்) மகிழ்ந்தது.

**செயல்பாடு 4 :**

சொற்களை இணைத்து வெவ்வேறு தொடர்களாக்குக :

| | | | |
|---|---|---|---|
| தென்னை | தரும் | காய் | பலா |
| இனிக்கும் | மேற்பரப்பு | கசக்கும் | |
| இளநீர் | மாம்பழம் | சொரசொரப்பு | வேம்பு |

1) தென்னை இளநீர் தரும்.

2) ______________________________

3) ______________________________

4) ______________________________

5) ______________________________

**செயல்பாடு 5 :**

காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி, ஆசிரியரின் வழிகாட்டலுடன், நாடகம் தயாரித்து வகுப்பறையில் நடித்துக் காட்டவும்.

©KTBS Not to be re published

## இலக்கணம்

### செய்வினை – செயப்பாட்டு வினை

எழுவாய் செய்யும் தொழிலை உணர்த்தும் வினை செய்வினை எனப்படும்.

(எ–கா) பூனை எலியைக் கொன்றது. இந்த வாக்கியத்தில் பூனை-எழுவாய். கொன்றது - பயனிலை : எலி - செயப்படுபொருள் இவ்வாறு எழுவாய் சென்றது - பயனிலையாகக் கொண்டு முடியும் வாக்கியம் செய்வினை வாக்கியம் ஆகும்.

எழுவாயின் தொழிலைச் செயப்படு பொருள் அடைவதை உணர்த்தும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.

(எ–கா) எலி பூனையால் கொல்லப்பட்டது. இந்த வாக்கியத்தில் எலி என்னும் செயப்படு பொருள் எழுவாயாக உள்ளது. இது கொல்லப்பட்டது என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு செயப்படுபொருளின் தொழிலை உணர்த்தும் வினையைப் பயனிலையாகக் கொண்டு முடியும் வாக்கியம் 'செயப் பாட்டுவினை' வாக்கியம் ஆகும்.

செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்ற செய்வினை வாக்கியத்தின் செயப்படு பொருளை எழுவாயாக மாற்ற வேண்டும் ; எழுவாயுடன் மூன்றாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும். வினைச் சொல்லின் பகுதியோடு 'படு' என்னும் துணை வினையைச் சேர்த்து எழுவாய்க்கு ஏற்ப மாற்றவேண்டும்.

(எ–டு)

1) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். (செய்வினை) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. (செயப்பாட்டுவினை.)

Not to be re-published ©KTBS

2) ஆசிரியர் பாடம் கற்பித்தார் - செய்வினை.
பாடம் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது - செயப்பாட்டு வினை

3) நான் பாடம் படித்தேன் - செய்வினை.
பாடம் என்னால் படிக்கப்பட்டது - செயப்பாட்டுவினை.

4) நீ பரிசு பெற்றாய் - செய்வினை.
பரிசு உன்னால் பெறப்பட்டது - செயப்பாட்டுவினை.

**வினாக்கள் :**

1) செய்வினை என்றால் என்ன ?

2) செயப்பாட்டு வினை என்றால் என்ன ?

3) செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுவது எப்படி?

**பாடிப்பழகுக :**

உடல் சூட்டை தென்னை தணிக்கும்,
நிலச் சூட்டை மழை தணிக்கும்,
மலைச் சூட்டை வளி தணிக்கும்,
உலகச் சூட்டை மரங்கள் தணிக்கும்,
மரம் நடுவோம் ! உயிர் வளியைப்
பெருக்குவோம் ! சூரியனையே
தணிப்போம் ! மரம் நடுவோம் நாம் !

**வாழ்க்கைத் திறன்கள் :**

1) காடுகள் நமது சுற்றுச் சூழலை மாற்றி அமைக்கின்றன.

2) பூமி வெப்பமடைய காரணங்கள்.

3) மரங்கள் நமக்கு இயற்கை அளித்த கொடை

©KTBS Not to be re published

**கொடுக்கப்பட்ட பகுதியை தமிழில் மொழி பெயர்க்கவும் :**

A Capseller was carrying caps to a fair. The day was hot and he was tired. He sat under a big banyan tree. He kept the bundle of caps by his side and slept.

**விழுமிய கல்வி :**

''உயிர்களிடத்தில் இரக்கம் கொள்ள வேண்டும்''

ஏன் ?


எதற்கு ?

எவ்வாறு ?

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS
Not to be re published

# 20. நறுந் தொகை



தெள்ளிய ஆலின் சிறுபழத்தொரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணியதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே.

- அதிவீரராம பாண்டியர்.

**ஆசிரியர் குறிப்பு :**

இந்நூல் அருந்தமிழ்ப் புலமை பெற்ற அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது. இவர் கொற்கை நகரத்தை அரசு புரிந்தவர் என்று அறியப்படுகிறது. இவர் தென்காசியிலிருந்து அரசு புரிந்தவர் எனவும், கூறுவர். இவர் காலம் கி.பி. 11 லிருந்து 12 - ஆம் நூற்றாண்டு எனச்சிலரும், 15-ஆம் நூற்றாண்டு

Not to be re published
© KIPS

எனச்சிலரும் கூறுவர். இவர் தமிழில் நிரம்பப் புலமை வாய்ந்தவர் வட மொழிப் புலமையும் உடையவர்.

**நூல் குறிப்பு :**

'நறுந்தொகை' இளைஞர் பலராலும் படிக்கப் படுகின்ற நீதி நூல்களில் ஒன்றாக உள்ளது. 'நறுந்தொகை' என்பது 'நீதிகளின் தொகுப்பு' எனப் பொருள் படும்.

**அருஞ்சொற்பொருள் :**

தெள்ளிய - தெளிந்த ; ஆலின் - ஆலமரத்தின், தெள் நீர் - தெளிந்த நீரையுடைய, கயத்து - குளத்திலுள்ள, நுண்ணிதே - சிறியதே, அண்ணல் - பெருமை பொருந்திய, அணி - அலங்கரிக்கப்பட்ட, புரவி - குதிரை.

**கருத்துரை :**

சிறிய ஆலம் பழத்திலுள்ள விதையானது சிறிய மீனின் முட்டையை விடச் சிறியதாயிருந்தாலும் அது முளைத்து வளர்ந்து நால்வகைச் சேனையுடன் அரசரும் தங்கியிருக்க நிழலைத் தரும்.

உருவத்தால் சிறியவரெல்லாம் சிறுமையுடையவர் அல்ல. பெருமையுடையவரும் ஆவர் என்னும், கருத்தைக் கொண்டுள்ளது.

**I. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க :**

1) சிறிய .................. பழத்திலுள்ள விதை.

2) ஆலம் பழத்தின் விதை .................. முட்டையை விடச்சிறியது.

3) ஆல மரத்தின் நிழலில் .................. சேனைகள் தங்கும்.

4) உருவத்தால் .................. சிறுமையுடையவர் அல்லர்.

©KTBS Not to be re published

**II. பொருத்தி எழுதுக :**

1) சூல் - கரு முட்டை
2) கயத்து - குதிரை
3) சினை - குளம்
4) மன்னர் - ஆல மரம்
5) புரவி - படை
6) சேனை - அரசர்

**III. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) மீனின் முட்டையை விடச் சிறியது எது ?
2) அரசர் தங்குவதற்கு நிழலைத் தருவது எது ?

**IV. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) நறுந்தொகைப் பாடலின் கருத்துரையை எழுதுக.
2) நறுந்தொகை - நூல் குறிப்பு வரைக.

**V.** இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக :

1) ''மன்னர்க் கிருக்க நிழலாகும்மே''

## ஆ) மொழிப் பயிற்சி

**I. சேர்த்தெழுதுக :**

படை + ஒடு ; நிழல் + ஆகுமே ; கயத்து + சிறுமீன்.

**II. பிரித்தெழுதுக :**

சினையினும் ; நுண்ணியதேயாயினும் ; சிறுபழத் தொரு

**III. எதிர்ச் சொல் தருக :**

சிறு × ; தெள்ளிய × ; நிழல் × ; மன்னர் × ;

©KTBS Not to be re published

## இ) செயல்பாடுகள்

**செயல்பாடு - 1 :** வாழை, தென்னை, மா, பலா, பனை முதலிய மரங்கள் தங்களைப் பற்றித் தாங்களே கூறுவதுபோல் உரையாடுக.

எ.கா. :

**ஆலமரம் :** நான் அனைவருக்கும் நிழல் தருகின்ற பெரிய மரமாகும். என்னுள் நிறைய விழுதுகள் இருக்கின்றன. விழுதுகள் கைகளைப் போல என்னைத் தாங்குகின்றன .......

**செயல்பாடு - 2 :** உங்களுக்குத் தெரிந்த பல மரங்களின் பெயர்களையும், அவற்றின் இலைகளின் வடிவங்கள் மற்றும், பயன்களை எழுதுக. எவை எவற்றைவிடப் பெரியது அல்லது சிறியது என்னும் குறிப்பிடுக.

## ஈ) வாழ்க்கைத் திறன்

1) உமக்கு பிடித்த மரத்தின் வடிவத்தைக் களிமண் உதவியுடன் வடிவமைக்க.

## உ) விழுமிய கல்வி

1) மரம் வெட்டுவதை தவிர்க்க வேண்டிய வழிமுறைகள் என்னென்ன ? என்பதை நீவிர் அறிந்து கொள்க.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be republished

# 21. நண்பனுக்கோர் கடிதம்

(கருநாடகத்தின் தேசிய பூங்காக்களும் வனவிலங்கு சரணாலயங்களும்)

பெங்களூரு,

15.05.2013

அன்புள்ள நண்பன் சரவணனுக்கு,

அன்பு மறவா நண்பன் முருகன் எழுதுவது. நலம், நலமறிய ஆவல். இக்கோடை விடுமுறையில் நான் என் பெற்றோருடன் கருநாடகத்திலுள்ள வனவிலங்கு சரணாலயங்களைக் கண்டு மகிழ்ந்தேன். பழம் பெருமை வாய்ந்த கருநாடகம் இந்தியாவின் தென்பகுதியில் உள்ளது. இது நிலவளம், நீர்வளம் மக்கள்வளம், வனவளம், தொழில்வளம் நிறைந்த மாநிலமாகும். இங்குள்ள மேற்கு மலைத்தொடர் இம்மாநிலத்தின் தனிச்சிறப்பாகும். இங்குப் பல நதிகள் உற்பத்தியாகி இம்மாநிலத்தைச் செழிப்படையச் செய்கின்றன. நதிகள் பாயும் பகுதிகளில் பல காடுகள் உள்ளன. காடுகளில் பல வனவிலங்குகள் வாழ்கின்றன. இத்தகைய பெருமையும் சிறப்பும் கொண்ட கருநாடக மாநிலத்திலுள்ள பல சரணாலயங்களின் சிறப்புகளை இக்கடிதம் மூலம் உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



Not to be republished ©KTBS

முதலில் பன்னேருகட்டா தேசியப் பூங்காவைக் காணச் சென்றோம். அது பெங்களூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இது 25,000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட பூங்காவாகும். இப்பூங்கா எண்ணிக்கையில் குறைந்து போகும் பல விலங்குகளை பாதுகாக்கும் இருப்பிடமாக அமைந்து உள்ளது. இங்குக் கரடிகள், புள்ளி மான்கள், சாம்பார் மான்கள், புலிகள், சிங்கங்கள் ஆகியனவும் அதிக எண்ணிக்கையில் காட்டு யானைகளும் உள்ளன.

இங்கு ஒரு மிருகக்காட்சி சாலை அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் பட்டாம்பூச்சி பூங்கா ஒன்றையும் அமைத்துள்ளனர். இதன் நோக்கம் மேற்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள பட்டாம்பூச்சிகளை வளர்த்து, இனவிருத்தி செய்து இப்பூங்காவில் அவற்றை சேர்ப்பதாகும்.




பிறகு ரங்கன திட்டு பறவைகள் சரணாலயத்திற்குச் சென்றோம். இது மைசூரிலிருந்து பச்சிமவாகினிக்குச் செல்லும் வழியில் 3 கி.மீ. தொலைவிலுள்ளது. இது தென்னிந்தியாவின் சிறப்புமிக்க பறவைகள் சரணாலயமாகும். இதை டாக். சலீம் அலி என்ற புகழ்பெற்ற இந்தியப் பறவையியல் அறிஞர், மைசூரு அரசுக்காக

©KTBS Not to be re published

பறவைகளை ஆழ்ந்து ஆராயும்பொழுது இதைக் கண்டுபிடித்தார். நீர்ப்பறவைகளுக்கு ஏற்ற சிறப்பு வாழ் இடங்களை இப்பூங்கா தந்துள்ளது. நான்கு வகை எக்ரட்டுகள், மூன்று வகை கொமரண்ட்டுகள், பல்வகை கொக்குகள், ஸ்பூன்பில் போன்றவை இங்கு தங்குகின்றன. வருடந்தோறும் பறவைகளைக் கண்டுகளிப்பது நன்று, ஆனால், மழைக்காலங்களில் அயல்நாடுகளிலிருந்து பறவைகள் இங்கு வந்து, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து, இனவிருத்தி செய்து தனது சொந்த நாட்டிற்குக் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும் அழகை ரசிப்பது மேலும் மகிழ்ச்சியளிக்கிறது.

அடுத்ததாக நாங்கள் பண்டிப்பூர் தேசிய பூங்காவிற்குச் சென்றோம். இப்பூங்கா பெங்களூரிலிருந்து 220 கி.மீ. தொலைவிலும் மைசூரிலிருந்து 80 கி.மீ தொலைவிலும் உள்ளது. இது புலிகள் வாழும் காட்டுப்பகுதியாகும். இங்கு பலவகைத் தாவரங்களும், விலங்குகளும் உள்ளன. இங்குள்ள உறுதியான, விலைமதிப்பற்ற மரவளங்கள் குறிப்பிடத்தக்கவை. பல ஆசிய யானைகள் ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கு இடம்பெயர இப்பூங்காவைப் பயன்படுத்துகின்றன. காட்டுப்பூனை, காட்டுப்பன்றி, சிறுத்தை முதலான விலங்குகளையும் இங்குப் பார்த்தோம்.



ஒரு காலத்தில் மைசூரை ஆண்ட அரசர்கள் வேட்டையாடப் பயன் படுத்திய காட்டுப்பகுதியாகத் திகழ்ந்த ராஜீவ் காந்தி தேசிய பூங்காவை (நாகரஹோளே) கண்டு களிக்கச் சென்றோம். இது பெங்களூரிலிருந்து 230 கி.மீ. தொலைவிலுள்ளது தற்போது, இந்தியாவின் மிகச்சிறப்புமிக்க விலங்கினங்களான யானை, புலிகளின்

©KTBS Not to be republished

இருப்பிடமாகத் திகழ்கிறது. இவ்விலங்கினங்களுக்காக பல பாதுகாப்புத் திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அங்குச் சுமார் 60 புலிகள் மற்றும் 80 சிறுத்தைப் புலிகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. காட்டுப் பூனைகள், வரிக்கழுதைப் புலி (Striped hyena) குள்ள நரிகள் முதலியன இப்பூங்காவில் உள்ளன.



தொடர்ந்து பயணம் செய்து ஆதிசுன்சுனகிரி மயில் சரணாலயத்திற்குச் சென்றோம். இது பெங்களூரிலிருந்து 110 கி.மீ. தொலைவிலுள்ளது. மங்களூருக்குச் செல்லும் வழியிலுள்ள குணிகல் அல்லது எடையூர்க்குச் சென்றால் ஆதிசுன்சுனகிரியை அடையலாம். 1981 ஆம் ஆண்டு மயில்களுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்தில் இச்சரணாலயம் அமைக்கப்பட்டது. தென்னிந்தியாவின் பல சிறிய பாலூட்டிகளும் இங்கு தென்படுகின்றன. அவற்றில் சில கீரிப்பிள்ளை, காட்டுப்பூனை, கருமைநிற பின் கழுத்துள்ள முயல் போன்றவையாகும். பழம் தின்னும் வெளவால்களும் இங்கு காணப்படுகின்றன.

நாட்டின் அழகு நல்ல சுகாதாரம்,
காட்டின் அழகு வனவிலங்குகளின் ஆரவாரம்,
இயற்கையின் அணி பசுமை மரங்கள்
அதற்கு அணி நகர்வலம்.

இத்தனை சிறப்புமிக்க சரணாலயங்களைக் கண்ட மகிழ்ச்சியில் களைப்பை மறந்து மறவா நினைவுகளுடன் வீடு திரும்பினோம்.

©KTBS Not to be republished

நான் கண்ட இவ்வெழில்மிகு காட்சிகளை நீயும் கண்டு மகிழ விரும்புகிறேன்.

அன்புடன்,

முருகன்

பெறுநர்,

க. சரவணன்,
எண் 72, இரங்கராஜபுரம் சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

**பயிற்சி :**

**அருஞ்சொற்பொருள் :**

1) சுகாதாரம் - சுத்தம்
2) ஆரவாரம் - பேரொலி
3) நகர்வலம் - நகரத்தை சுற்றி வருதல்
4) இருப்பிடம் - வசிக்கும் இடம்
5) இனவிருத்தி - இனப்பெருக்கம்.
6) சரணாலயம் - புகலிடம்.
7) பறவையியல் அறிஞர் - பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்.

**அ. I. ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும்.**

1) கருநாடக மாநிலம் எங்குள்ளது ?
2) கருநாடக மாநிலத்தின் தனிச்சிறப்பு யாது ?
3) பெங்களூரிலிருந்து பண்டிப்பூர் தேசியப் பூங்கா எவ்வளவு தொலைவில் உள்ளது ?

©KTBS Not to be re published

4) பன்னேருகட்டா தேசிய பூங்காவின் நிலப்பரப்பு எவ்வளவு ? அது எங்குள்ளது ? அங்குள்ள பறவை இனங்கள் யாவை ?

**அ. II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக.**

1) பண்டிப்பூர் தேசிய பூங்காவில் குறிப்பிடத் தக்கவை யாவை ?

2) பன்னேருகட்டாவிலுள்ள பட்டாம் பூச்சிப் பூங்காவைப் பற்றி இரண்டு வாக்கியங்களை எழுதுக.

3) ராஜீவ் காந்தி தேசிய பூங்காவில் காணப்படும் விலங்குகள் யாவை ?

4) நாகர ஹோளேவிலுள்ள தேசிய பூங்காவின் பெயர் என்ன ?

5) ஆதி சுன்சுனகிரி மயில் சரணாலயம் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது ?

6) தென்னிந்தியாவின் சிறப்புமிக்க பறவைச் சரணாலயம் எது ?

**III. சிறு குறிப்பு வரைக :**

1) ராஜீவ் காந்தி தேசியப் பூங்கா

2) ரங்கனதிட்டு பறவைச் சரணாலயம்.

**ஆ)I. சேர்த்து எழுதுக :**

1) காட்டு + பகுதி = 2) விலங்கு + இனங்கள் =

3) தனி + சிறப்பு = 4) நண்பன் + ஆன =

5) பெற்றோர் + உடன் =

©KTBS Not to be re published

**II.** பிரித்து எழுதுக :

1) நலமறிய =    2) சரணாலயம் =

3) சேர்த்துள்ளனர் =    4) நோக்கமாகும் =

5) வேட்டையாட =

**III. வாக்கியங்களில் உள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக :**

பல அரிய யானைகள் ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கு இடம்பெயற பண்டிப்புர் தேசியப் பூங்காவைப் பயன்படுத்துகின்றன. மேற்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள பட்டாம்புச்சிகளை வளர்த்து இனவிருத்தி செய்து பன்னேருகட்டா பட்டாம்புச்சிச் பூங்காவில் சேர்க்கின்றனர். நாகர ஹொளேவில் 60 புளிகள் மற்றும் 80 சிருத்தைகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

**விழுமிய கல்வி :**

காடுகளை நகரமாக்கிக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், விளையாட்டாய் வேட்டையாடி வீம்புக்காக பணம் சேர்க்க விலங்குகளைக் கொல்வதால் காணாமல் போன வனவிலங்குகள் கணக்கிலடங்கா. இனிவரும் சந்ததியினர் விலங்குகளின் பெயர்களை படத்தில் பார்க்கவே இயலுமேயன்றி, நேரில் காண இயலுமா? இந்நிலையில் பறவைகளும் பாதைமாறி இயற்கையின் அமைதியை நாடிச் செல்வதால் நகரத்தின் வான் வழி அலங்காரம் காணாமல் போகின்றன.

கடலில் எவ்வளவு எடுத்தாலும் தரவு கொடுப்பது போல், இயற்கை உயிர் பொக்கிஷங்களைத் தருகின்ற காட்டைக் காப்போம்.... வருங்கால சந்ததியினரும் சூள் உரைப்போம்.

©KTBS Not to be republished

**செயல்பாடு :**

உங்கள் பள்ளிச் சுற்றுலாவின்போது நீங்கள் கண்டுகளித்த இடங்களைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

**வாழ்க்கைத் திறன்கள் :**

1) தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு.

அ) நன்கு படிக்க வேண்டும்.

ஆ) பக்கத்து மாணவனைப் பார்த்து காப்பியடிக்க வேண்டும்.

இ) நன்கு தூங்க வேண்டும்.

விடை : ........................................................................

2) சாலையில் செல்லும் போது

அ) சாலை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆ) சாலையில் வாகனங்களுக்கு இடையே செல்ல வேண்டும்.

இ) சாலையின் நடுவே செல்ல வேண்டும்.

விடை : ........................................................................

3) பள்ளியின் சுற்றுப்புறத்தை.

அ) தூய்மையாக வைக்க வேண்டும்.

ஆ) அசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

இ) கால் நடைகளை வளர்க்க வேண்டும்.

விடை : ........................................................................

✽ ✽ ✽ ✽ ✽

© KTBS Not to be re published

# 22. டைட்டானிக் கப்பல்

நாம் வாழும் பூமிப்பந்தில் இயற்கைப் பேரழிவுகள், போர்கள், வெற்றித் தோல்விகள், சாதனைகள், துயரங்கள், மரணங்கள் என்று எத்தனை எத்தனையோ நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்து கொண்டும் இருக்கின்றன. அவை அனைத்தும் வரலாற்றில் இடம் பிடிப்பதில்லை. அவற்றில் சில நிகழ்வுகள் மட்டும் சரித்திரங்கள் ஆகின்றன. மற்றவைகள் மறைந்து விடுகின்றன.



முன்னுரை :

இரண்டாம் உலகப்போரின்போது, ஜப்பானின் நகரங்களான 'ஹிரோஷிமா', 'நாகசாகி' மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளால் ஏற்பட்ட உயிரிழப்பு, இந்திய விடுதலைப் போரில் 'ஜாலியன் வாலாபாக்' படுகொடுலை ; கொடுங்கோலன் ஹிட்லரால், யூதர்கள் கொன்று குவிக்கப்பட்ட கொடூரம். அண்மையில் இந்தோனேசியா, ஜப்பான் நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம், ஆழிப்பேரலை (சுனாமி) போன்றவற்றை உலகம் எளிதில் மறந்து விடக்கூடுமா ? சில சோக நிகழ்ச்சிகள் மனிதன் மனதில் கல்வெட்டாகப் பதிந்துவிடும். எத்தனை ஆண்டுகள்



© KTBS Not to be republished

ஆனாலும், நமது நினைவிலிருந்து அவற்றை அகற்ற முடியாதவைகளில் உலக அளவில் தெரிந்த ஒருசோக விபத்தே ‘டைடானிக்’ கப்பல் விபத்து ஆகும்.

கடல்களில் எத்தனையோ கப்பல்கள் கவிழ்ந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கில் மக்கள் மாண்டிருக்கிறார்கள். ஆனால், ‘டைடானிக்’ சோகம் ஏற்படுத்திய பாதிப்பை இதுவரையில் எந்த கடல் விபத்தும் ஏற்படுத்தவில்லை.

**கப்பல் அமைப்பின் சிறப்பு :**

இங்கிலாந்து நாட்டிலுள்ள ‘பெல்பாஸ்டில்’ என்ற கப்பல் கட்டும் தளத்தில் டைட்டானிக் கப்பல் 1912 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது ஒரு ஆடம்பர பயணிக்கப்பல் இதன் நீளம் 882.9 அடி, அகலம் 296.06 அடி, உயரம் 175 அடி. அதன் மொத்த எடை 46,328 டன். இதன் கொள்ளளவு 2,435 பயணிகள் மற்றும் 892 சிப்பந்திகள் கப்பல் கட்டுவதற்கான செலவு 7.5 மில்லியன் டாலர்கள். இது அனைத்து வசதிகளையும் உட்கொண்ட ஒரு உல்லாசபுரி என்றே அழைக்கக் கூடிய ஒரு பிரமாண்டமான கப்பல், இதில் 20 உயிர்காக்கும் படகுகள் இருந்தன. அக்காலத்தில் இக்கப்பலில் பயணம் மேற்கொள்வது ஒரு கௌரவமாகவும் மற்றும் பெருமையாகவும் கருதப்பட்டது.

**முதற் பயணம் :**

கேப்டன் எட்வர்டு ஜே. ஸ்மித் தலைமையில் டைட்டானிக் கப்பலின் முதற்பயணம், இங்கிலாந்து நாட்டிலுள்ள ‘சவுத்தாம்டன்’ துறைமுகத்திலிருந்து 1912 ஏப்ரல் 10 - ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்குக்குப் புறப்பட்டது. மிகநவீனமாகவும், ஆடம்பரமாகவும் கட்டப்பட்ட டைட்டானிக் கப்பலில் பயணம் மேற்கொண்டவர்கள் மொத்தம் 2,224 பேர்கள். பயணிகளில் ஆண்கள் 869 பேர், பெண்கள் 447 பேர், குழந்தைகள்

Not to be re published ©KTBS

107 பேர் மற்றவர்கள் சிப்பந்திகள். அதில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலோர் கோடீசுவரர்கள்.

**வாழ்க்கையின் இறுதிப்பயணம் :**

மிகப் பெரும் செல்வந்தர்கள் பயணம் செய்ததினால் 'கோடீசுவரர்கள் ஸ்பெஷல்' என்றழைத்தார்கள். அதில் பயணித்தவர்கள் அனைவருமே இதனைப் பெரும்பேறாகக் கருதினார்கள், இதனால் கப்பலில் ஏறியபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால், பாவம் ! ....... அதுதான் தங்களுடையை வாழ்க்கையின் இறுதிப் பயணம் என்பதை அபபோது அறிந்திருக்க நியாயம் இல்லை. மூன்று நாட்கள் பயணம் மிக மகிழ்ச்சியும் உற்சாகமுமாகக் கழிந்தது. கடலில் அமைதியாக சென்று கொண்டிருந்த கப்பல் ஏப்ரல் 14-ந் தேதியன்று நள்ளிரவில் திடீரென்று பனிப்பாறையில் மோதி பலத்த சேதம் அடைந்தது. கப்பலின் முன்பகுதியிலிருந்த அறைகளுக்குள் மடைதிறந்த வெள்ளம் போல் கடல்நீர் புகுந்து மூழ்க ஆரம்பித்ததில் கப்பலின் மூன்றாம் வகுப்புப் பயணிகளிருந்த பகுதிதான் பெரிதும் பாதிப்புக்குள்ளானது.



Not to be republished ©KTBS

**அவசரகாலத் தகவல் :**

கப்பல் மூழ்கத் தொடங்கியதும் சிப்பந்திகள் அவசர கால நடவடிக்கையான தகவல் அனுப்புவது ஒளியைச் சிதறும் ராக்கெட்டுகளை வெடிப்பது போன்றவற்றின் மூலம், கப்பல் விபத்தில் சிக்கியுள்ளது என்பதை தெரிவிக்க முயன்றனர் ஆனால் அப்பகுதியில் சென்று கொண்டிருந்த பிற கப்பல்களுக்கு, இது பற்றி உடனடியாகத் தெரியாமல் போனதால் உடனடி உதவி எதுவும் கிடைக்காமல் போய்விட்டது. விபத்து நடந்த இடம் மிகவும் ஆழமான பகுதியாகும் கப்பலினுள் கடல் நீர் பாய ஆரம்பித்த உடனே கப்பல் ஒருபக்கமாக சாய்ந்து மெல்ல, மெல்ல கடல்நீரில் மூழ்க ஆரம்பித்தது. இதனால் கப்பலிலிருந்த பயணிகள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக பலமாகப் போராடினார்கள். பலர், கடலில் குதித்தனர். 15-ந் தேதி அதிகாலையில் கப்பல் இரண்டாக உடைந்து முழுவதுமாக கடலுக்குள் மூழ்கி ஜலசமாதி ஆனது.

**உயிர்ப் போராட்டம் :**

கப்பலில் இருந்தவர்களில் 1517 பேர் கடலில் மூழ்கி பலி ஆனார்கள். மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தவர்களில் 530 க்கும் அதிகமானோர், மற்றும் கப்பல் உயர் அதிகாரிகள், சிப்பந்திகள் பெரும்பாலோர் உயிரிழந்தனர். விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் விரைந்து சென்றனர்.

கடலில் குதித்தும் விழுந்தும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களில் 710 பேர் மீட்புக் குழுவினாரால் மீட்கப்பட்டனர். கடலில் ஆங்காங்கு மிதந்த பல சடலங்களும் மீட்கப்பட்டன.

உலகையே உலுக்கிய இந்த கோர விபத்து நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும், அச்சோகம் அனைவர் மனதிலும் நிழலாடிக் கொண்டே இருக்கிறது.

**உயிர் தப்பியவரின் அனுபவங்கள் :**

டைட்டானிக் கப்பலில் பயணம் செய்து உயிர்தப்பியவர்களில் ‘ஜேக்தாயர்’ என்பவரும் ஒருவர். அப்போது அவருக்கு வயது 17. அவர் எழுதியநாட்குறிப்பிலிருந்த விவரம் பின்வருமாறு.

Not to be republished ©KTBS

1912-ம் ஆண்டு ஏப்ரல் 14-ந்தேதி நள்ளிரவுக்குப் பின்னர் கப்பல் கவிழத் தொடங்கிய தகவல் கப்பல் பயணிகளிடையே பரவத் தொடங்கியது. பெருங்குழப்பத்தாலும் மரணபயத்தாலும் அங்குமிங்குமாக அலைந்து தப்பிக்க வழி தேடினார்கள். அப்பொழுது, என் பெற்றோரை பிரிந்து விட்டேன். அச்சமயத்தில், கப்பல் ஆபத்திலிருப்பதை தெரிவிப்பதற்காக அதிகாரிகள் வானத்தை நோக்கி ராக்கெட்டுகளைச் செலுத்தி வெடிக்கச் செய்துகொண்டேயிருந்தனர். இதனால் இருளாக இருந்த வானத்தில் ஒளிவெள்ளம் தோன்றியது. அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த கப்பல்கள் கவனித்தனவா ? இல்லையா ? என்பது, தெரியவில்லை. நிலமை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்ததால், கப்பலிலிருந்து உயிர்க்காக்கும் படகுகள் இறக்கப்பட்டன. அதில் பலர் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள். படகில் இடம் கிடைக்காததாலும் கப்பல் ஒருபக்கம் சாய்ந்தபடி தொடர்ந்து மூழ்கிக் கொண்டிருந்ததாலும், உயிர் தப்புவதற்கு வேறுவழி இல்லாமல் பலர் கடலில் குதித்தனர். அதேபோல் நானும் குதித்தேன். வானம் சந்திரனில்லாமல் இருண்டிருந்தது. எங்கும் கும்மிருட்டு. உடலை உறையவைக்கும் அளவுக்குக் கடல்நீர் குளிர்ச்சியாக இருந்தது.

சற்றுத் தொலைவில் கவிழ்ந்து கிடந்த உயிர்காக்கும் படகைப் பற்றியபடி சிலர் மிதந்து கொண்டிருந்தனர். நான் அதன் அருகே சென்றபோது அருகில் வரவிடாமல் தள்ளிவிட்டனர். ஆங்காங்கு சில அடி தூரங்களில் மிதந்து கொண்டிருந்த சில உயிர்காக்கும் படகுகளில் குறைவான நபர்களிருந்தனர். காப்பாற்றுமாறு நானும் பலரும் கூக்குரலிட்டோம். ஆனால், அவர்கள் எங்களைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. மற்றவர்களையும் படகில் ஏற்றினால் பாரம் தாங்காமல் படகு கவிழ்ந்து தாங்களும் சாகவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ ! என்று, அவர்கள் பயந்தனர்.

©KTBS Not to be republished

**சோகத்திலும் ஒருமகிழ்ச்சி** இறுதியில், 15-ந் தேதி காலை 7-30 மணிக்கு அவ்வழியாக வந்த ஒரு படகில் என் தாயார் 'மரியன்' இருப்பதை நான் பார்த்தேன். **சோகத்திலும் ஒருமகிழ்ச்சி** என்னைப் பார்த்ததும் கட்டியணைத்து உச்சி முகர்ந்து இறைவனுக்கு நன்றி கூறினார்.

இவ்விபத்தில் எனது தந்தையை இழந்து விட்டேன் அதன் பின்னர் 3-நாட்கள் பயணத்துக்குப் பின் நியூயார்க் நகரை அடைந்தோம். அம்மூன்று நாட்களும் நாங்கள் அடைந்த வேதனையையும், துயரத்தையும் வார்த்தைகளால் வடிக்க முடியாது. இவ்வாறு, 'ஜேக்தாயர்' எழுதியுள்ளார்.

**அருஞ்சொற் பொருள் :**

வீசிய - எறிந்த ; கொடூரம் - கொடுமை ; ஆழிப்பேரலை - சுனாமி; பிரமாண்டம் - மிகப்பெரியது ; நவீனம் - புதுமை ; தகவல் - செய்தி; சடலங்கள் - பிணங்கள் ; சோகம் - துயரம் ; உச்சிமுகர்ந்து - தலைப் பகுதியில் முத்தம் இடுதல்.

**அ) பாடப்பயிற்சி :**

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) ஆழிப்பேரலை என்றால் என்ன ?

2) டைட்டானிக் கப்பல் தன் முதற் பயணத்தை என்று தொடங்கியது ?

3) டைட்டானிக் கப்பலின் கேப்டன் பெயர் என்ன ?

4) டைட்டானிக் கப்பல் எதன்மீது மோதி விபத்துக் குள்ளானது?

5) விபத்து நடந்த இடம் எம்மாதிரியான இடம் ?

Not to be republished ©KTBS

6) கடலில் எத்தனைபேர் மூழ்கிப் பலியானார்கள் ?

7) ஜேக் தாயர் யார் ?

8) வானத்தை நோக்கி எதனைச் செலுத்தினார்கள் ?

9) இவ்விபத்தில் ஜேக்தாயர் யாரை இழந்தார் ?

**II.ஆ) இரண்டு அல்லது மூன்று வாக்கியத்தில் விடையளிக்க.**

1) இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்கா ஜப்பானின் எந்த நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசியது?

2) இயற்கைப் பேரழிவுகள் யாவை ?

3) டைட்டானிக் கப்பலின் நீளம், அகலம் உயரம் ஆகியனவற்றைக் குறிப்பிடுக.

4) எந்தத் துறைமுகத்திலிருந்து எந்த ஆண்டில் (தேதி) டைட்டானிக் கப்பல் தனது முதல் பயணத்தை மேற்கொண்டது?

5) டைட்டானிக் கப்பல் பயணத்தை ஏன் 'கோடீசுவரர்கள் ஸ்பெஷல்' என அழைத்தார்கள் ?

6) அவசரகால தகவல் எவ்வாறு அனுப்பப்படுகிறது ?

7) டைட்டானிக் கப்பல் விபத்து எவ்வாறு நடந்தது ?

8) பயணிகள் கடலில் ஏன் குதித்தனர் ?

9) உயிர்காக்கும் படகுகளில் இடம் கிடைக்காதவர்கள் என்ன செய்தனர் ?

10) ஜேக்தாயர் எவ்வாறு மீட்கப்பட்டார் ?

**III. இ. ஐந்து வாக்கியங்களில் விடை தருக.**

1) டைட்டானிக் கப்பல் விபத்து மறக்க முடியாத ஒரு நிகழ்வு ஏன் ?

2) 'டைட்டானிக் கப்பல்' குறிப்பெழுதுக.

©KTBS Not to be re published

3) டைட்டானிக் கப்பலின் முதற்பயணத்தை விவரிக்கவும்.

4) கப்பல் விபத்திலிருக்கும்போது மற்ற கப்பல்களுக்கு இரவு நேரங்களில் எவ்வாறு தகவல் அனுப்புவார்கள் ?

5) ஜேக்தாயரின் உயிர்தப்பிய அனுபவங்களை எழுதுக.

## மொழிப் பயிற்சி :

### I. சேர்த்தெழுதுக :

பூமி + பந்தில் ; ஒன்று + இரண்டு ; கவிழ்ந்து + இருக்கின்றன; நாட்டில் + உள்ள ; முதல் + பயணம் ; பனி + பாறை.

### II. பிரித்தெழுதுக :

அறிந்திருக்க ; ஜலசமாதி ; உயிரிழந்தனர் ; உயிர் காக்கும் ; சந்திரனில்லாமல் ; கட்டியணைத்து.

### III. எதிர்ச்சொல் தருக :

வெற்றிகள் ; முதற்பயணம் ; செல்வந்தர்கள் ; மகிழ்ச்சி ; வானம்; குளிர்ச்சி ; ஏற்றினால்.

### IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

போர்கள் ; சுனாமி ; பயணம் ; நவீனமாக ; கோடீசுவரர்கள்; நள்ளிரவில் ; வெள்ளம்.

### V. செயல்பாடுகள் :

1) டைட்டானிக் கப்பல் பற்றிய புகைப்படங்கள் மற்றும் செய்திகளைச் சேகரிக்கவும்.

2) தீவிரவாதம் நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் எவ்வாறு? விவாதிக்கவும்.

©KTBS Not to be re published

3) நீ அண்மையில் சென்றுவந்த சுற்றுலாவைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதவும்.

**வாழ்க்கைத் திறன்கள் :**

1) நீ வாழும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டால்.

அ) மற்றவர்கள் தகவல் அனுப்புவார்கள் என ஒதுங்கி கொள்வது.

ஆ) தீ அணைக்கும் நிலையத்திற்கு தகவல் அனுப்புவது.

இ) முடிந்தவரையில் உதவிக்காக மற்றவர்களை திரட்டுவது.

விடை : ..........................................................................

2) குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. திருஷ்டி சுற்றிப் போடலாம் என்கிறார் பாட்டி. அது பற்றி நீ என்ன நினைக்கிறாய்.

அ) பாட்டி சொல்வது சரியாகத்தான் இருக்கும்.

ஆ) உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

விடை : ..........................................................................

3) சந்திர கிரகணம் எப்படி நிகழ்கிறது ?

அ) பெரிய பாம்பு வந்து சந்திரனை விழுங்குகிறது.

ஆ) சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே பூமி வருவதால் சந்திரக் கிரகணம் உண்டாகிறது.

விடை : ..........................................................................

©KTBS Not to be republished

## விழுமிய கல்வி :

### I. உயிர்களிடத்து அன்பு வேண்டும்.

ஒருசிற்றூர், அவ்வூரில் மது என்னும் சிறுவன் வசித்து வந்தான். கோடை வெயிலைத் தணிக்க அருகிலிருந்த கிணற்றடிக்குச் சென்று குளிக்கத் தொடங்கினான். சிறிய வாளியினால் நீரைச்சேந்தி, ஒரு பெரிய வாளியில் ஊற்றிக்கொண்டிருந்தான். அப்போது, தாகத்தால் தவித்த பசு ஒன்று வாளியினுள் தலையைவிட்டுத் தண்ணீர் குடிக்கத் தொடங்கியது. இதனைக் கண்ட, மது அதன்மேல் மிகுந்த இரக்கம் கொண்டான். ஐயோ பாவம் ! எவ்வளவு? தாகமிருந்தால் இப்பசு துணிந்து வந்து நீரை அருந்தும் என்று எண்ணினான்.

1) நீ என்ன செய்திருப்பாய், பசுவை விரட்டுவாயா அல்லது நீரை அளிப்பாயா ?

விடை : ..........................................................................

### II. ஒருவன் எத்தனை வேளை சாப்பிடலாம்.

ஒருவேளை உண்பவன் ''யோகி''.

இருவேளை உண்பவன் ''போகி''.

மூவேளை உண்பவன் ''ரோகி''.

எப்போதும் உண்பவன் ''பாவி''.

வளரும் குழந்தைகளுக்கு விதிவிலக்கு.

### III. 'நீண்ட ஆயுள் பெற'

நாம் நீண்ட ஆயுள் பெறுவதற்கு நாள் தோறும் சுவாசப் பயிற்சி செய்யவேண்டும். பிராணயாமம் என்பது மனிதப் பிறவிக்கே உரிய அரிதான யோகச் சுவாசக்கலை. நாம் உண்ணாமலும் நீர்

©KTBS Not to be re published

அருந்தாமலும் பல நாட்கள் இருந்துவிடலாம். ஆனால் உயிருக்கு ஆதாரமான சுவாசம் இல்லாமல் சில நிமிடங்கள் கூட உயிர் வாழமுடியாது.

நமக்குள் ஒரு நிமிடத்திற்குச் சுமார் பதினெட்டு தடவை மூச்சுக்காற்று போய்வருகிறது. இச்செயலுக்கு இதயம் நுரையீரல்கள் மூளை ஆகியவற்றின் முக்கூட்டுத் திறன்கள் ஒருங்கிணைகின்றன.

இந்த பூமி ஒரே அச்சில் ஒரே வேகத்தில் நிலையாகச் சுழன்று கொண்டிருக்கிறது. இதன் சுழற்சியில் ஏற்படும் தடுமாற்றம் நில நடுக்கமாகவும் கடல் கொந்தளிப்பாகவும் வெளிப்படுகிறது. உலகின் எந்தச் செயலும் நிதானத்தை இழக்கும்போது அழிவைத் தேடிக் கொள்கிறது. வேகம் என்பது ஆபத்தானது என்பதை உயிர் மூச்சே நிரூபிக்கிறது. வேகமாக சுவாசிக்கும் நாய், சராசரி 15 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்கிறது. நிதானமாக சுவாசிக்கும் யானை 70 ஆண்டுகள், ஆமை 150 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன.

வேகமாகச் சுவாசிப்பவன் அற்ப ஆயுளில் இறந்து விடுகிறான். நிதானமாகச் சுவாசிப்பவன் நீடூழி வாழ்கிறான். சங்கீத வித்துவான்கள் நீண்டகாலம் உயிர் வாழ்கிறார்கள். காரணம் பாட்டுப்பாடும்போது நீண்ட மூச்சு விடுகிறார்கள். அதனால் சுவாசம் கட்டுப்பட்டு ஆயுள் கூடுகிறது. பிராணயாமம் என்னும் சுவாசப் பயிற்சியை மேற்கொள்ளும்போது மட்டுமே அதன் அளப்பரிய அற்புதங்களைப் பெறலாம்.

Not to be republished ©KTBS

பாடிப்பழகுக :

## புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே



புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே
வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே
எங்கள் மது சூதனன் புகழ்பாடுங்களே
- புல்லாங்குழல்

பன்னீர் மலர் சொரியும் மேகங்களே
எங்கள் பரந்தாமன் மெய்யழகைப் பாடுங்களே
தென்கோடி தென்றல் தரும் ராகங்களே
எங்கள் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி புகழ் பாடுங்களே
- புல்லாங்குழல்

குருவாயூர் தன்னில் அவன் தவழ்கின்றவன்
ஒரு கொடியோடு மதுராவை ஆள்கின்றவன்
திருவேங்கடத்தில் அவன் அருள்கின்றவன்
அந்த ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்
- புல்லாங்குழல்

பாஞ்சாலி புகழ்காக்க தன்கை கொடுத்தான்
அன்று பாரதப் போர்முடிக்கச் சங்கை எடுத்தான்
பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கைக் கொடுத்தான்
நாம் படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான்
- புல்லாங்குழல்

©KTBS Not to be re published

# இலக்கணம்

## நிறுத்தக் குறிகள்

வாக்கியங்களில் உள்ள பொருளுக்கு ஏற்ப நிறுத்திப் படிக்க வேண்டிய கால அளவைக் குறிக்கும் குறியீடுகளுக்கு 'நிறுத்தற் குறிகள்' என்று பெயர். பொருளை விளக்கவும், உணர்ச்சியை விளக்கவும், நிறுத்திப் படிக்கவும் நிறுத்தற் குறிகள் தேவைப் படுகின்றன.

**அவை வருமாறு :**

| | | |
|---|---|---|
| 1) | காற் புள்ளி | , |
| 2) | அரைப் புள்ளி | ; |
| 3) | முக்காற் புள்ளி | : |
| 4) | முற்றுப் புள்ளி | . |
| 5) | வினாக் குறி | ? |
| 6) | உணர்ச்சிக் குறி (ஆச்சரியக்குறி) | ! |
| 7) | மேற்கோள் குறி | ‘‘ ’’ |

### 1) காற் புள்ளி :

காற்புள்ளி வரும் இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும். காற்புள்ளி இடவேண்டிய இடங்கள் வருமாறு.

1) பொருள்களை எண்ணும் போது காற் புள்ளி இடவேண்டும்.

(எ-டு) : இயல், இசை, நாடகம்

மெய், வாய், கண், மூக்கு, செவி.

2) சொற்கள் இரண்டாய் அடுக்கி வரும்போது காற்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) : இன்பமும் துன்பமும் வேண்டுதலும் வேண்டாமையும்.

செல்வமும் வறுமையும் இல்லாதவன் துறவி.

©KTBS Not to be re-published

3) மேற்கோள் குறி, தொடங்குமுன் காற்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) வள்ளுவர், ''கற்றிலனாயினும் கேட்க'' என்று கூறியுள்ளார்.

4) வாக்கியங்களை இணைக்கும் ''ஆகையால், ஆனால், ஆயினும் எனினும், எனவே'' போன்ற, இணைப்புச் சொற்களுக்குப் பின் காற்புள்ளி இட வேண்டும்.

(எ-டு) தேர்வு நெருங்கிறது, ஆகையால், ''நாம் நன்கு படிக்க வேண்டும்.''

5) வினையெச்சத்தின் பின் காற்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) நாள்தோறும் பள்ளி சென்று, பாடம் படிக்க வேண்டும்.

6) கடிதத்தில், 'அன்புள்ள ஐயா, நண்பா' போன்ற விளிகளுக்குப் பின் காற்புள்ளி இடவேண்டும். முகவரியில் வீட்டுஎண், தெருப்பெயர், முதலியவற்றுக்குப் பின் காற்புள்ளி இடவேண்டும்.

**அரைப்புள்ளி :**

அரைப்புள்ளி வரும் இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.

1) தொடர் வாக்கியங்களில் ஒரே எழுவாய்க்குப் பல பயனிலைகள் வருமிடத்தில் அரைப்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) : நான் பள்ளிக்குச் சென்றேன் ; பாடம் படித்தேன்.

2) மாறுபட்ட கருத்துக்கள் வரும் வாக்கியங்களின் இடையில் அரைப்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) நல்லோர் வாழ்வர் ; தீயோர் அழிவர்.

©KTBS Not to be re published

**முக்காற்புள்ளி :**

முக்காற்புள்ளி வருமிடங்களில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.

1) பின் வருமாறு, அவையாவன முதலிய தொடர்களுக்குப் பின் முக்காற்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) 1) பெயர்ச் சொல்லின் வகைகள் பின்வருமாறு :

2) சுவை ஒன்பது, வகைப்படும், அவையாவன் :

3) உறுப்பினர்கள் :

4) பொருள் :

2) வாக்கியத்தில் கூறிய செய்தியை விரித்துக் கூறும்போது முக்காற்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) இழந்தால் பெற முடியாதவை இரண்டு ஒன்று உயிர் மற்றொன்று மானம் :

**முற்றுப் புள்ளி :**

முற்றுப் புள்ளி வரும் இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.

1) வாக்கியங்களில் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

(எ-டு) இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார்.

2) சொற் குறுக்கங்களில் முற்றுப் புள்ளி இடவேண்டும்.

(எ-டு) கி.மு., கி.பி., பி.எ., எம்.ஏ.,

**வினாக் குறி :**

வினாவாக வரும் வாக்கியங்களின் முடிவில் வினாக்குறி இடவேண்டும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும் :

(எ-டு) திருக்குறள் படித்தாயா ?

நீ என்ன செய்கிறாய் ?

Not to be re published ©KTBS

**உணர்ச்சிக் குறி (ஆச்சரியக்குறி) :**

உணர்ச்சிக் குறி வரும் இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும். மகிழ்ச்சி, வியப்பு, வாழ்த்து, அச்சம், இரக்கம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் இறுதியில் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

(எ-டு) நமது பள்ளிக்கு வெற்றி ! வெற்றி ! - மகிழ்ச்சி

ஓவியம் எவ்வளவு அழகாய் இருக்கிறது ! - வியப்பு

பாம்பு ! பாம்பு ! - அச்சம்

குஜராத் நில நடுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்தனரே ! - இரக்கம்.

**மேற்கோள் குறி :**

1) நேர் கூற்றாக எழுதப்படும் வாக்கியங்களில் முன்னும் பின்னும்.

2) பிற மொழிகளைக் கூறும்போதும்.

3) பிறர் சொன்னதை மேற்கோளாகக் காட்டும்போதும்.

இரட்டை மேற்கோள் குறி கூடவேண்டும்.

(எ-டு) 1) ஆசிரியர், ‘‘நீ படி’’ என்றார்.

2) ‘‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’’ என்பது

3) பாரதியார், ‘‘உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வேம்’’ என்றார்.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be re published